# பொருளியல் நோக்கு

மலர் 13 இதழ் 7 அக்டோபர் 1987

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்

நிகழ்ச்சிக்குறிப்பேடு 2 ஆகஸ்ட் 1987
விவசாயம் 14 நெல்லுற்பத்தி வீழ்ச்சியும் அதன் விளைவுகளும்
மாணவர் பக்கம் 32 அபிவிருத்தி என்றால் என்ன?

## விசேஷ அறிக்கை

3 கைப்பணிப் பொருட்கள்
7 கைப்பணிப் பொருட்களும் பொருளாதாரமும்
9 ஆசியக்கலையின் போர்துப்பாரம்பரியம்

## சிறப்புக் கட்டுரைகள்

டேவிட் வின்டர் 15 தனியார் மயமாக்கலில் பிரிட்டனின் முன்மாதிரி
ஜெப்ரி ஸ்கொட் ஜெக்குவின் மஸ்ஸா 18 சேவைகளிலான வியாபாரமும் வளர்முக நாடுகளும்
இந்திரஜித் குமாரசுவாமி 25 சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் தொழில்வாய்ப்புக் கொள்கைகள்

## அடுத்த இதழில்

★ வரவு செலவுத்திட்டம் 1988 - வரவு செலவுத்திட்டத்துக்குப் பின்னணியில் இருந்த அணுகுமுறை, அதன் வருமான, செலவு தொடர்பான பிரேரணைகளின் தாக்கம் என்பனபற்றிய ஒரு கலந்துரையாடல்

★ சுற்றுலாத்துறை - இலங்கை நிலையும் உலகளாவிய போக்குகளும்

★ பொது நிர்வாகத்தின் குறைபாடுகள்

★ 1987 ல் இலங்கையின் பொருளாதாரம்

அட்டைப்படம்
வடிவமைப்பு: சேபாலிக்கா பெர்னன்டோ

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**ஆகஸ்ட்**

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் - சுட்டெண் ஆகஸ்ட் 1987 ல் 658.1 புள்ளிகள் என குடிசனக் கணிப்பீட்டு, புள்ளிவிவர திணைக்களம் அறிவித்தது. இது ஜூலை 1987 ல் 653.3 புள்ளிகளாகவும், ஆகஸ்ட் 1986 ல் 611.0 புள்ளிகளாகவும் இருந்தது.

மகாவலி வலது கரையின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்ட அமைப்பை ஐரோப்பிய பொதுச்சந்தை நிதிப்படுத்துமென அத்தாபனம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. பொதுச்சந்தை அமைப்பின் வளர்முக நாடுகளுக்கான நிதி, தொழில் நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்நிதிப்படுத்தல் கொடை 351475 அ. டொலர் பெறுமதியானதாகும்.

4. இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் உணவு உதவி வழங்க ஐரோப்பிய பொதுச்சந்தை அமைப்பு தீர்மானித்துள்ளது. இந்தியா 12,000 தொன் பால் மாவையும், 4000 தொன் பாலெண்ணெய்யையும் பெற்றுக்கொள்ளும். பங்களாதேஷுக்கு 1987 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 150,000 தொன் தானியங்களும் 2000 தொன் உண்ணத்தக்க எண்ணெய்யும் வழங்கப்படும்.

6. இரானுக்கும் சீனாவுக்கும் இடையிலான வருடாந்த வர்த்தகத்தை 30 கோடி டொலர்களிலிருந்து 50 கோடி டொலர்களாக அதிகரிப்பதற்கு இரு நாடுகளும் டெஹ்ரானில் இணங்கியிருப்பதாக இரானின் தேசிய செய்திஸ்தாபனம் அறிவித்தது.

ஒபெக் நாடுகளின் மொத்த எண்ணெய் உற்பத்தி ஜூலை 1987 ல் நாளொன்றுக்கு 16 லட்சம் பீப்பாக்களை மிஞ்சி விட்டதென்றும், இக்காலத்துக்கான உச்சமட்ட உற்பத்தி நிர்ணய இலக்கு நாளொன்றுக்கு 16 லட்சம் பீப்பாக்கள் என்றும் பாரிசில் அமைந்துள்ள சர்வதேச வலு முகவராண்மை அறிவித்தது. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான தாபனத்தில் அங்கம் வகிக்கும் 24 கைத்தொழில் நாடுகளின் சராசரி எண்ணெய் கையிருப்பு ஜூன் இறுதியில் 97 நாட்களுக்குப் போதுமானதாக இருந்ததென சர்வதேச வலு முகவராண்மை நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

12. முன்னோடித் திட்டமொன்றாக 500 விவசாய கிணறுகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், இக்கிணறுகளுக்குத் தேவையான நீர்க்குழாய்கள், பொருத்து உபகரணங்கள் என்பவற்றுக்கு 50% மானியம் வழங்கப்பட வேண்டுமென்றும் விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவொன்றுக்கு அரசாங்க அங்கீகாரம் வழங்கப்பட்டது.

12. பீ. எல். 480 தலைப்பு 1 ன் கீழ் 1987 ஐக்கிய அமெரிக்க நிதியாண்டில் வழங்கப்படும் கடன் தொகையை 7 லட்சம் டொலர்களாக அதிகரித்துக் கொள்வதற்குரிய விதத்தில் பீ. எல். 480 தலைப்பு 1 க்கான திருத்தமொன்றில் கைச்சாத்திடுவது தொடர்பான நிதியமைச்சரின் முன்மொழிவினை அரசாங்கம் அங்கீகரித்தது. இலங்கையில் தற்போது நிலவிவரும் வறட்சி காரணமாகவே இவ்வதிகரிப்பு செய்யப்பட்டது. இழந்த தானியக் கையிருப்பையும், உணவு உற்பத்தியையும் ஈடு செய்வதற்கு இவ்வுதவி பயன்படுத்தப்படும். வறட்சி நிவாரணப் பணிகளிலும் இது செலவிடப்படும்.

ஒரு யப்பானிய யென் கடன், இரு கொடைகள் தொடர்பான பத்திரங்கள் கொழும்பு வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்தில் இலங்கை, யப்பான் வெளிநாட்டு அமைச்சர்களுக்கு முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டன. சமனலவெவ நீர் மின்வலுச் செய்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை அமுல் செய்வதற்கென 267.7 கோடி ரூபாவையும், கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புத் திட்டம் கட்டம் III க்கென 37.6 கோடி ரூபாவையும், பண்டங்களை வாங்குவதற்கென 67.3 கோடி ரூபாவையும் ஜப்பான் கடன் நிதியாக வழங்கும். கிடைக்கும் மொத்தத் தொகை 372.6 கோடி ரூபாவாகும். திட்டக்கடன்கள் 30 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருப்பதுடன் 10 வருட தாட்சண்ய காலத்தையும் கொண்டிருக்கும். அவற்றுக்கான வருடாந்த வட்டி 2.7 சதவீதமாகும். பண்டக்கடன் 7 வருட தாட்சண்ய காலத்தை உள்ளடக்கி 25 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருப்பதுடன், அதற்குரிய வருடாந்த வட்டி 2.75 சதவீதமாகும். இவ்விருவகை கடன்களுக்குமான வட்டி வீதம் 1986 ன் 3.25 சதவீதத்திலிருந்து இவ்வருடத்தில் 2.75 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சமனலவெவ நீர் மின்வலுச் செய்திட்டத்தின் மொத்தச் செலவு 1150 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

20. கனடா அன்பளிப்பாக வழங்கிய 53,900 மெ. தொ. கோதுமையை ஏற்றி வந்த கப்பல் திருகோணமலை துறைமுகத்தை அடைந்தது. மேற்குக் கனேடிய சிவப்பு இனத்தைச் சேர்ந்த இக்கோதுமையின் பெறுமதி 80 லட்சம் அமெரிக்க டொலராகும். கனடா இலங்கைக்கு வழங்கும் அபிவிருத்தி உதவியின் ஒரு பகுதியாக கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை இவ்வுணவு உதவியை வழங்குகிறது. இக்கோதுமையை விற்பதன் மூலம் கிடைக்கும் பணம் ஒரு நிதியில் வைப்பிலிடப்பட்டு அபிவிருத்திச் செய்திட்டங்களின் உள்ளூர் செலவுகளுக்கும், வறட்சி நிவாரண உதவிக்கும் பயன்படுத்தப்படும்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட இருபக்க கெவுடா உடன்படிக்கையை அடுத்து தாய் கெவுடா வர்த்தகர்கள் 1 கோடியே 40 லட்சம் ரூபாவை இங்கு அனுப்பியிருக்கிறார்கள் என நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இப்பணம் தாய் வர்த்தகர்கள் இலங்கை இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் கெவுடா விற்பனைப் பிரிவிலிருந்து கெவுடா கற்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும். உள்ளூர் வர்த்தகர்கள் தமது கெவுடா கற்களை கெவுடா வர்த்தகப் பிரிவுக்கு கொண்டு வருவதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் நிதியமைச்சு அவர்களது விற்பனைகளுக்கு வரி விலக்குகளை வழங்கியுள்ளது.

21 இலங்கை கனேடிய அரசாங்கங்கள் நிதி, திட்டமிடல் அமைச்சில் இரு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டன. மகாவலி தொழில் நுட்ப உதவிச் செய்திட்டத்தையும், விவசாய விஸ்தரிப்பு பயிற்சி நிலையச் செய்திட்டத்தையும் அமுல் செய்வதற்கென 18.7 கோடி ரூபா (83 லட்சத்து 50 ஆயிரம் கனேடிய டொலர்) கொடையொன்று வழங்கப்படும். மகாவலியின் நில, நீர் வளங்களை திறமையான விதத்தில் பயன்படுத்தும் திறன்களை மகாவலி அதிகார சபை பெற்றுக்கொள்வதற்கு உதவும் வகையில் தொழில் நுட்ப உதவித்திட்டத்தின் கீழ் 49 லட்சத்து 50 ஆயிரம் கனேடிய டொலர்கள் வழங்கப்படும். இரண்டாவது கொடையான 34 லட்சம் கனேடிய டொலர்கள் விவசாய விஸ்தரிப்புச் சேவைகள் நிலையமொன்றை அமைப்பதற்காக பயன்படுத்தப்படும். அரலகன்விலையில் அமைய இருக்கும் இந்நிலையம் மகாவலி 'பீ' வலயத்தின் குடியேற்றவாசிகளுக்கு - குறிப்பாக விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு - முன்னோடிப் பயிற்சித் திட்டங்களை வழங்கும்.

> ''ஒரு கலாசார வடிவம் என்ற வகையில் கலை முதனிலையான முக்கியத்துவத்தை வகிக்கிறது. அது உழைப்புக்கு மகத்துவமளித்து, மனிதனின் கருத்துக்களை உயிர்ப்புடன் வெளிக்காட்டுகிறது. இவ்வுலகின் புறத்தோற்றம் மெய்யானதாக இருந்தாலும் சரி, மாயையானதாக இருந்தாலும் சரி, மனிதனுக்கும் உலகுக்குமிடையே ஒரு தொடர்பிருக்கும் வரையில் அத்தொடர்பினை உயிரோட்டத்துடன் சித்தரிப்பதற்கு ஏதாவது ஒரு வகையான கலை தேவையாயிருக்கும். பாவனைப் பொருட்களை அலங்கரிக்கும் கலைக்கும் கட்டடக் கலைக்கும் மட்டுமன்றி தெய்வீக அம்சங்களை வெளிப்படுத்தும் புனிதமான கலைக்கும், இலட்சியரீதியான கலைக்கும் கூட இது பொருந்தும். கலை என்பது கலாசாரத்தின் இன்றியமையாத ஒரு கூறாகவும், உன்னதமான நாகரிகத்தின் பிரிக்க முடியாத, இரண்டறக் கலந்த ஓர் அங்கமாகவும் மிளிர்கிறது. அன்றாடப் பாவனைப் பொருட்களில் காணப்படும் கலைஞனின் கைவண்ணம், ஒரு புறம் ஆத்மார்த்தமான மனித உழைப்புக்கும், மறுபுறம் உண்பதற்காக மட்டுமே மனிதன் வாழவில்லை என்பதற்கும் சான்று பகர்கின்றது.''

மத்தியகால சிங்களக்கலை
ஆனந்தா குமாரசுவாமி



# கைப்பணிப் பொருட்கள்

கைப்பணிப் பொருட்கள், ஒரு நாட்டின் கைப்பணிக்கலைஞர்களது கலைத்திறனதும் படைப்பாற்றலினதும் தெளிவான வெளிப்பாடு என்று கருதப்படுகிறது; அன்றியும் அது ஒரு நாட்டு மக்களுக்கே உரியதான வாழ்க்கைமுறை, சூழல், அவர்களின் வரலாறு, கலாசாரம் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது. முன்னைய காலங்களிலே கைப்பணிக் கலைஞர்கள் உருவாக்கிய பொருட்களிற் பல அவர்களின் நாளாந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக உற்பத்தி செய்யப்பட்டணவெனினும், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பல அலங்கார, பாவனைக்குரிய பொருட்கள், இருபத்தைந்து நூற்றுண்டுகள் பழைமையான கலைத்துறை ஆக்கமுயற்சியின் உச்ச கட்டமாகக் கொள்ளப்படுகிறது. அத்துடன் கைப்பணிக் கலைஞர்களின் இன்றைய நிலை பற்றி ஆராய்கின்றபொழுது, கைப்பணித் தொழிலானது, அது தோன்றி வளர்ந்த, கைப்பணியாளர்களின் சேவை அத்தியாவசியமாக இருந்த மானிய சமுதாயத்தின் போட்டி குறைந்த சூழலுக்குப் பொருத்தமானதல்லவா என்ற கேள்வி பொதுவாக எழுப்பப்படுகிறது. இருபதாம் நூற்றுண்டில் குறிப்பாக சென்ற சில தசாப்தங்களில் தோன்றிய நவீனமயமாக்கல், கைப்பணிக்கலைஞர்களின் பிழைப்புக்கு வாய்ப்பளிக்கவில்லை. தாம் பிறந்த தொழிலான கைப்பணித் தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டகலைஞர்கள், தம் தொழிலுக்கு புது வழியையும் புதிய பொருளையும் தேடிக் கொள்ள வேண்டியதாயிற்று. பேராசிரியர் திலகசிரி கூறுவதுபோன்று "அண்மைக்காலங்களில் நாட்டின் அபிவிருத்தியின் மாற்றங்கள் விரைவாக இடம் பெற்ற பொழுது கைப்பணிக் கலைக்கு ஒரு புதுக் கருத்துக்கொடுக்கப்பட்டு, அவற்றின் விற்பனை வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன." சமூகத்தின் மாறும் தேவைகளுக்கேற்ப, கைப்பணிப் பொருட்களின் பயன்பாட்டு அம்சத்தினை ஏற்கும் அதே வேளையில் அவற்றின் கலைப்பண்பினைப் பேணி தம் படைப்புகளை உருவாக்குவதற்கு கைப்பணிக் கலைஞர்கள் போதிய ளவு நெகிழ்ந்தன்மையுடையோர்

ராக இருந்தனர் என்பது காணப்பட்டது. இதன் காரணமாகத்தான் இந்தியா, தென்கொரியா, தாய்வான், மெக்சிக்கோ, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில், கைப்பணித்துறை அந்நாடுகளின் சமூகங்களிலும் பொருளாதாரத்திலும் ஒரு முக்கிய நிலையினைத் தொடர்ந்து வகித்துவருகின்றன.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் அந்நாட்டின் கைப்பணிப் பொருட்கள் அண்மைக் காலத்தில் நியாயமான அளவு முன்னேற்றம் அடைந்திருத்தலைக் காணலாம். இந்நிலையினை பூனே எனும் இடத்தைச் சார்ந்த ஓர் அபிவிருத்தி ஆலோசகரான கிருஷ்ணன் சே. தைமினி என்பவர் அண்மையில் ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார். 1955 முதல் 1985 வரையிலான மூன்று தசாப்தங்களில் இந்தியக் கைப்பணி உற்பத்திப் பொருட்களின் பெறுமானம் 80 இலட்சம் அமெரிக்க டொலர்களிலிருந்து 300 கோடி டொலர்களாக அதிகரித்தது என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்; அதேவேளையில் ஏற்றுமதிச் சம்பாத்தியம் 80 இலட்சத்திலிருந்து 140 கோடி டொலராக அதிகரித்தது. மேலும், 1955 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியத்துக்கு உதவிய தொகை பொருட்படுத்தத்தக்கதாக இருக்கவில்லை. ஆனால், 1985ல் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் கைப்பணித் துறையின் பங்கு 18 சதவீதமாக இருந்தது. ஏறத்தாழ இந்திய மொத்த ஏற்றுமதி வருமானத்தில் இது ஐந்திலொரு பங்காகும். இதனோடு இலங்கையின் கைப்பணித் துறையின் நிலையை ஒப்பு நோக்குதல் பயனுடைத்தாகும். 1983-1987 காலப் பிரிவுக்கான தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின்படி, ''வெளிநாட்டு வர்த்தகத்தில் கைப்பணிப் பொருட்களின் இடம் இதுவரை பொருட்படுத்தத்தக்கதாக இருக்கவில்லை. ஆனால், எதிர்காலத்தில் அவை, வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்திற்கான ஏற்றுமதிப் பொருட்கள் என்ற வகையில் மிகச் சிறந்த வாய்ப்புக்களுடையனவாக விளங்குகின்றன.''

புள்ளிவிப்ரங்கள் இல்லாமை, இலங்கைக் கைப்பணிப் பொருட்களின் உற்பத்தியளவு, திறன், ஏற்றுமதி என்பவற்றைத் தீர்மானிப்பதில் பெருந் தடங்கலாகவுள்ளது. பரந்த அடிப்படையிலான உத்தியோக முறையான மதிப்பீட்டின்படி எல்லா மூலங்களிலிருந்தும் செய்யப்படும் ஏற்றுமதியானது, லக்சலாவினதும் சிறு கைத்தொழில் திணைக்களத்தினதும் ஏற்றுமதியைவிட இருமடங்காகும். உற்பத்தியின் பெறுமானம், ஏற்றுமதியின் பெறுமானத்தை விட இருமடங்காகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வடிப்படையில் இலங்கையிலிருந்து பின்வருமாறு கைப்பணிப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது: 1978ல் 80 இலட்சம் ரூபா: 1979ல் 60 இல. ரூபா; 1980ல் 1 கோடி ரூபா; 1981ல் 1.4 கோடி ரூபா; 1982ல் 90 இல. ரூபா; 1983ல் 40 இல. ரூபா; 1984ல் 50 இல. ரூபா; 1985ல் 60 இல. ரூபா. சிறு கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி, 1978-82 ஆண்டுகளுக்கிடைப்பட்ட ஐந்தாண்டுக் காலத்தில் மொத்தவுற்பத்தி 1978ல் 80 இல. ரூபா; 1980ல் 2.1 கோடி ரூபா; 1981ல் 2.8 கோடி; 1982ல் 1.8 கோடி; 1983ல் இது மீண்டும் வீழ்ச்சியுற்றது.

இவ்வீழ்ச்சிக்கு நவீனமயமாக்கல் மட்டும் காரணமன்று; வேறு பல காரணங்களுமுண்டு. கைப்பணிக் கலைஞர்கள் தம் தாழ்ந்த உற்பத்தித் திறனைக் கொண்டு, ஒழுங்குற அமைக்கப்பட்ட கைத்தொழில் தாபனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. ஆதலால் விலைகளைப் பொறுத்தவரையில் பெருந் தொகையாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களுடன் அவர்கள் போட்டியிட முடிவதில்லை. திறமான தரங்களைப் பேணுவதிலும் அவர்களுக்குச் சங்கடங்களுண்டு. வடிவமைப்புக்களைத் திருத்துவதற்கு ஏற்றவகையில் தொழினுட்பத்தை விருத்தி செய்யவும் முடிவதில்லை. சந்தையோடு நம்பத்தக்க தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் அவர்கள் கஷ்டப்படுகின்றனர். இலங்கைக் கைப்பணிக் கலைஞர்களின் பிரச்சினைகள் பற்றி பல ஆய்வுகள் நடாத்தப்பட்டு, முக்கியமான தடைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் மூலப்பொருள் தட்டுப்பாடு; வடிவமைப்பு அறிவு; தொழினுட்பம்; முகாமைத்திறன், கடன்வசதி, சந்தைப்படுத்தல், அரச உதவி என்பன இல்லாமை ஆகியவை முக்கியமானவையாகும்.

இக்காரணங்களின் நிமித்தமே, கைப்பணிப் பொருட்களின் உற்பத்தித்திறனும், உள்நாட்டு, ஏற்றுமதிச் சந்தையும் முழுமையாகப் பயன்படுத்தாமல் விடப்பட்டுள்ளன. அத்துடன் பயன்பாட்டுக்குரிய கைப்பணிப் பொருட்கள் சில ஒழிந்துவிட்டன. மற்றும் சில ஒழியும் நிலையிலுள்ளன. இக்கட்டத்தில், எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கேற்ற சில கைப்பணிகள் தெரிவு செய்யப்பட்டு, இத்துறைக்குப் பொதுவாக புத்துயிரூட்டி, அரச உதவியளிக்கத்தக்க வகையில் கொள்கை நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

சில வகைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் குறித்த சில பிரதேசங்கள் விசேட நிலைமை அடைந்துள்ளன. மூலப் பொருட்கள், விசுவாசமான ஆதரவு, இவற்றிற்கான தேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்விசேட நிலை அடையப் பெற்றுள்ளது. இலங்கையில் கைப்பணிப் பொருட்களை வகைப்படுத்த வசதியான ஓர் அடிப்படை மூலப் பொருட்களும் கூடிய தேவையுமாகும். இவ்வகைப்பாடுகளில் பித்தளை, வெள்ளிப்பாத்திரங்கள், புடவை வகைகள், பத்திக், பின்னற் பட்டி, மரச் செதுக்கல்கள், பிற

# இலங்கையின் கைப்பணிப் பொருட்கள்

ஏனைய ஆசிய நாடுகளைப் போலவே இலங்கையும் கைப்பணிப் பொருட்கள் குறித்த ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. நாட்டின் கலாசார வரலாற்றில் இக்கலைப் பொருட்கள் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அண்மைய வருடங்களில் நாட்டின் அபிவிருத்தி ஒரு புதிய உத்வேகத்தைப் பெறத் தொடங்கியிருப்பதனால் கைப்பணிப் பொருட்கள் மேலும் அர்த்தபுஷ்டியான ஒரு நிலையை அடைந்திருப்பதுடன், அவற்றின் சந்தை வாய்ப்புக்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், கைப்பணிப் பொருட்களானவை அவ்வளவுக்கு அத்தியாவசியமானவையல்ல என்றும் அவை கலைப்பிரியர்களுக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கும் மட்டுமே பெறுமதி வாய்ந்தவை என்றும் பொதுவாக பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

'கைப்பணிப் பொருட்கள்' என்றால் என்ன? அவை கைகளினால் புனையப்பட்ட பாரம்பரிய பெறுமதிமிக்க பொருட்களாகும். அவற்றில் கலைத்திறனும், அழகியல் பெறுமானமும் காணப்பட்டாலேயொழிய கையினால் புனையப்படும் சகல பொருட்களும் கைப்பணிப் பொருட்களாக முடியாது. எனவே, கைப்பணிப் பொருட்களானவை, வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட பாரம்பரியமொன்றை உயிர்த்துடிப்புடன் சித்தரிக்கும் கலைப்படைப்புக்களாக கருதப்படுகின்றன. பாவனைக்காக மட்டும் செய்யப்படும் ஏனைய பொருட்களிலிருந்து இவற்றை வேறுபடுத்திப்பார்க்க வேண்டும்.

கைப்பணிப் பொருட்கள் தமது மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை வெளிக்காட்டுபவையாக இருப்பதனால் உலகின் சகல கலாசாரங்களும் இப்படைப்புக்கள் குறித்து பெருமை கொள்கின்றன. சாதி அமைப்பினாலும், கட்டாய சேவை முறையொன்றினாலும், பாரம்பரிய வேலை பயிலும் மாதிரியொன்றினாலும் கலைஞர்களும், கைத்திறன் பெற்றிருந்தோரும் பிணிக்கப்பட்டிருந்த சமூக அமைப்புன்றுக்குள்ளேயே மத்திய காலத்தில் 'கண்டியக்கலை' என்றழைக்கப்படும் அதிகாரபூர்வமான சிங்களக்கலை மலர்ச்சியுற்றது. கண்டியப் பிரதேசங்களிலேயே இது நன்கு பாதுகாக்கப்பட்டிருப்பதனால் 'கண்டியக்கலை' என அழைக்கப்படுகிறது. வர்ணம் பூசுவோர், பொற்கொல்லர், வெள்ளி வேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர், பித்தளை வேலை செய்வோர், கல், உலோகம், மரம் என்பவற்றில் செதுக்கு வேலை செய்வோர், பறையடிப்போர், சங்கு ஊதுவோர், பாடகர்கள், நெசவாளர், குயவர் என்போர் அவர்களது சாதிகளின் தரத்துக்கேற்ப வகைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த ஒவ்வொரு பிரிவினரும் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் வரையறுக்கப்பட்டிருந்தன. தமது சேவைகளுக்கான கொடுப்பனவுகளை பொருள் மூலமும், பட்டம், அந்தஸ்து வழியாகவும் இவர்கள் பெற்றுக் கொண்டதுடன் அவர்களது நற்பணிகளுக்கு நிலமும் வழங்கப்பட்டது. இந்த இறுக்கமான சமூக அமைப்பில் ஒவ்வொரு தொழிலைச் செய்வோரும் தமது தொழிலுக்குத் தேவையான திறன்களையும், உத்திகளையும் தங்களது மூதாதையரிடமிருந்து தலைமுறை தலைமுறையாகப் பெற்றுக் கொண்டனர். இவர்கள் கௌரமிக்க தொழில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்ததுடன் சமூகத்தின் சகல பிரிவினருக்கும் பொருட்களையும் சேவைகளையும் வழங்கினர்.

ஒவ்வொரு கலையையும் பற்றி தனித்தனியாக விளங்கிக் கொள்வதற்கு அவை தோற்றம் பெற்ற பிரதேசத்தின் பின்னணியில் அவற்றைப் பரிசீலனை செய்தல் பொருத்தமுடையதாகும். உள்ளூர் மக்களின் தேவைகளைப் பொறுத்தும், அவர்கள் பெற்றிருந்த தேர்ச்சிகள், அவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக இருந்த மூலப் பொருட்கள் என்பவற்றைப் பொறுத்தும் கைத்திறன் பொருட்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. அரச அனுசரணையும், உயர்குடி மக்களின் ஆதரவும் இக்கலைஞர்களை நீடித்து நிலைக்கச் செய்தன. புடவைகள், ஆபரணங்கள், வர்ண ஓவியங்கள், கல் அல்லது மரவேலை, மட்பாண்டம், கைத்தறிப் பொருட்கள் போன்ற சகல பிரிவுகளிலும் மிக அரிதான அழகியல் படைப்புக்களை இக்கலைஞர்கள் உருவாக்கினர். கண்டியக்கலைஞர்கள் தங்கம், வெள்ளி, தந்தம், பித்தளை என்பவற்றை கலாபூர்வமான படைப்புக்களாக உருவாக்குவதில் எவ்வாறு தேர்ச்சி பெற்றிருந்தார்களோ அதே போல நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் வாழ்ந்த கலைஞர்கள் தமக்கு கிடைக்கக் கூடியதாயிருந்த மூலப் பொருட்களைக் கொண்டு அரிய பல பொருட்களைப் புனைந்தனர். ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு பொருளுக்கு புகழ் பெற்றிருந்தது. கண்டியின் வெள்ளி, காலியின் சரிகை, களுத்துறை கூடைகள், ஹேனவல பாய்கள் என்பவற்றை உதாரணமாக கூறலாம்.

கைப்பணிப் பொருட்களின் இன்றைய நிலையை ஆராயும் ஒருவர், ஒரு கொள்வனவாளர் என்ற முறையில் சுற்றுலாப் பயணிகளின் முக்கியத்துவத்தையும், சந்தைப்படுத்தக்கூடிய ஒரு பண்டம் என்ற விதத்தில் ஏற்றுமதி வாய்ப்புக்களையும் புறக்கணித்துவிட முடியாது. சுற்றுலாப்பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியை அடுத்து கைப்பணிப் பொருள் கைத்தொழில் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. இத்துறையில் வேலை செய்தோர் யாவரையும் இது நேரடியாக பாதித்ததுடன் அவர்களது சம்பாதிப்பு ஆற்றல்களைக் கணிசமான அளவில் குறைத்துவிட்டது. தமது முன்னோர்களின் நிலைமைக்கு மாறாக, இன்றைய கைப்பணித்தேர்ச்சி பெற்றோர் ஒரு பணப் பொருளாதாரமொன்றுக்குள் இயங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். உள்நாட்டுச் சந்தைக்கும், முடியுமான வரையில் ஏற்றுமதிச் சந்தைக்கும் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு வேளை இந்நிலைமை அவர்களைத் தூண்டக்கூடும். அழகியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இவ்வுற்பத்திகள் இருக்க வேண்டிய அதே நேரத்தில் போட்டி போடக்கூடியவையாகவும், வெவ்வேறு ரசனையுணர்வுகளைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவும் அவை இருக்க வேண்டும்.

ஜே. திலகசிரி

மரப்பொருட்கள், பிரம்பு, தென்னஞ் சிரட்டைப் பொருட்கள், பறைகள், இசைக் கருவிகள், பண், மூங்கிற் பொருட்கள், சூழ் பொருட்கள், மட்பாண்டங்கள், தும்புப் பொருட்கள், ஆமையோடு, கொம்பு, யானைத்தந்தப் பொருட்கள், களிமண், பீங்கான் பொருட்கள் என்பன அடங்கும்.

'கைப்பணிப் பொருட்கள்' என்பது, குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் கைத்திறமையினால் செய்யப்படும் ஓரளவு பயன்பாடும் உயர்ந்த அழகியற் கலைப் பெறுமானமும் உள்ள பொருட்களைக் குறிப்பதற்கே பொதுவாகப் பிரயோகிக்கப்படுகிறது. பல்லாண்டுகளாக வளர்ந்து வந்துள்ள கைப்பணித் தொழில்களை இரு கூறுகளாகப் பிரிக்கலாம்: பெறுமதிமிக்க கலைப் பெறுமானமுள்ள தனித்தனி உருப்படிகள் (இரத்தினக்கற்கள், நகைகள், வெள்ளியினாற் செய்த பொருட்கள் போன்றவை). இவற்றைச் செல்வம் படைத்தவர்கள் வாங்குகின்றனர். மற்றையது பயன்பாட்டு பெறுமதியுடையவை. ஒவ்வோர் உருப்படியும் குறைந்த பெறுமான முடையது.

(பன்னை, பண் பொருட்கள், மட்பாண்டங்கள், விளையாட்டுப் பொருட்கள், மரப்பொருட்கள். இவற்றைக் குறைந்த வருமான முடையோர் வாங்குகின்றனர்).

குடிசைக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் அலங்காரப் பொருட்களுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. தொடக்கத்தில் பயன்பாட்டுக்குரிய எல்லாப் பொருட்களும் குடிசைக் கைத்தொழில் மூலமே செய்யப்பட்டன. ஆனால், உற்பத்தித் துறைக்கு எந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்தும் தொழிற்சாலை மட்டத்தில் இப்பொருட்களின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதிலிருந்தும் குடிசைக்கைத்தொழிற் பொருட்கள் ஏதோ விசேட தன்மையுடைய பொருட்களாகக் கருதப்பட்டன. அவை தனித்தன்மை கொண்ட கலாசார உருவங்களாகக் கொள்ளப்பட்டன. அதனை உருவாக்கும் கலைஞனின் ஆளுமை அப்பொருளின் முக்கியதோர் அம்சமாகக் கருதப்பட்டது. இவ்வகையில் சிந்திக்கையில் கைப்பணியின் மூலம் பொருளாதார அபிவிருத்தி பற்றிச் சிந்தித்தல் அர்த்தமற்றதென வாதிக்கப்படுகிறது. குறித்த மூலப் பொருட்களும் திறமைகளும் உள்ள பல மூன்றும் உலக நாடுகளில், குடிசைக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்தல் இன்றும் சர்வ சாதாரணமாகக் காணப்படுவ தொன்றாகும். இலங்கையிலும் கூட கைப்பணியானது, கைத்தொழில் துறையின் முக்கியமானதோர் அம்சமாக விளங்குகிறது. கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களில் அதற்கு முக்கிய இடம் அளிக்கப்படுகிறது. அதற்கு வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்கும் திறனுண்டு எனக் கருதப்படுகிறது. எவ்வாறாயினும் சென்ற சில காலமாக இயந்திரங்களைக் கொண்டு பொருட்கள் பெருந்தொகையாக உற்பத்தி செய்யப்படுவதால் கைப்பணிப்பொருட்கள் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக வனைதற்றொழிலும் மட்கலங்களும் இருந்த இடத்தை அலுமினிய, உலோகப் பாத்திரங்கள் பிடித்துள்ளன. அதே போன்று பிளாஸ்டிக் பொருட்களும் மட்கலங்கள் பன்னைப் பொருட்களுக்குப் பதிலாகப் பாவனைக்கு வந்துள்ளன.

பொற் கொல்லர்கள் கூட, பெருந்தொகையாக உற்பத்தியாகும் செயற்கை நகைகளுக்கு இடமளிக்க வேண்டியதாயிற்று. இதன் விளைவாகக் கைப்பணிக் கலைஞர்கள் தொழிற்சாலைகளில் சேர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று அல்லது தம் பாரம்பரிய தொழில்களைக் கைவிட்டு வேறு தொழில்களைத் தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. அவர்களின் பிள்ளைகளும் பாரம்பரியத் தொழிலைத் தொடர்ந்து செய்வதில் பயனில்லை என்று கண்டனர். இதனால் தொழிற்பயிற்சித் தொடர்பு அறுந்துவிட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அரசாங்கம் குடிசை, கைப்பணித் தொழில்களின் நிலை பற்றிக் கவனஞ் செலுத்தத் தொடங்கியது. 1950, 1960 ஆம் ஆண்டுத் தொடர்களில், கைப்பணிப் பொருட்கள் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது உணரப்பட்டது. கைப்பணிக், கலைஞர்களில் பலர் கமக்காரர்களாவும் இருப்பதனால் அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டே கைப்பணி வேலைகளையும் செய்கின்றனர். கைப்பணிக் கலைக்குப் புத்துயிரூட்டினால் அதன்மூலம் வேலையில்லாப் பிரச்சினையையும் போதிய வேலையில்லாப் பிரச்சினையையும் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கலாம் என்பதை அரசாங்கம் உணர்ந்தது.

வெளிநாட்டு வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டதனால் வெளிநாட்டுப் பொருட்கள் தாராளமாக இங்கு வந்து குவிந்ததோடு உள்நாட்டுக் கைப்பணிப் பொருட்களின் பிரதியீடுகளான இறப்பர், பிளாஸ்டிக் பொருட்களும் வரத்தொடங்கின. இப்பொருட்கள் பல வகையில் உள்ளூர் கைப்பணிப் பொருட்களுடன் போட்டியிட்டன. அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் மட்கலப் பாத்திரங்கள் போன்ற பொருட்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தன. அத்துடன் 1983 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்ததனால், சுற்றுலாத்துறையில் கைப்பணிப் பொருட்களுக்கிருந்த தேவையும் வெகுவாகக் குறைந்தது.

சிறு கைத்தொழில் திணைக்களமே, கைப்பணித் துறையை மேம்படுத்துவதற்குப் பொறுப்பான, அரசாங்கத்துறைத் தாபனமாகத் தொடர்ந்து செயலாற்றியது. அதன் விற்பனை முயற்சிகள் 1960 ல் லக்சல கொள்வனவு, விற்பனை அமைப்பு ஏற்படுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. வர்த்தகத் திணைக்களமும் ஏற்றுமதி மேம்பாட்டு செயலகமும் சுற்றுலாச் சபையின் உதவியை ஓரளவு பெற்று 1960, 1970 ஆம் ஆண்டுத் தொடர்களில் கைப்பணிப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்பாடடையச் செய்ய உதவின. எவ்வாறாயினும், இதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குகளில் சில சங்கடங்களிருந்தன. இதனால் கைப்பணித் துறை போதியளவு கவனிக்கப்படாமலேயே இருந்தது. 1970ன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலிருந்து, அரசாங்கத் திணைக்களங்களுக்கு திட்டமிடலிலோ, அமுலாக்கலிலோ சுதந்திரமில்லாதிருப்பதும் போதிய அதிகாரமில்லாதிருப்பதுமே முக்கிய தடைக்கல்லாக இருக்கிறது என்பதும், சிறு கைத்தொழில் திணைக்களத்தின் நிலையும் இதுவாகும் என்பதும் தெரிய வந்தது. இத்திணைக்களத்திற்கு நிதித்தடங்கல்களும் இருந்தன. இதனால் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயனுள்ள வகையில் இத்திணைக்களம் பங்குபற்றக் கூடியதாக இருக்கவில்லை. எனவே, இத்திணைக்களத்திற்கு அளப்பரிய முகாமைத் தகுதியும்

## கைப்பணிப் பொருட்களும் பொருளாதாரமும்

கடந்த காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய கூருக இருந்து வந்த கைப்பணிப் பொருட்கள், சமீப வருடங்களில் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியை அடுத்து கேள்வி குறைந்தமையினுல் இப்பொழுது சற்று முக்கியத்துவம் மங்கிய நிலையில் காணப்படுகின்றன. எனினும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில் ஒன்ருக அபிவிருத்தியடையும் வாய்ப்பு இத்துறைக்கு நிறையவே இருக்கிறது. சர்வதேச தரங்களுக்கு இணையான வகையில் கைப்பணிப் பொருட்களை தரமுயர்த்தும் பல நிகழ்ச்சித்திட்டங்களை கொரியா, தாய்வான், மலேஷியா, இந்தோனேஷியா போன்ற பல ஆசிய நாடுகள் ஆரம்பித்து வைத்துள்ளன.

ஏனைய வளர்முக நாடுகளின் தரங்களுக்கு இணையான விதத்தில் எமது கைப்பணிப் பொருட்களின் தரத்தினை உயர்த்துவதெனில் ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்கள் தொழில் செறிவு மிக்கனவாக இருப்பதுடன், ஏற்றுமதிக்கான பொருட்கள் நவீன சிருஷ்டியாற்றல் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். முதலீடுகள் மீதான பிரதிபலன்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலிருப்பதால் தற்போது தொழில் முயற்சியாளர்கள் இத்துறை மீது முதலீடுகளை முடக்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். குறிப்பிட்ட சில பொருட்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அவற்றை ஏற்றுமதி செய்வதில் இப்பொழுது நன்கு ஸ்தாபிதமாகியிருக்கும் சில ஏற்றுமதியாளர்களின் அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது, இறுக்கமான தர நிர்ணயக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலமும், விவேகமான நிதிமுகாமையினுலும் புதுமை காண் நோக்கிலான கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பினை நல்க முடியுமென்பதனையும், அதிக வேலைவாய்ப்புக்களை வழங்க முடியும் என்பதனையும் காண முடிகிறது.

கைப்பணிப் பொருட்கள் கைத்தொழில் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் நன்கு உணர்ந்திருப்பதுடன், தேசிய தொழில் திறன் கவுன்சில், கைப்பணிப் பொருள் சபை, (பாராளுமன்ற சட்டமூலம் ஒன்றினுல் அமைக்கப்பட்ட) தேசிய வடிவமைப்பு நிலையம், சிறு கைத்தொழில்கள் திணைக்களம் என்பவற்றுக்கூடாக கைப்பணிப்பொருள் கைத்தொழிலையும் அதில் ஈடுபட்டிருக்கும் தொழில் கலைஞர்களையும் கைதூக்கி விடுவதற்கும், நிலை நிறுத்துவதற்கும் அது சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. உற்பத்தியின் தரத்தை உயர்த்துவதற்கு நவீன வடிவமைப்புக்களை உருவாக்குவதற்கும், வண்ணத்திலும், தோற்றத்திலும் காண்போரை வசீகரித்து இழுக்கும் புதிய படைப்புக்களை வார்த்தெடுப்பதற்கும் ஊக்கமளிக்கும் விதத்தில் கருத்தரங்குகளும், பயிற்சி வகுப்புக்களும், கண்காட்சிகளும் நடாத்தப்பட்டு வருவதுடன், விற்பனை நிலையங்கள் அமைத்துக் கொடுத்தும், மூலப் பொருள் வங்கிகளை ஸ்தாபித்தும் இத்துறையை வளர்ச்சி காணச் செய்வதற்கு சகல விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய ஆசிய நாடுகளின் கைப்பணிப் பொருட்கள் தரத்தில் தொடர்ச்சியாக விருத்தியுற்று வருவதனுல் அவற்றுடன் போட்டி போடக் கூடிய விதத்தில் எமது உற்பத்திகள் தரமாக அமைவதற்கு உதவும் வகையில் இக்கைத்தொழிலுடன் தொடர்புள்ள சகலரது முயற்சிகளையும் ஒருங்கிணைப்பதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

ஜே. திலகசிரி

அனுபவமும் இருந்த போதிலும், கைப்பணிப் பொருளுற்பத்தியின் அபிவிருத்திக்குப் போதிய ஊக்கமும் ஆக்கமும் அளிக்க இயலவில்லை. இவ்வடிப்படையிலேயே, இலங்கைக் கைப்பணிச் சபையொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டது. இச்சபையின் நோக்கம், கைப்பணிகளை அபிவிருத்தி செய்துவதும் அதற்குத் தேவையான வசதிகளை அளிப்பதும், உற்பத்தியாகும் கைப்பணிப் பொருட்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

அத்துடன் 1982 ஆம் ஆண்டின் 32 ஆம் இல. தேசிய கைப்பணி மன்றம், சார்பு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தேசிய கைப்பணி மன்றம் என்றதோர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் நோக்கங்களாவன: பாரம்பரிய தேசிய அல்லது கலாசாரப் பெறுமதிவாய்ந்த கைப்பணிகளைப் பாதுகாத்தல், கைப்பணிச் சங்கங்களை ஏற்படுத்தி கைப்பணிக் கலைஞர்களைத் தாபன ரீதியில் ஒழுங்குபடுத்துதல், கைப்பணிகளையும் கைப்பணிக்கலைஞர்களது திறன்களையும் வளர்த்தல், அவர்களின் சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்தல் என்பனவாம். தொழில் வாரித் திறமை வாய்ந்த வடிவமைப்பு நிலையம் ஒன்றும் தேவைப்பட்டது. 1983ல் இலங்கைக் கைப்பணிப் பொருட்களை விருத்தி செய்தலும் மற்ெருரு நோக்கமாக அமைந்தது.

இன்று, இத்துறையின் குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த திறனைப் பயன்படுத்தும் பொருட்டு இலங்கைக் கைப்பணிச் சபை, தேசியக் கைப்பணி மன்றம், தேசிய வடிவமைப்பு நிலையம், சிறு கைத்தொழில் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பனவுட்பட பல அரசாங்க நிறுவனங்களும் பிறவும் செயலாற்றுகின்றன. அண்மைக் காலத்தில் இலங்கைக் கைப்பணித்துறைக்குப் புத்துயிரூட்டும் பணி முற்ருக அரசாங்கத்திடம் விடப்பட்ட சூழ்நிலையில், இவ்வரசாங்க நிறுவனங்கள் இதற்குப் பரிகாரங்காண எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனுல், இத்தகைய கொள்கைகள் எதிர்பார்த்த விளைவுகளுக்கு மாருன விளைவுகளையே தோற்றுவித்துள்ளன என்பதையும் ''அரசக் கொள்கைகள் கூடிய நல்லெண்ணங்கொண்டவையாயிருக்கின்றனவேயொழிய உரிய முறையில் நெறிப்படுத்தப்பட்டவையாக இல்லை'' என்பதையும் ஆய்வுகள் காட்டியுள்ளன.

### வேலைவாய்ப்பு

கைப்பணித் துறையில் எத்தனை பேர் ஈடுபட்டுள்ளனர் என்பதைச் சரியாக மதிப்பிடுவது இலகுவானதன்று; காரணம் கைப்பணி என்பதன் கீழ் வகைப்

படுத்தப்படும் முயற்சிகள் விரிவானவை; இவை நாட்டின் தூரப் பகுதிகளில் பரவிக் கிடக்கின்றன; கைப்பணிப் பொருட்களை உற்பத்திசெய்வோர் அதனை ஒரு முழுநேர வேலையாகச் செய்வதில்லை என்பதாகும். எனினும், உத்தியோக முறையான மதிப்பீடு ஒன்றின்படி இத்தொழிலில் 1,00,000 பேருக்கு அதிகமானோர் ஈடுபட்டுள்ளனர். இவர்களிற் பெரும்பாலோர் கிராமப் புறங்களில் இருப்பதோடு இத் தொழிலையே தம் வருவாய்க்குரிய வழியாக நம்பியிருக்கின்றனர். இவ்வாண்டு ஜனவரியில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றின்படி கைப்பணித் தொழில் ஈடுபட்டுள்ளவர்களில் 55 சதவீதமானோர் அதனைப் பகுதிநேர வேலையாகவும் 45 சதவீதமானோர் முழுநேரத்தொழிலாகவும் கொண்டுள்ளனர்; 65 சதவீதமானோர் ஆண்களும் 35 சதவீதமானோர் பெண்களுமாவர்.

கைப்பணிப் பொருட்களில் 25 சதவீதமானவை ஓலையை அடிப்படையாகக் கொண்டவை; 20 சதவீதமானவை பன்னையை அடிப்படையாகக் கொண்டவை; 13 சதவீதமானவை தும்பையும், 11 சதவீதமானவை களிமண்ணையும் 5 சதவீதமானவை பித்தளையையும் அடிப்படையாகக் கொண்டவை. குறித்த ஒரு வகைக் கைப்பணித்தொழில் சில மாவட்டங்களிற் பரவலாகக் காணப்படுவதாகவும் இவ்வாய்விலிருந்து தெரியவந்தது. உதாரணமாக கண்டி மாவட்டத்தில் வேறு ஒன்பது வகைக் கைப்பணிகள் இருந்தபோதும் பித்தளைப் பொருட்களே அங்கு பிரதான இடம் வகிக்கின்றன. அம்பாந்தோட்டையில் மட்கலம் வனையும் தொழில் 79 சதவீதமாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் பனையை அடிப்படையாகக் கொண்ட கைப்பணிகள் 89 சதவீதமாகும். வவுனியாவில் பன்னை அடிப்படையாகக் கொண்ட கைப்பணிகள் 76 சதவீதமும் பனையை அடிப்படையாகக் கொண்டவை 15 சதவீதமுமாகும்; மட்டக்களப்பில் தும்பை அடிப்படையாகக் கொண்டவை 67 சதவீதமும் பன்னை அடிப்படையாகக் கொண்டவை 20 சதவீதமுமாகும். குருணாகலையில் 67 சதவீதமானவை ஓலையை அடிப்படையாகக் கொண்டவை. காலி மாவட்டம் மட்டும் இதற்கு விதிவிலக்கானதாகும். அங்கு ஒன்பது வகைக் கைப்பணிகளும் ஏறத்தாழ சம அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முயற்சிகள், அவை அமைந்துள்ள இடங்கள் என்பவற்றின் முக்கியத்துவம் கைப்பணி மேம்பாட்டுக்கான நிறுவனங்களின் பதிவுச் சுவடிகளிலும் காணலாம். இலங்கைக் கைப்பணிச் சபையின் 1985 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் 2.3 கோடி ரூபா பெறுமதியான அதன் கொள்வனவு பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பிரதான பொருட்களும் அவற்றின் பெறுமானமும் வருமாறு;

| பொருள் | ரூ. பத்து லட்சம் |
|---|---|
| வெள்ளிக்கலங்கள், நகைகள் | 4.8 |
| வெள்ளி மூலாம் பூசிய பித்தளை | 3.9 |
| மரப் பொருட்கள் | 3.8 |
| புடவை வகைகள் | 2.8 |
| கயிறு, கூழ் | 2.2 |
| பன்னை, மூங்கில், தோல் | 1.7 |
| பத்திக், பின்னல், ரேந்தை | 1.1 |
| பிற | 2.7 |

லக்சலக் கடைகள் மூலம் சபை விற்பனை செய்து பெற்ற வருமானம் ஏறத்தாழ 3.3 கோடி ரூபா. பின்வரும் இடங்களில் உள்ள லக்சல கடைகள் முக்கியமானவை:

| விற்பனை நிலையம் | ரூ. பத்து லட்சம் |
|---|---|
| கோட்டை (கொழும்பு) | 25.4 |
| கண்டி | 1.7 |
| இரத்தினபுரி | 1.1 |
| லிபர்ட்டி பிளாசா | .8 |
| காலி | .6 |
| கேகாலை | .5 |
| மாத்தறை | .5 |
| பம்பலப்பிட்டியா | .3 |
| குருணாகலை | .3 |
| களுத்துறை | .3 |
| மட்டக்களப்பு | .2 |
| ஹிக்கடுவ | .1 |
| குடாக்மை | .1 |
| நீர்கொழும்பு | .05 |
| யாழ்ப்பாணம் | .04 |
| ஏற்றுமதிகள் | 1.1 |

லக்சல கடைகளுடன் சிறு கைத்தொழில் திணைக்களமும் சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டது. லக்சல கொள்வனவு நிலையங்கள் திறக்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்று கைப்பணிக்கலைஞர்களைத் தரகர்கள் வஞ்சிப்பதைக் குறைப்பதாகும். இந்நோக்கம் பெருமளவுக்கு நிறைவேறியுள்ளது. எவ்வாறுயினும், எண்ணற்ற தனியார் தாபனங்களுடன் தனி நபர்களும் செயல்படுகின்றனர். தாபன ரீதியாக அமைந்த கலைஞர்கள், தனியார் துறைக்கும் அரசாங்கத்துறைக்கு மிடையிலான போட்டியின் பயனைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால், சிறு கலைஞர்கள் இன்னும் நடுவர்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

### கைப்பணிக் கைத்தொழிலின் முக்கியத்துவம்

பல குறைவிருத்தி நாடுகள் தமது அபிவிருத்திச் செய்திட்டங்களில் கைப்பணிக் கைத்தொழிலுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளன. பாரிய கைத்தொழில்களில் இடும் முதலீட்டின் அதே அளவை தெரிவு செய்யப்பட்ட சில கைப்பணித் துறைகளில் இடுவதன் மூலம் அதிக வேலை வாய்ப்புக்களையும், உயர் அளவிலான கிராமிய வருமான மட்டங்களையும் பெற்றுக்கொள்ள முடியுமென வாதிடப்படுகின்றது. இலங்கையில், கைப்பணிக் கைத்தொழிலின் அனுகூலங்கள் பல அறிக்கைகளில் விவரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய அனுகூலங்களாவன: கிராமியப் பகுதிகளில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய ஆற்றலும், கிராமியப் பொருளாதாரத்தை விருத்தியுறச் செய்தலும்; குறைந்த மூலதன / வெளியீட்டு விகிதமும்,

குறைந்த மொத்தச் செலவும்; உள்ளூர் பொருள் வளங்களின் உச்ச மட்டப் பயன்பாடு; மனிதச் தேர்ச்சிகளின் உச்சமட்டப் பாவனை; கிராமிய நிறுவனங்களின் அபிவிருத்தியும், கிராமிய வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடடையச் செய்வதும்.

குறிப்பாக இலங்கையைப் பொறுத்த வரையில், தற்போதைய வேலையற்றோர் வீதம் ஊழியப்படையின் ஐந்தில் ஒன்றாக இருக்கும் இன்றைய சூழலில், மேற்குறிப்பிடப்பட்ட பல அனுகூலங்கள் மிகப் பொருத்தமானவையாகும். காணிகள் மீதான நெருக்கடி தீவிரமாகவும், வேலையின்மை விகிதம் உயர்வாகவும் இருக்கும் கண்டி, மாத்தளை பிரதேசங்களிலேயே கலைசார்ந்த தொழில் திறன்கள் செறிந்து காணப்படுகின்றன. இம்மாவட்டங்களின் சில பகுதிகளில் சனச் செறிவு (கி. மீ. ஒன்றுக்கு 348 பேர்) தேசிய சராசரியை (கி.மீ. ஒன்றுக்கு 198 பேர்) விடவும் மிக உயர்வாக காணப்படுகிறது. வேலையின்மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விவசாயத்திலிருந்து கிடைக்கக்கூடிய நலன்கள் வரையறுக்கப்பட்டனவாகவே இருக்கின்றன. எனவே, இப்பிரதேசங்களில் இரண்டாந்தர பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குவது அத்தியாவசியமாகும். கிடைக்கக் கூடியதாக இருக்கும் தேர்ச்சிகள், குறைந்த முதலீட்டு மட்டம் என்பவற்றின் பின்னணியில் பார்க்கும்போது கைப்பணிக் கைத்தொழில்களே இதற்கான தெளிவான வழியாகும்.

மேற்கு கரையோர வலயத்தில் சமீப ஆண்டுகளில் ஓரளவுக்கு கைத்தொழில் மயமான கைப்பணிகள் அரச அனுசரணையுடன் விருத்தியடைந்து வந்துள்ளன. தென் பகுதிகளில் இவ்வுற்பத்தில் பொருட்கள் விரிவடைந்து கொண்டு வரும் சுற்றுலாப் பயணிகளின் சந்தைக்கு வழங்கப்படுகின்றன. போதிய ஊக்குவிப்புக்களும், சந்தை வாய்ப்புக்களும் வழங்கப்பட்டால் அதிகமானோ

## ஆசியக்கலையின் பொதுப்பாரம்பரியம்

நீண்ட நெடுங்கால வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட ஆசிய நாடுகள் பலவற்றில் கைப்பணிப் பொருள் கைத்தொழிலின் அபிவிருத்தி மிகவும் சுவாரஷ்யமான ஒரு விஷயமாகும். யுனெஸ்கோவுடன் இணைந்த வகையில் 1964ல் ஸ்தாபிக்கப்பட்ட உலக கைப்பணிகள் பேரவை - ஆசியா என்பது இலாப நோக்கற்றதும், அரசு சாராததுமான ஒரு அமைப்பாகும். கலாசார வாழ்க்கையின் அத்தியாவசிய கூறொன்றாக கைப்பணிகளின் அந்தஸ்தை நிலை நாட்டுவதும், கைத்திறன் கலைஞர்களிடையே கூட்டுறவினை ஊக்குவிப்பதும் அவர்களது வேலைப்பாடுகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதும், அறிவை வளரச்செய்வதும் இவ்வமைப்பின் பாராட்டக் கூடிய குறிக்கோள்களாகும்.

மேலும், ஆசிய நாடுகள் பலவற்றில் கைதேர்ந்த கலைஞர்களின் பல சங்கங்களும், பேரவைகளும் தாபிக்கப்பட்டுள்ளன. கலைஞர்களை ஒன்று திரட்டுவதிலும், அவர்களது சேமநலனுக்கும் தொழில் சார் அபிவிருத்திக்குமென உழைப்பதிலும் இவ்வமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. வெவ்வேறு தேசங்களில் சிதறி வாழும் இக்கைப்பணிக் கலைஞர்களை ஒன்றாகப் பிணித்துவைக்கும் பொதுப் பாரம்பரியங்களையும், பொது விழுமியங்களையும் இம்முயற்சிகள் பிரதிபலிப்பதுடன், அவர்களது பொதுப் பண்பாட்டு பிதுரார்ஜிதத்தையும் நினைவூட்டுகின்றன.

இலங்கையின் கலாசார செழுமைக்கு வளமூட்டிய கைதேர்ந்த இந்தியக்கலைஞர்களுக்கு இலங்கை என்றும் நன்றிக் கடப்பாடுடையது. இக்கலைஞர்கள் ஒன்றில் இங்கு வந்து குடியேறியவர்களாக இருந்தனர்; அல்லது ஆரியரினாலோ அல்லது பௌத்த மத பரப்புக் குழுக்களினாலேயோ இங்கு கூட்டி வரப்பட்டனர். கொல்லர், பொற்கொல்லர், கல் வெட்டுவோர், தச்சர், துணி நெய்வோர், குயவர் என்போர் இவர்களின் பரிவாரங்களில் அடங்கியிருந்தனர். கால ஓட்டத்தில் இலங்கைக் கலை வடிவங்களிலும், படிமங்களிலும் இந்தியச் செல்வாக்கு தெளிவாக உணரப்படலாயிற்று. இச்செல்வாக்குகள் இருந்த போதிலும் இலங்கையின் உள்நாட்டு கலைப்பாரம்பரியம் முற்றிலும் தென்னிந்திய மாதிரிகளால் பாதிக்கப்படவில்லை. மாறாக, ஆரம்பகால இந்திய - பௌத்த கூறுகளையும் வடிவமைப்பு அலங்காரப் பாணிகளையும் அது கொண்டிருக்கிறது.

சில ஆசிய நாடுகளின் பாரம்பரிய வடிவமைப்புக்களில் காணப்படும் குறியீடுகளின் பரிணாம வளர்ச்சி ஆசிய நாடுகளுக்கு கலைஞர்கள் குடிபெயர்ந்து சென்றமையையும், அவர்களுக்கிடையே நிலவி வந்த தொடர்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, இலங்கைக் கலையில் காணப்படும் நாக எண்ணக்கருவும், மகர நுழைவாயிலும் ஆரம்ப கால இந்தியக்கலாசாரத்தையும், வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை மக்களின் மத நம்பிக்கைகளையும் எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றன. நாக குறியீடு செல்வங்களின் பாதுகாப்பினைச் சித்தரித்தமையால், அது தனியாக சோடியாக அல்லது ஒரு குழுவாக கல்லிலும், மரத்திலும், கல் வெட்டுக்களிலும் செதுக்கப்பட்டது; கட்டிடங்களின் நுழை வாயில்களிலும், பித்தளைப் பாத்திரங்களிலும், துணிமணிகளிலும் ஓர் அலங்காரமாகவும் இவ்வடிவம் பொறிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து இந்தோனேஷியா வரை விரிந்து செல்லும் ஆசிய நாடுகளின் கலைசார்ந்த குறியீடுகளில் ஒரு வழிபாட்டு வடிவமாகவும், அற்புதங்களை நிகழ்த்தக்கூடிய ஒரு சக்தியாகவும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

புராணக்கதைகளில் வரும் மகரா என்ற பைசாச வடிவம் இலங்கைக் கட்டடக்கலையில் வாயில்களை அலங்கரிப்பதற்கு மகர தோரணமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் பௌத்த குகைக் கோயில்களிலிருந்தே இக்கலை வடிவமும் இலங்கைக்கு வந்திருக்கிறது. புராணக் கதைகளில் வரும் மனித, விலங்கு உருவங்களும் பல ஆசிய நாடுகளில் வடிவமைப்புக்களாகவும், அலங்கார குறியீடுகளாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இந்நாடுகளுக்கிடையிலான கலை வடிவங்களின் ஒருமித்த தன்மையையும் கலாசாரங்களுக்கிடையிலான குறியீட்டுப் பரிவர்த்தனைகளையும் இவை எடுத்துக் காட்டுகின்றன. இந்தோனேஷிய, இலங்கை முகமூடி மாதிரிகள் கருத்திலும், வடிவத்திலும் ஒருமித்த தன்மையை காட்டுவதுடன் ஒரு நாட்டிலிருந்து மற்றொன்று இம்மாதிரிகளை கடன் பெற்றதனை அல்லது தழுவலாக ஏற்றுக் கொண்டதனை இது தெளிவுபடுத்துகிறது. இந்தோனேஷியாவின் கருடா குறியீடும் இலங்கையின் குருலு (கழுகு) முகமூடியும் குறிப்பிடத்தக்க ஒத்த தன்மைகளைப் பிரதிபலிக்கின்றன. கடந்த காலத்தின் ஒரே விதமான சடங்காசார கோட்பாடுகளை இந்நாடுகள் பின்பற்றி வந்தமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

ஜே. திலகசிரி

ருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவும், கிராமப்புற வருமானங்களை தற்போதைய மட்டங்களை விட அதிகரிக்கச் செய்யவும் முடியும்.

இலங்கையில் கைப்பணிக் கைத்தொழில்களின் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள் பலவாகும். கடன் வசதிகள், மூலப் பொருட்கள், பிந்திய தொழில் நுட்பம் என்பன கிடைக்காமை, போதிய சந்தை வசதிகளின்மை, பாரம்பரியத் தேர்ச்சிகள் தொடர்ந்து முன்னெடுத்து வரப்படாமை என்பன இக்காரணிகளாகும். இவற்றில், போதிய சந்தை வசதியின்மையே தொடர்ச்சியாக நீடித்து வரும் ஒரு பிரதான பிரச்சினையாக இருக்கிறது. இலங்கையின் உள்நாட்டுச் சந்தை குறைந்த விலையிலான பாவனைப் பொருட்களையும், மலிவான அணிகலன்களையும் அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கிறது. இப்பொருட்கள் தொழில் கலைஞர்களுக்கு மிகச்சிறு அளவிலான பிரதிபலனையே கொடுக்கின்றன. அத்துடன் அவர்களது திறன்களுக்கு சவால் விடுப்பனவாகவும் அவை இல்லை. சுற்றுலாப் பயணிகளின் சந்தையும் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கிறது. தொழில்சார் கலைஞர்களின் தேர்ச்சிகளை சீரழிக்கும் விதத்திலேயே நினைவுப் பரிசுப் பொருட்களை வழங்கும் கைத்தொழில் வளர்ந்திருக்கிறது. இக்கலைஞர்கள் வர்த்தக மயப் படுத்தப்பட்ட சந்தையொன்றுக்கே பொருட்களை வழங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மறுபுறத்தில், சர்வதேச சந்தையானது அதன் சிறப்புக் கேள்வி காரணமாகவும், உயர் தரங்களை அது வேண்டி நிற்பதாலும் எமது கலைஞர்கள் தமது கலையின் உயர் தரங்களைப் பேணுவதற்கும், சிறந்த வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அது வழி கோலக் கூடும். இக்காரணங்களுக்காகவே கைப்பணிப் பொருட்களின் ஊக்குவிப்புக்கு ஏற்றுமதிச்சந்தை ஓர் இலக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. கொள்வனவு நாடுகளில் அதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்காதனவும், அதிக கைத்திறனை வேண்டி நிற்பதுமான பொருட்களுக்கு கூடிய ஏற்றுமதி வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

சில கைப்பணிக்கலைஞர் சமூகங்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் தொடர்பாக நாம் நடத்திய ஓர் ஆய்வின் பிரகாரம், அரச அனுசரணையும், ஒத்துழைப்பும் வழங்கப்பட்ட போதிலும், இக்கலைஞர்கள் இன்னமும் தம்மைச் சுரண்டிப்பிழைக்கும் பல தனிநபர்களை நம்பியே பிழைக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்ற உண்மை தெரிய வந்தது. ஆரம்ப காலத்தில் ஒரு கைப்பணிப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு வாராந்த சந்தைக்கோ அல்லது விற்பனைக்காக வீடு வீடாகவோ எடுத்துச் செல்லப்பட்டது. கலைஞர்களோ அல்லது திரிந்து சென்று விற்பவர்களோ பொருட்களை விற்பனை செய்யும்போது இம்முறையே இப்பொழுதும் நிலவி வருகிறது. கண்டி பெரஹரா, கதிர்காம உற்சவம் போன்ற விழாக்களின் போது கைப்பணிப் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகின்றன. பல அரசாங்க, உப-அரசாங்க நிறுவனங்கள் கைப்பணிப் பொருட்களின் சந்தைப்படுத்தலில் ஈடுபட்டிருந்த போதிலும் நிலைமை அவ்வளவாக மாறியிருப்பது போல தெரியவில்லை. கண்டி மாவட்டத்தில் நத்தரம்பொத்தையில் அமைந்திருக்கும் கைப்பணிக்கலைஞர் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள கைப்பணி நிலையத்துக்கு அரச நிறுவனமொன்று காலத்துக்குக்காலம் விஜயம் செய்து கிடைக்கக் கூடியதாக இருக்கும் பொருட்களை கொள்வனது செய்கிறது. பொருட் செலவு, ஊழியச் செலவு, கலைத் திறன் மட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்டே விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கிடைக்கும் விலைகள் குறித்து பல தொழில் கலைஞர்கள் திருப்தியுறுகின்றனர் என்பதனையும் எமது ஆய்வு எடுத்துக்காட்டியது.

சிறு கைத்தொழில்கள் திணைக்களமே ஆரம்ப காலத்தில் கைப்பணிப் பொருட்களை ஊக்குவிக்கும் அரச நிறுவனமாக இருந்தது. கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஏற்றுமதி, உள்ளூர் விற்பனை, தொழில் தேர்ச்சிகளைப் பயிற்றுவித்தல், தொழில்நுட்ப அறிவை வழங்குதல், ஏனைய சேவைகள் என்பன இத்திணைக்கலத்தின் நடவடிக்கைகளாக இருந்தன. இன்று இத்திணைக்களம் தெரிவு செய்யப்பட்ட சில கைப்பணிப் பொருட் தொகுதிகளிலேயே கவனஞ் செலுத்திவருகிறது. இதே வேளையில் இலங்கை கைப்பணிச் சபையின் கீழ் வரும் லக்சல பிரதான விற்பனை, சந்தைப் படுத்தும் தாபனமாக செயற்பட்டு வருகின்றது. கைப்பணிப் பொருட்களின் உற்பத்தியையும், சந்தைப்படுத்தலையும் அது ஊக்குவித்து வருகின்றது. கைப்பணிப் பொருட்களை ஊக்குவிப்பதற்கும், குறிப்பாக கைப்பணிக் கலைஞர்களின் சேம நலனுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் படுத்தவுமென தேசிய தொழில் தேர்ச்சி பேரவை தாபிக்கப்பட்டுள்ளது. இப்பேரவையுடன் இணைந்த விதத்தில் தேசிய வடிவமைப்பு நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. புதிய வடிவமைப்புக்களை விருத்தி செய்தல், உற்பத்தியை அமுல் செய்தல், கைப்பணித் துறை குறித்த ஆய்வுகளை நடாத்துதல், புதிய பொருட்களை கண்டறிதல், சந்தைத் தகவல்களைப் பெறல் என்பன இந்நிலையத்தின் நோக்கங்களாகும்.

இலங்கையில் கைப்பணிப் பொருட்களின் சந்தைப்படுத்தலில் அரச ஏகபோகம் நிலவவில்லையெனினும் தேசிய கைப்பணிப் பொருட்கள் சபையும், லக்சலவுமே மிகப்பெரிய சந்தைப் படுத்தும் நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன. அளவிலும், இயங்கும் மட்டத்திலும் சந்தைப் படுத்தும் அனைத்து அமைப்புக்க

ளிலும் இவ்வயிரண்டுமே பிர மாண்டமாக இருக்கின்றன. விலைகளை உறுதியாக வைத்திருப்பதற்கே சந்தைப்படுத்தலில் இத் தலையீடு அவசியம் எனக் கூறப்படுகிறது. இச் சபை கைப்பணித் தொழில்களுக்கும், கைப்பணிக் கலைஞர்களுக்குமென இயங்கி வந்தபோதிலும், அதன் சந்தைப்படுத்தும் அமைப்பினுல் எல்லா தொழில் கலைஞர்களும் நன்மையடைவதில்லை. பல கலைஞர்களால் தமது பொருட்களை லக்சலாவுக்கு விற்பனை செய்ய முடிவதில்லை. தனியார் துறை கொள்வனவாளர்களுக்கு தமது பொருட்களை – பல சந்தர்ப்பங்களில் நியாயமற்ற விலைகளில் – விற்பதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள்.

தனது விற்பனை நிலையங்களுக்கு கைப்பணிப் பொருட்களையும், கைத்தறிப் பொருட்களையும் கொள்வனவு செய்வதில் கிராமிய தொழில் துறை அமைச்சு லக்சல பின்பற்றிவரும் அதே முறையையே பின்பற்றிவருகிறது. பாரிய விற்பனை நிலையங்கள் கைத்தறி எம்போரியங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தகைய நான்கு எம்போரியங்கள் கிராமிய தொழில் துறை அமைச்சின் கீழ் பம்பலப்பிட்டி, புறக்கோட்டை, பொல்கொல்லை, கண்டி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. மாவனல்லையில் ஒரு சிறு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் தயாரிக்கப்படும் 310 வகையான கைப்பணிப் பொருட்கள் இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

### கொள்வனவு நடைமுறை

அமைச்சைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியே கொள்வனவுத் தீர்மானத்தை எடுக்கிறது. ஒரு தொழில் கலைஞர் தனது உற்பத்திகளை இவ்விற்பனை நிலையங்களுக்கூடாக விற்பனை செய்ய விரும்பினுல் முதலில் அவர் தன்னை ஒரு வழங்குனராக பதிவு செய்து கொள்ளல் வேண்டும். வருட ஆரம்பத்தில் பொதுவாக கலைஞர்கள் பதிவு செய்யப்படுகிருர்கள். அவர்களது உற்பத்திப் பொருட்களின் மாதிரிகள் கமிட்டிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. கமிட்டி அவற்றுக்கு அங்கிகாரம் வழங்கியவுடன், குறித்த கலைஞர் எம்போரியத்தியத்திலிருந்து தனது பொருட்களுக்கான ஒரு கட்டளையைப் பெறுகிருர். இப் பொருட்கள் வழங்கப்பட்டு 3 - 5 நாட்களில் பணம் வழங்கப்படுகிறது.

கொள்வனவு செய்யும் மற்ருெரு முறை 'பொல' (சந்தை) முறை எனப்படுகிறது. பெருமளவிலான கலைஞர்கள் வாழும் கண்டியிலேயே இச்சந்தை கூடுகிறது. இச்சந்தை பொதுமக்களுக்கு திறந்திருக்கும். இதற்கான திகதி தொழில் கலைஞர்களின் சங்கங்களுக்கூடாகவும், தனிப்பட்ட முறையிலும் தெரிவிக்கப்படுகின்றது. திணைக்களம் இதற்கு அதிகளவு பிரசாரமும் கொடுக்கிறது. எந்த தொழில் கலைஞரும் இச்சந்தையில் தமது பொருட்களை பார்வைக்கு வைக்கலாம். திணைக்களம் தனது விற்பனை நிலையங்களுக்கூடாக விற்பனை செய்வதற்காக சிறந்த பொருட்களை தெரிவு செய்து கொள்கிறது. பொதுமக்களும் வியாபாரிகளும் தமக்குத் தேவையானவற்றை இங்கிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

### விலையிடல்

லக்சலவும் கைத்தறி நிலையங்களும் கொள்வனவு செய்யும் கைப்பணிப் பொருட்களின் விலையிடல் 40 இலிருந்து 50 சதவீதத்துக்குள்ளேயே மேற்கொள்ளப்படுகிறது. கைப்பணிப் பொருட்கள் விரைவில் விற்பனை செய்யப்படுவதில்லை என்றும், அவற்றைப் பல மாதங்கள் வைத்திருக்க வேண்டி நேரிடுகின்றதென்றும், அதனுலேயே இவ்விதம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்றும் இதற்கு விளக்கம் கூறப்படுகிறது. மறுபுறத்தில், அவற்றின் உற்பத்தியாளர்களுக்கு அல்லது வழங்குனர்களுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டு விடுகின்றது.

ஏற்கனவே பெறப்பட்டிருக்கும் ஏற்றுமதிக் கட்டளைகளுக்கும், விரைவில் விற்பனையாகும் பொருட்களுக்கும் கூட கைத்தறி நிலையங்களும் லக்சலவும் இதே இலாப எல்லையை வைத்துக் கொள்வதால் இவ் விலாபவிதம் நியாயமானது என்று கூறமுடியாது. இலாப எல்லையான 40 சதவீதம்வாடிக்கையாளருக்கும், தொழில் கலைஞருக்கும் நியாயம் வழங்கவில்லை என வாதிக்கப்படுகிறது. ஒரு தேர்ந்த கலைப்படைப்புக்கு ஒரு வாடிக்கையாளர் திருப்தியுடன் கொடுக்கும் விலை அப்படைப்பை உருவாக்கிய கலைஞனுக்குச் செல்வதில்லை.

கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி பெரும்பாலான (50 சதவீதத்துக்கும் அதிகமான) கலைஞர்கள் பித்தளை, வெள்ளிப்பொருட்கள், வெள்ளி நகைகள் போன்றவற்றை உருவாக்குவதிலேயே ஈடுபட்டுள்ளனர் என்பது தெரிய வந்தது. தொழில் கலைஞர்களில் 25 சதவீதமானேர் மரச் செதுக்கு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். பாய் பின்னும் (ஹேனேவெல தும்பறை பாய்கள்) தொழிலில் 10 சதவீதமானேர் ஈடுபட்டுள்ளனர்.

பித்தளை, வெள்ளிப் பொருட்கள் என்பன குடும்ப வருமானத்துக்கு கணிசமான பங்களிப்பினை கொடுக்கின்றன. மரத்தை அடிப்படையாகக் கொண்ட பறைகள், செதுக்கப்பட்ட பொருட்கள் என்பனவும் இவ்விதம் பங்களிப்புச் செய்கின்றன. களி மண் வேலைகள் நியாயமான வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன. கடதாசி கலைப் பொருட்கள், கைப்பின்னல் வேலைகள் என்பன குடும்பங்களுக்கு மேலதிக வருமானங்களை வழங்குகின்றன. கண்டி மாவட்டத்தில் களி மண் பாத்திரங்களையும், நார்களைக்

கொண்டு அலங்கார கயிற்றுப் பொருட்களையும் உருவாக்கும் தொழில் மூலம் கலைஞர்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கிறது.

கண்டி மாவட்டத்தில் எம்பெக்க, கலாபுர, குன்னேபான ஆகிய கிராமங்களில் மரச் செதுக்கு வேலைகள் காணப்படுகின்றன; கூரகல, கூரகன்தெனிய கிராமங்கள் பறைகளுக்கு பேர் போனவை; வர்ணத்தீட்டும் வேலைகளுக்கு ஹுரிகடுவ, கலாபுர கிராமங்கள குறிப்பிடத்தக்கவை; தும்பறைப்பாய்களுக்கு ஹேனேவெல புகழ் பெற்று விளங்குகிறது. பித்தளை, வெள்ளி வேலைகளுக்கான பிரதான இடமாக நத்தரம் பொத்த விளங்குகிறது. மேலும், எம்பெக்க, தந்துரை, போமுறே, நீலன்வல, உளுஎந்துபிட்டி, வன்னிபொல, கிரிவாவுல, கடலாதெனிய, தெளிவல, பமுனுவ போன்ற கிராமங்களும் பித்தளை, வெள்ளி வேலைகளுக்கு புகழ் பெற்றவையாகும்.

இயந்திரங்கள், தொழிற்கூட வசதிகள் என்பவற்றைப் பெற்றிருக்கும் கலைஞர்களுடன் ஒப்பிடும்போது சிறிய தொழில் கலைஞர்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்குபவர்களாக இருக்கிறார்கள். வசதியுள்ள தொழில் கலைஞர்கள் பெரிய கட்டளைகளைப் பெற்று அவற்றை நிறைவேற்றக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால், சிறிய அளவில் ஈடுபட்டிருப்பவர்களினால் இதனை நிறைவேற்ற முடிவதில்லை. இப்பெரிய கலைஞர்கள் மூலப்பொருட்கள், மற்றும் வசதிகள் என்பவற்றை உத்தியோகபூர்வ வட்டாரங்களிலிருந்து மிக இலகுவில் பெற்றுவிடுகிறார்கள் என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது. கொள்வனவு அமைப்புக்குள்ளும் அவர்களுக்கு செல்வாக்குண்டு.

பல்வேறு வகையான தொழில் கலைஞர்கள் வாழும் கண்டிப்பிரதேசத்தில் இவ்வேலைகள் நடைபெறும் ஒவ்வொரு கிராமத்திலும் நடுவர்கள் இயங்கி வருகிறார்களென்பதனை நாம் முன்னர் குறிப்பிட்ட ஆய்வு எடுத்துக் காட்டியது. பல கிராமங்களில் இந்நடுவர்களுக்கூடாகவே பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இக்கொள்வனவு அமைப்பு தேவையான பொருட்களை நேரடியாக உற்பத்தி செய்வோரிடமிருந்து பெற்றுக் கொள்வதால் இங்கு இடைத்தரகர்களுக்கு இடமில்லையென அமைச்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். எனினும், இத்திணைக்களம் அதனிடம் பதிவு செய்து கொண்டுள்ள சுமார் 250 வழங்குனர்கள் மீது கடுமையான தர நிர்ணயக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இந்த அமைப்புக்குள்ளேயே பல தரகர்களும் நடுவர்களும் இயங்கி வருகிறார்களென பல தொழில் கலைஞர்கள் தெரிவித்தனர்.

கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள எம்பெக்க கிராமம் உள்நாட்டு, வெளிநாட்டு பார்வையாளர்களை கவர்ந்திழுக்கும் ஓரிடமாகும். இங்குள்ள தேவாலயத்தில் பழங்கால கலை வடிவங்கள் அதே விதத்தில் இன்னும் பேணிக்காக்கப்பட்டு வருகின்றன. மேலும், பித்தளை வேலைப்பாடுகளுக்கும், மரச் செதுக்கு வேலைகளுக்கும் இக்கிராமம் கீர்த்தி பெற்று விளங்குகிறது. தேவாலயத்தில் காணப்படும் மரச் செதுக்கு வேலைகளையும், ஏனைய கலை வடிவங்களையும் இங்கு வாழும் கைதேர்ந்த கலைஞர்கள் கலைப் பொருட்களாக வடித்தெடுக்கிறார்கள். இக்கலைஞர்கள் செல்வச் செழிப்பில் திளைப்பவர்கள் என ஒருவர் எதிர்பார்க்கக்கூடும். ஆனால் நிலைமை அப்படியில்லை. தேவாலயத்துக்கு அருகில் தொழில் கலைஞர்களின் வேலைத்தளங்கள் அமைந்திருந்தமையையும், அதே இடத்தில் அமைந்திருந்த ஓரிரு கடைகள் கிராமக் கலைப் பொருட்களை விற்பனை செய்தன என்பதனையும் எமது பரிசீலனைகள் காட்டின.

எம்பெக்கவின் பாரம்பரியக் கலைஞர்கள் மிக வறிய நிலையிலேயே வாழ்கிறார்கள். அவர்கள் தமது உற்பத்தியை அதன் இறுதி விலையில் மூன்றில் ஒரு பங்குக்கு அல்லது நாலிலொரு பங்குக்கே இடைத்தரகர்களுக்கு விற்பனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த வியாபாரிகளே தேவாலயத்துக்கு அருகில் கலைப் பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

நத்தரம்பொத்தையில் அமைந்துள்ள கலாபுர எனப்படும் கலைக்கிராமத்தில் வாழும் 71 குடும்பங்களுக்கு உதவ நான்கு அமைப்புக்கள் உள்ளன. தேசிய வடிவமைப்பு நிலையம், சிறு எந்திரவியல் நிலையம், பொதுச் சேவைகள் நிலையம், மூலப்பொருள் வங்கி என்பனவே இந்த நான்கு அமைப்புக்களுமாகும். கிடைக்கும் கட்டளைகளுக்கேற்ப வடிவமைப்புக்களை விருத்தி செய்வதே வடிவமைப்பு நிலையத்தின் வேலையாகும். தொழில் கலைஞர்களுக்கு பயிற்சி வசதிகளை சிறு எந்திரவியல் நிலையம் வழங்குகிறது. சில குறிப்பிட்ட இயந்திரங்களை வாங்க முடியாத கலைஞர்களுக்கு பொதுச் சேவைகள் நிலையம் சேவைகளை வழங்குகிறது. பொதுச் சேவை நிலையம் தொழில் கலைஞர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவது எமது ஆய்வின் போது தெரிய வந்தது. வடிவமைப்பு நிலையம் அவ்வளவு பயனுள்ளது என கலைஞர்கள் எண்ணவில்லை. மூலப்பொருள் வங்கி தமக்குத் தேவையான பொருட்களை வழங்கக் கூடிய நிலையில் இல்லையென்றும் அவர்கள் சொன்னார்கள்.

அரசாங்கத்தின் கொள்கைப்படி பாரம்பரிய கலைஞர்களை ஊக்குவிப்பதற்கு பலவிதமான சலுகைகளும், தூண்டுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென பல நிறுவன அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சர்வதேச சந்தைகளில் எமது கைப்பணிப் பொருட்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டுள்ளன.

பல சர்வதேச கண்காட்சிகளிலும் அவை வைக்கப்பட்டுள்ளன. எமது கலைஞர்களுக்கு பயிற்றுவிக்க வெளிநாட்டு நிபுணத்துவமும் பெறப்பட்டது. ஏற்றுமதிக் கிராமங்களை அமைப்பதன் மூலம் கலைஞர்கள் வெளிநாட்டுச் சந்தைகளைத் தேடிக்கொள்வதற்கும் உதவி வழங்கப்பட்டது.

ஆனால், இந்த சகல முயற்சிகளுக்கும், நல்லெண்ண நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கூட எமது பாரம்பரிய கலைஞர்கள் இன்னமும் மிக வறிய நிலையில் இருந்து வருவதனை எமது ஆராய்ச்சியாளர் கண்டறிந்தார். இன்றைய கைப்பணிப்பொருள் துறையில் சந்தைப்படுத்தக் கூடிய பொருள் பாரம்பரிய உற்பத்திப் பொருளன்றி, பாரம்பரிய தொழில் தேர்ச்சியே என பிறிதொரு ஆய்வு எடுத்துக் காட்டியது. தனது பாரம்பரிய தேர்ச்சிகளைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதே இன்று இக்கலைஞர்கள் எதிர்நோக்கும் அறைகூவலாகும். கருவிலும், வடிவத்திலும் இப்பொருட்கள் புதுமையானவையாகவும், அழகியல் நுட்பங்கள் செறிந்தனவாகவும் இருத்தல் வேண்டும். இக்கலைஞர்கள் இப்பொழுது நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்தையே நோக்கியிருக்கிறார்கள். தமது பாரம்பரிய முயற்சிகளிலிருந்து தமது பிள்ளைகள் விலகிச் செல்வதனைப் பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. எமது கலைகள் உயிர் வாழ்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதிலேயே அவர்கள் குறியாக இருக்கிறார்கள்.

வர்த்தக மயமாக்கப்பட்ட ஓர் உலகில் உயிர் வாழ்வதற்கு உண்மையான கலைஞனும் கூட சில சமரசங்களை செய்ய வேண்டியிருக்கிறது. மாறிவரும் உலகின் புதிய ரசனையுணர்வுகளுக்கும், தேர்வுகளுக்கும் ஏற்றவிதத்திலான கைப்பணிப் பொருட்களை உருவாக்குவதிலேயே இக்கலைஞர்களின் வெற்றி தங்கியிருக்கிறது.

## கலைஞர் குடும்பங்கள்

மத்திய கால இலங்கையில் வாழ்ந்த கைதேர்ந்த கலை ஆசான்களும், அவர்களின் கீழ் பணி புரிந்த சக கலைஞர்களும் அரச அனுசரணையை அனுபவித்து வந்ததுடன், தமது சேவைக்காக அவர்கள் பட்டம், நிலம் என்பவற்றையும் பெற்று வந்தார்கள். மேலும், இக்கலைஞர்களின் தொழில்சார் தேர்ச்சிக்கும், நிபுணத்துவத்துக்கும் உரிய அங்கீகாரமும், கௌரவமும் கொடுக்கப்பட்டன. இக்கலைக் குடும்பங்களின் வழித்தோன்றல்கள் இன்றும் வாழ்ந்து வருவதுடன் தமது செழுமையான கலைப்பாரம்பரியத்துக்கு அவர்கள் உயிரோட்டமான பங்களிப்பையும் நல்கி வருகிறார்கள்.

மாபெரும் கலைஞர்களின் பெயர்கள் அவர்கள் என்றென்றைக்குமாக விட்டுச் சென்ற படைப்புக்களில் காணப்படவில்லையெனினும், 'வித்தி பொத்' என்ற தகவல் திரட்டுக்களிலும், சாசனங்களிலும் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. அரத்தன தேவேந்திர முலாச்சார்ய என்பார் கண்டிய யுகத்தின் கீர்த்திமிகு கலைப் பேராசானாய் விளங்கினார். கண்டியில் அமைந்துள்ள பார்வையாளர் மண்டபத்தின் நிர்மாண வேலைகளுக்கு இவர் பொறுப்பாக இருந்தார். தலதா மாளிகையில் அமைந்திருக்கும் எண்கோண மண்டபத்தையும் இவரே வடிவமைப்புச் செய்தார். அவரது வழித்தோன்றல்களில் ஒருவரான தந்தசிங்க முலாசார்ய பட்டபந்தி என்ற முதிர்ந்த கலைஞர் இன்னமும் வாழ்ந்து வருகிறார். தங்கம், வெள்ளி, பித்தளை என்பவற்றில் அவர் கைதேர்ந்த கலை விற்பன்னராவர்.

கேகாலையில் மங்களகமையில் வாழும் நிலாவல முகாந்திரம் குடும்பமும் பாரம்பரிய கலைக்குடும்பமொன்றாகும். இக்குடும்பத்தின் மூதாதை கலைஞர்கள் அரசரின் வாள் தயாரிக்கும் பட்டறையில் பணிபுரிந்தவர்களாவர். இக்குடும்பக் கலைஞர்கள் அரச குடும்பத்துக்குத் தேவையான நகைகளை கலாபூர்வமான நுட்பத்துடன் வடிவமைத்து கொடுத்தனர். இக் கலைஞர்களின் மெச்சத்தக்க இப் பணிகளுக்கு பரிகாரமாக மன்னர் பட்டங்களையும், காணி நிலங்களையும் அளித்து அவர்களை கௌரவித்தார்.

கோயில்களுக்கு வர்ணந் தீட்டும் பல கீர்த்திவாய்ந்த கலைஞர்களின் பெயர்கள் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளதுடன், அவர்களது படைப்புக்கள் இன்றும் நிலைத்து நின்று இக்கலைஞர்களின் தேர்ச்சிக்கு சான்று பகன்று வருகின்றன. இன்று தேசிய செல்வங்களாக பேணப்பட்டு வரும் தெகல்தொருவ (கண்டி), ரிதிவிஹார (குருணாகல்) ஓவியங்கள் 'பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மதகுருவான தெவரகம்பொல சில்வத்தன என்பார் தீட்டியவையாகும். சமீப காலம் வரையில் மாவனல்லையில் வாழ்ந்து காலஞ் சென்ற ராஜகுரு ஒட்டுனு பண்டித்த ஸாக்ய செனவிரத்ன முலாச்சாரிகே அப்பு ஸ்வர்ணதிலக என்ற ஆற்றல் மிகு கலைஞர் (அவரது கௌரவப்பட்டங்களே அவருடைய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.) மிக அரிதான திறன்களைப் பெற்றிருந்த ஒரு தந்தம் செதுக்கும் கலைஞராவர். கடந்து போன நாட்களின் நான்கு புகழ்மிகு தந்தக் கலைஞர்கள் இன்றில்லாவிடினும் அவர்களது வாரிசுகளில் சிலர் இன்றும் இப்பாரம்பரியத்தை மிகக் கஷ்டத்துடன் முன்னெடுத்து வருகிறார்கள். அரச விருந்தினர்களுக்கான ஞாபகச்சின்னங்களையும், பரிசுப் பொருட்களையும் வடிவமைப்பதற்கு, நீண்ட கலைப் பாரம்பரியமொன்றிலிருந்து வரும் சிங்கமணி பட்டபந்தி முதலிஹாமி என்ற கலைஞரின் சேவை இன்றும் பெறப்படுகிறது. குருணாகலில் வாழும் டப். எம். ஜீவத்ஹாமி என்ற கலைஞர் தந்தத்தில் முகவரிகளைப் பொறிப்பதிலும், செதுக்கு வேலைப்பாடுகளை வடிவமைப்பதிலும் கைதேர்ந்த விற்பன்னராக விளங்கி வருகிறார்.

கலைஞர்களுக்கான மன்னர்களின் அனுசரணை எவ்வளவு தூரத்துக்கு இருந்ததென்றால் சில சந்தர்ப்பங்களில் மன்னர்கள் தங்கள் ஆடைகளில் ஒரு பகுதியை கலைஞர்களுக்கு பரிசாக அளித்திருக்கிறார்கள். கீர்த்திமிகு கலைஞர்களை மன்னர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையையே பட்டபத்தி என்ற கௌரவப் பட்டம் எடுத்துக்காட்டுகிறது.

கண்டியக் கலையின் மற்றொரு சிறப்பம்சம் பயிற்றுவிக்கும் முறைகளாகும். பயில்வோரும் பயிற்றுவிப்போரும் ஒரு கூட்டுக்குடும்ப அமைப்பில் மிக நெருக்கமான முறையில் பிணிக்கப்பட்டிருந்தார்கள். இம்முறையினால் கலைத் தேர்ச்சிகள் பரம்பரை பரம்பரையாக இடையீடின்றி முன்னெடுத்து வரப்பட்டன.

வேலைத்தளப்பயிற்சியும் கலை நுணுக்கங்களை படிப்படியாக போதிப்பதும், வரைதல்வடிவமைப்பு பயிற்சியும் இப்போதனா முறையின் பிரதான அம்சங்களாக விளங்கின. இம்முறையின் கீழ் குருவும் சிஷ்யனும் மிக அந்நியோன்யமான விதத்தில் பிணைப்புற்றிருந்தார்கள். பாரம்பரியக் கலைகள் நலிவுறாது பல நூற்றாண்டுகளாக பேணிப்பாதுகாக்கப்பட இவ்வமைப்பே உதவிற்றெனலாம்.

# நெல்லுற்பத்தி வீழ்ச்சியும் அதன் விளைவுகளும்

1985ல் 5 சதவீதமாக இருந்த இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 1986ல் 4.3 சதவீதமாகக் குறைந்தது. சென்ற ஆண்டில் இவ்விழ்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்தது விவசாயத் துறையின் செயலாற்றுகையாகும். தேயிலை (−1.3%), நெல் (− 2.5%) ஆகிய பயிர்களின் உற்பத்தி விழ்ச்சியடைந்தது. பிற பயிர்களின் செயலாற்றுகை இவ்வீழ்ச்சியைச் சரிப்படுத்த இயலவில்லை. முழு விவசாயத்துறையினதும் உற்பத்தி 1985ல் 8.6 சதவீதமாக இருந்து 1986ல் 2.8 சதவீதமாக விழ்ச்சியுற்றது. 1986ல் நெல்லுற்பத்தி 2.5 சதவீதமாகக் குறைந்து 26 லட்சம் மெட்றிக் தொன் உற்பத்தியாயிற்று. (12.4 கோடி புசல்கள் அல்லது 18 லட்சம் மெ. தொ. அரிசி) எவ்வாருயினும், 1984ல் உற்பத்தி செய்யப்பட்ட 24 லட்சம் மெட்றிக் தொன்னைவிட 1986ல் 6 சதவீதம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டது.

சென்ற ஆண்டில் பெரும் போகம், சிறுபோகம் ஆகிய இரண்டிலும் உற்பத்தி குறைந்து காணப்பட்டதெனினும் வீழ்ச்சிக்கு 1985/86ன் பெரும் போகம் பிரதான காரணியாக அமைந்தது. 1986ல் வட, கிழக்கு மாகாணங்களிலேயே நெல்லுற்பத்தி பிரதானமாக வீழ்ச்சியுற்றது. அறுவடை செய்யப்பட்ட பிரதேசத்தின் அளவு குறைந்தமையால் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவும் குறைந்தது. பதிவுகளின் பிரகாரம் இப்பிரதேசங்களில் நெல்லுற்பத்தி குறைந்தமையால், பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பும் ஏறக்குறைய 20 சதவீதத்தால் விழ்ச்சியுற்றது. பயிர்ச் செய்கை விழ்ச்சியடைந்ததோடு, கந்தளாய் அணையில் ஏற்பட்ட உடைப்பும் திருகோணமலை மாவட்டத்தில் நெல்லுற்பத்தியைப் பெருமளவில் பாதித்தது. பெரும் போக காலத்தில் பிற பிரதேசங்களில் பயிர்ச் செய்கையும் உற்பத்தியும் அதிகரித்த போதிலும் எல்லாப் பகுதிகளும் அடங்கிய வகையில் உற்பத்தியில் 3.6 சதவீத விழ்ச்சி ஏற்பட்டது. பயிர்ச் செய்கை நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டு, அதிக அளவில் உரமிடப்பட்டு திருந்திய விதை நெல் பயன்படுத்தப்பட்டது. எனினும், சிறுபோகத்தின்போது ஏனைய போகங்களின் அளவிலேயே நெல்லுற்பத்தி இருந்தது. சராசரி உற்பத்தி குறைவதற்கான பிரதான காரணம், ஆண்டின் பிற்பகுதியில் மோசமான காலநிலை நிலவியதாகும். சென்ற ஆண்டு பெரும் போகத்தின்போது ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி நாட்டின் பிற பகுதிகளில் பயிர்ச் செய்கை நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டதனுல் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. உதாரணமாக, மிகக் கூடிய உற்பத்தி குருணுகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. (2,66,000 மெ. தொ.); இதனையடுத்து அநுராதபுரம் (159,000 மெ. தொ.), பொலநறுவை (143,000 மெ. தொ.); அம்பாறை (135,000 மெ. தொ.) மாவட்டங்களில் நெல் உற்பத்தியாயிற்று. மகாவலி 'எச்' பிரதேசத்தில் 97,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. மேற்கூறிய நான்கு மாவட்டங்களதும் மகாவலி 'எச்' பிரதேசத்தினதும் உற்பத்தி நாட்டின் மொத்த நெல்லுற்பத்தியில் 47 சதவீதமாகும். 1986 சிறு போகத்தின்போது அம்பாறை மாவட்டத்தில் மிகக்கூடிய அளவு (171,000 மெ. தொ.) நெல்லுற்பத்தியாயிற்று; பொலநறுவையில் 100,000 மெ. தொ. நெல்லும் குருணுகலில் 63,000 மெ. தொ. நெல்லும், அம்பாந்தோட்டையில் 53,000 மெ. தொ. நெல்லும், மட்டக்களப்பில் 45,000 மெ. தொ. நெல்லும் உற்பத்தியாயிற்று. இவ்வைந்து மாவட்டங்களிலும் மொத்த நெல்லுற்பத்தியில் அரைப் பங்கு உற்பத்தி செய்யப்பட்டது.

1986ல் சராசரி உற்பத்தி ஒரு ஹெக்டயருக்கு 3,497 கிலோகிராம் அல்லது ஏக்கருக்கு 68 புசலாகும். இது இதற்கு முந்திய ஆண்டின் உற்பத்தியை விட ஒரு சதவீதம் அதிகமானதாகும். 1985ல் சராசரி உற்பத்தி 2.6 சதவீதத்தால் 3,385 கிலோவாக அதிகரித்தது. இதற்கு முக்கிய காரணம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் நெல்லுற்பத்தி முயற்சிகள் அதிகரித்தமையாகும். 1986 பெரும் போகத்தில் சிறிய நீர்ப்பாசனப் பகுதிகளில் உற்பத்தி முயற்சி 9 சதவீதத்தால் அதிகரிக்க, பாரிய நீர்ப்பாசனத் திட்டப் பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் காணப்படவில்லை. மழை நீர் கொண்டு பயிர் செய்யப்படும் பிரதேசங்களில் 3 சதவீதத்தால் உற்பத்தி குறைந்தது. 1986 சிறு போகத்தின்போது பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் மழை நீர்ப் பிரதேசங்களில் விளைச்சல் குறைந்ததனுல் உற்பத்தி 1.7 சதவீதத்தால் 3,287 கிலோவாக வீழ்ச்சியுற்றது. பாரிய திட்டங்களின் கீழும் மழை நீர்ப் பிரதேசங்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சி ஏறத்தாழ 4 சதவீதமாகும். அதேவேளையில் சிறிய நீர்ப்பாசனப் பிரதேசங்களின் உற்பத்தி வீழ்ச்சி பொருட்படுத்தத்தக்கதாக இருக்கவில்லை (0.5 சதவீதம்). 1986ல் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு 1.6 சதவீதத்தால் 895,000 ஹெக்டயர்களாகவும், பாரிய திட்டங்களின் கீழான நிலப்பரப்பு 198000 ஹெக்டயராகவும் (22%) சிறிய

(17ம் பக்கம் பார்க்க)

# தனியார் மயமாக்கலில் பிரிட்டன் முன்மாதிரி

டேவிட் விண்டர்

பக்கிங்ஹாம் அரண்மனை, விம்பிள்டன், லண்டன் கோபுரம் என்பவற்றுக்குத் தாயகமான பிரிட்டனில் வெளிநாட்டு அதிகாரிகளைக் கவரும் மற்றொரு புதிய சுற்றுலாக் கவர்ச்சிப் பொருள் தோன்றியிருக்கிறது. இப்புதுக் கவர்ச்சிப் பொருளை உல்லாச பிரயாணத் தேசப்படங்களில் காண முடியாது. அதாவது தனியார் மயமாக்கல்; தனியார் மயமாக்கல் என்பது அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை தனியார் துறைக்குக் கையளிப்பதற்குத் தனியார் மயமாக்கல் எனப்படுகிறது. சென்ற எட்டு ஆண்டுகளாக அரசுக்குச் சொந்தமான சொத்துக்களில் ஏறக்குறைய 40 சதவீதத்தைத் தனியார் துறைக்குக் கையளித்துவிட்ட பிரிட்டன் மட்டுந்தான் தனியார் மயப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள நாடு என்பதல்ல. சீனு முதல் கியூபா வரை, பிரேஸில் முதல் பங்களாதேஷ் வரை ஏறத்தாழ 100 நாடுகள் தனியார் மயமாக்கலில் ஈடுபட்டுள்ளன.

அரசுடைமையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தையுடைய ரஷ்யாகூட முதலாளித்துவத்துடன் கொஞ்ச ஆரம்பித்திருக்கிறது. இவ்வாண்டு மே மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வந்த ஒரு சட்டம் சிறு குடும்ப வியாபார அமைப்புகளில் தங்களுக்காக உழைப்பதற்கு ஆயிரக்கணக்கான சோவியத் பிரஜைகளுக்கு அனுமதியளித்திருக்கிறது. முறையாகத் திட்டமிட்டு தனியார் மயமாக்குவதில் பிரிட்டன் ஈடுபட்டிருப்பதனுல் அது மற்ற நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

''இத்துறையில் மற்றவர்களையெல்லாம் மிஞ்சி நிற்கும் தலைவர்களாக நாம் விளங்குகிறேம்; இதை முதன் முதலில் தொடங்கியவர்கள் நாங்கள்தான். இதில் நாம் பெற்ற நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகிறேம்'' என்று திறைசேரி அதிகாரி ஒருவர் கூறுகிருர்:

இதுவரை பேர்பெற்ற ஜகுவார், பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் உட்பட 16 கம்பெனிகள் தனியார் துறையினுல் கையேற்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 600,000 தொழிலாளர்க்ள் தனியார் துறைக்கு வந்துள்ளனர். இவர்களில் 400,000 பேர் மிகவும் சாதகமான நியதிகளில் தம் கம்பெனிகளுக்குச் சொந்தமான பங்குகளைக் கொள்வளவு செய்துள்ளனர். மேலும், 10 இலட்சம் முன்னைய வாடகை குடியிருப்போர் தம் வீடுகளுக்குச் சொந்தக்காரர்களாகியுள்ளனர். பல நகர, பட்டின சபைகள் தம் பொதுச் சேவைகளை ஒப்பந்தத்தின் மீது தனியார் துறைக்குக் கையளித்துள்ளன. இவை குப்பை சேகரித்தல், பாடசாலை, ஆஸ்பத்திரி சுத்தஞ் செய்தல் போன்ற சேவைகளையும் தனியார் தாபனங்களுக்குக் கையளித்துள்ளன.

லண்டனிலுள்ள அடம் ஸ்மித் கழகத்தின் தலைவர் மெயிட்ஸன் பிறீ, சுதந்திர முயற்சிச் சிந்தனை வங்கியான தமது கழக அலுவலகத்திற்கு ஏறத்தாழ 50 நாடுகளின் பிரதிநிதிகள் விஜயஞ் செய்திருப்பதாகக் கூறுகிருர். தனியார் மயப்படுத்தல் எப்படிச் செயல்படுகிறது என்பதை நேரில் கண்டறிவதற்காக இவர்கள் வருகிருர்களாம். ''தனியார் மயமாக்குவதில் குக்கின் சுற்றுலா'' என டாக்டர் பிறீ பெயரிட்டிருக்கும் இச்சுற்றுலாவில் பிரிட்டனுக்கு வருவோர் பிரிட்டிஷ் திறைசேரி, வங்கிகள், உள்ளூர் தனியார் மயமாக்கல் மன்றங்கள் (அத்தியாவசிய சேவைகளைத் தனியார் மயமாக்கியுள்ள அதிகார சபைகள்) பெட்போடிலுள்ள தேசியக் கப்பற்சரக்குக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கும் செல்கின்றனர். இக் கூட்டமைப்பு முகாமை — பணிசெய்வோர் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின்படி 1982ல் தனியார் மயமாக்கப்பட்டது.

தனியார் மயமாக்கல் காட்டுத்தீபோல உலகெங்கும் பரவுவதாக பிறீ கூறுகிருர். ஸ்கொட்லாந்தில் பிறந்த பொருளியலாளரான பிறீ, மதிநுட்பமிக்கவர்களின் அங்கமான மென்சாவின் முக்கிய உறுப்பினராவார். கடுகதிப் புகையிரதம் போல மிகவேகமாகப் பேசும் இவர், அரசாங்கத்திடமிருந்து அதிகாரம் மக்களுக்குக் கைமாறும் இந்நடவடிக்கையை ஒரு சமூகப் புரட்சியாகக் காண்கிருர். ''இதுதான் இருபதாம் நூற்றுண்டின் மிகப்பெரிய கதை. இது கெயினீஸிய வாதத்தின் வீழ்ச்சியை விடப்பெரியது. இது நூறுண்டுகால சமூகவுடைமையின் தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது'' என்று அவர் சொல்கிருர்.

உலகம் எதிர்த்திசையை நோக்கி வேகமாகச் செல்கிறது. பிரான்சும் யப்பானும் பெரும் பெரும் அரசச் சொத்துக்களை விற்றுவிட்டன. மூன்ரும் உலகிலும் தனியார் மயமாக்கல் விரைவாக நடைபெறுகிறது. கம்யூனிஸ்ட் சீனுவும் கியூபாவுங்கூட சில குடிக் கூலிக்காரருக்கு அவர்களின் வீடுகளை விலைக்கு வாங்கிக் கொள்ள அனுமதியளித்துள்ளன. தனியார் மயமாக்குவதில் ஈடுபட்டுள்ள நாடுகள் பல்வேறு நோக்கங்களுக்காக அவ்வாறு செய்கின்றன. சோசலிச நாடான தன்ஸேனியா போன்றவை, அளவு மீறிய அரசக் கட்டுப்பாடு, ஊக்கத்தைக் கெடுப்பதாகக் கருதுகின்றன. எண்ணெய் உற்பத்தி செய்யும் மலேசியா, நைஜீரியா போன்ற நாடுகளுக்கு, எண்ணெய் விலை வீழ்ச்சி காரணமாகப் பணம் தேவைப்படுகிறது.

ஆனுல், தனியார் மயமாக்கல் பாதையில் பல மேடு பள்ளங்

கள் இருக்கின்றன. சென்ற மாதம், தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்களும் வங்கிகளும் தனியார் துறைக்குத் திருப்பிக் கொடுக்கப்படுவதை ஆதரிக்கும் அரசாங்கக் கொள்கையை ரத்துச் செய்வதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்காக பங்களா தேஷ் நாடெங்கும் 10 இலட்சம் தொழிலாளர்கள் அரசாங்க, தனியார் துறை வங்கிகளையும் கைத்தொழில்களையும் மூடிவிட்டனர். அவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் மேற்கொண்டு இவ்வாறு செய்தனர்.

தனியார் மயமாக்கல் பிரிட்டனிற் பல வட்டாரங்களில் முதலாளித்துவப் பேராசையின் வெளித்தோற்றமெனக் கொள்ளப்படுகிறது. ஒரு பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் பிரிட்டிஷ் தொலைத் தொடர்பு நிறுவனப் பங்குகளைப் பெறுவதற்குப் பல விண்ணப்பங்கள் செய்திருந்தார் என்பது கண்டுபிடிக்கப்பட்ட பொழுது அவர் தம் மூயற்சியைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டார்.

தனியார் மயமாக்கலை எதிர்ப்பவர்கள், அரசாங்கம் வாக்குகளைப் பெறுவதற்காக வருடந்தோறும் 400 - 500 கோடி பவுண் பெறுமதியான தேசிய சொத்துக்களைத் தனியார் துறைக்குக் கையளித்து வருவதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர். புதிதாகத் தனியார் மயமாக்கப்பட்ட ஏகபோக உரிமையுள்ள பயன்பாட்டுச் சேவைகளின் சந்தை ஆதிக்கத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறி விட்டதென்று வேறு சிலர் கூறுகின்றனர். தனியார் மயமாக்கல் போட்டிக்கு ஊக்கமளிப்பதாகவும், பொது நிதிகளை வீணாக்கும் சுறுசுறுப்பற்ற அரச மானியம் பெறும் முயற்சிகளை ஒழித்துவிடுகிறது என்றும் அரசாங்கம் கூறுகிறது. வர்த்தகத் துறை சார்ந்த தீர்மானங்கள் இனியும் அரசியல் இலாபங்களுக்கு உட்பட்டதாக இராது என்றும் அது வலியுறுத்துகிறது. தட்சர் அரசாங்கத்திற்கு கொள்கை

## தனியார்மயமாக்கல் தரும் சுபிட்சம்

பீற்றர் வில்லிஸ் அறுபது ஆண்டுகளுக்கு முன் ஹேட்போஷயார் பண்ணையில் மந்தைக் காப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இன்று அவர் இருக்கும் உயர்ந்த நிலை பற்றி அவர் அன்று கற்பனை கூடச் செய்திருக்க முடியாது. பிரதமர் மாகிரட் தட்சரின் மனக்கண்ணில் தோன்றும் சொத்துகளும் பங்குகளும் சொந்தமாக வைத்திருக்கும் குடிமக்களைக் கொண்ட ஒரு சனநாயக நாடான பிரிட்டனுக்கு வில்லிஸ் தகுந்த தொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

வில்லிஸ், மூன்று சயன அறைகளைக் கொண்ட ஒரு வீட்டை விலைக்கு வாங்கினார். அதன் பெறுமதி இப்பொழுது இரு மடங்காக அதிகரித்திருக்கிறது. அது மட்டுமல்ல அவர் இப்பொழுது தனது கம்பெனியில் பங்கு மூலங்களை வாங்குகிறார். நெஷனல் பிரைட் கொன்ஸோட்டியம் என்ற கம்பெனியில் அவர் பணியாளராகவும், சொந்தக்காரராகவும் பங்காளியாகவும் விளங்குகிறார்.

நெ. பி. கொ. வின் மற்ற ஊழியர்களும் அப்படியே; முகாமை - தொழிலாளர் பங்கு கொள்வனவு காரணமாக பிரிட்டனின் மிகப்பெரிய கப்பற்சரக்கு ஏற்றும் கம்பெனியான நெ. பி. கொ. வின் எல்லா ஊழியர்களும் இன்று அதன் பணியாளர்களாகவும், பங்காளிகளாகவும் சொந்தக்காரர்களாகவும் திகழ்கின்றனர். நெ. பி. கொ. வில் கூட்டுத்திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றும் மைக்கல் சுவிற் இவ்வகைத் தனியார் மயமாக்கலின் முக்கியத்துவத்தை இவ்வாறு விளக்குகிறார்: "மிகப்பெரிய வேறுபாடு என்னவென்றால் இந்தக் கம்பெனியின் கட்டுப்பாடு இதன் பங்காளிகளான பெரும்பாலும் பணிகொள்வோர், ஓய்வூதியம் பெறுவோரின் கைகளில் இருக்கிறது. ஏனைய கம்பெனிகளில் கட்டுப்பாடு பணிகொள்வோரின் கைகளிலில்லை."

அரசாங்கத்திடமிருந்து 5 கோடி 33 லட்சம் பவுண்களுக்கு இக்கம்பெனி 1982ல் கொள்வனவு செய்யப்பட்டபோது கம்பெனியின் செல்வவளம் நேர் எதிர் திசைக்குத் திரும்பிற்று. இது வாங்கப்பட முன் கம்பெனி ஓட்டை உடைகலாக இருந்து பெருந் தொகைப் பணத்தை இழந்து வந்ததோடு, படுமோசமான சேவையையும் அளித்துவந்தது. அது வாங்கப்பட்டது முதல் கம்பெனி தவறான ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை. சென்ற வருடம் மொத்த விற்பனை வரவு 12 சதவீதத்தால் அதிகரித்தது; இலாபம் 45 சதவீதத்தால் அதிகரித்தது. ஒரு பங்குக்கான உழைப்பு 14.3 சதவீதத்திலிருந்து 21.4 சதவீதமாக உயர்ந்தது.

தொடக்கத்தில் ஊழியர்களில் மூன்றிலொரு பகுதியினர் மட்டுமே பங்குகளை வாங்கினர். இப்பொழுது இத்தொகை 65 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. ஊழியர்களிற் பலர் தம் வாழ்நாள் சேமிப்புக்களை முதலீடு செய்தனர்; அல்லது வீடுகளை அடகுவைத்துக் கம்பெனிப் பங்குகளை வாங்கினர். அவர்களில் எவருமே அதற்குமுன் கம்பெனிப் பங்குகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்ததில்லை. தொடக்கத்தில் ஒரு பவுணுக்கு ஒரு பங்கு வாங்கியவர்கள் தம் முதலீடு இப்பொழுது 42 மடங்காக அதிகரித்திருப்பதைக் காண்கின்றனர். இதன் விளைவாக சாதாரண வருமானமுடையவர்களாக இருந்த தொழிலாளர்கள் இப்பொழுது நல்ல விலையுயர்ந்த வீடுகளை வாங்கக் கூடியவர்களாகவும், உலகச் சுற்றுலா மேற்கொள்ளக் கூடியவர்களாக அல்லது தூரதேசங்களிலிருக்கும் உறவினர்களைச் சென்று பார்க்கக் கூடியவர்களாக மாறியுள்ளனர்.

அலுவலகச் சேவை உதவியாளராக இருந்த வில்லிஸ் தொடக்கத்தில் எவ்வளவு முதலீடு செய்தார் என்பதை வெளியிட விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது ஒரு பங்கு 42 பவுணாக உயர்ந்திருந்தாலும் வில்லிஸ் தொடர்ந்து பங்குகளை வாங்கிக் கொண்டேயிருக்கிறார். எல்லாம் நல்லபடியாக நடைபெற்றிருப்பதாக வில்லிஸ் கூறுகிறார். "எனக்குக் கிடைத்திருப்பதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதனால் வாழ்க்கை இலகுவாகிவிட்டது. இப்பொழுது எனக்கு ஒரு வீடிருக்கிறது; முன்பு இருக்கவில்லை. எனது மூலதனம் எப்பொழுதும் வளர்ந்து கொண்டும் அதிகரித்துக் கொண்டுமிருக்கிறது."

ஓளிவு மறைவற்ற ஒரு மானேஜர் தாம் முதலாவதாக 10,000 பவுண் முதலீடு செய்ததாகச் சொன்னார். தமது பங்குகளில் ஒரு பகுதியை விற்றுவிட்டாலும் இப்பொழுது தன்னிடமுள்ள பங்குகளின் பெறுமதி 3,50,000 பவுண் என்றும் அவர் சொன்னார். "அது உங்களுடைய வாழ்க்கையையே மாற்றி விடுகிறது. அதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனாலும் எவ்வளவு வியக்கத்தக்க பிரச்சினைகள்!" என்று அவர் கூறுகிறார்.

வாத நோக்கங்களுமுண்டு; அதாவது பிரிட்டனை சொத்து, பங்கு உடைமையுரிமை கொண்ட ஒரு ஜனநாயக நாடாக்குவதாகும். சோசலிஸத்தைக் ''குழி தோண்டிப் புதைத்து விட'' தாம் விரும்புவதை தட்சர் மறைக்கவில்லை.

தட்சரின் சுதந்திர முயற்சிக் கொள்கைக்கு மக்களிடையே ஆதரவிருக்கிறது என்பதற்கு அத்தாட்சிகளிருப்பதாகத் தோன்றுகிறது. 1979 க்கும் 1987 க்குமிடையில் பிரிட்டனில் பங்குகளைக் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கை 7 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக மும்மடங்கு அதிகரித்துள்ளது. பாரிய பயன்பாட்டுச் சேவைகளான பிரிட்டிஷ் தொலைத் தொடர்புச் சேவை, காஸ் போன்றவற்றில் பங்குகளை வாங்குவதற்குப் பலர் தூண்டப்பட்டனர். காரணம் இவற்றில் சிறு தொகைப் பங்குகளையும் தவணை முறையிற் பணஞ் செலுத்திப் பெறக்கூடியதாக இருந்தமையாகும்.

திறைசேரி அதிகாரி ஒருவரின் பார்வையில் பிரிட்டனின் முன்மாதிரியைப் பல நாடுகள் பின்பற்றக் காரணம், அரசு சிறந்த முதலாளியல்ல என்பதைப் பலர் உணர்ந்து வருவதாகும். ''ஒரு நாட்டையும் அதே வேளையில் ஒரு கைத்தொழிலையும் நடாத்துவது பொருத்தமானதல்ல'' என்று அவர்கூறுகிறார். தனியார் மயமாக்கல், சுதந்திரச் சந்தையை ஆதரிக்கும் கன்சர் வேட்டிங்களுக்கும் சோசலிசத்தை ஆதரிக்கும் தொழிற் கட்சி, அதன் தொழிற் சங்க ஆதரவாளர்களுக்கும் இடையிலான விரிசலை வியக்கத்தக்க வகையில் விரிவடையச் செய்கிறது என்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. தொழிற் கட்சியின் தொழிலாளர், கைத்தொழில் பேச்சாளரான ஜோன் ஸ்மித்தின் கூற்றுப்படி, தனியார் மயமாக்கலுக்கு பொருளாதார நோக்கங்களைவிடக் கூடிய அரசியல் நோக்கங்களுண்டு.

''முதலாவதாக அது, கன்சர் வேட்டிங் கட்சிக்காரர்களின் அடிப்படை எண்ணமான அரசின் போர்வையை நீக்க வேண்டுமென்ற எண்ணத்தை திருப்திப் படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, அது வரிவெட்டுகளுக்கு நிதியளிக்கிறது. மூன்றுவதாக அது பொருளாதாரத்துக்கு இசைவானதல்ல'' அவர் இவ்வாறு மக்கள் சபையில் நடைபெற்ற பேட்டி ஒன்றில் கூறினர்.

தட்சர்வாதம் அரசியல் சூழலைப் பெருமளவுக்கு மாற்றியிருப்பதால் சென்ற காலத்தில் போல தொழிற்கட்சி மீண்டும் தேசிய மயமாக்க வேண்டுமெனக் கோருவதில்லை. ஒரு அமெரிக்க இராஜதந்திரி கூறியது போல, ''தொழிற் கட்சி தேர்தலைப் பொறுத்தவரை நிச்சயமற்ற ஒரு நிலையிலிருக்கிறது'' அண்மையில் பிரிட்டிஷ் தொலைத் தொடர்புச் சேவை பங்குகள் விற்பனைக்கு விடப்பட்ட பொழுது அரசியல் காற்று எப்பக்கம் அடிக்கிறது என்பதை அறிவதற்கு ஒரு துரும்பு கிடைத்தது. தொழிற்சங்க இயக்கம், பங்குகளை வாங்க வேண்டுமென்று தொழிலாளரைக் கேட்டது.

தனியார் மயமாக்கல் முடிவடைந்து விட்டதாக இன்னும் தோன்றவில்லை. வனத்துறை, சிறைச்சாலைகள், உருக்கு, நிலக்கரிக் கைத்தொழில், அஞ்சலகம் என்பவை எதிர்காலத்தில் தனியார் மயமாக்கப்படலாம். அடம்ஸ்மித் நிறுவனத்தைச் சார்ந்த பிறீ, அரசாங்கத்துக்குச் சொந்தமான கைவிடப்பட்ட காணிகளும் எதிர்காலத்தில் விற்கப்படலாம் என்று ஹேஸ்யம் கூறுகிறார். எதிர்காலத்தில் 20000 கோடி ப்வுணுக்கு, கைவிடப்பட்ட காணிகள் விற்கப்படலாம் என்ற அடிப்படையில் நோக்கினுல் தற்போதைய வருடாந்த வீதமான 500 கோடி விற்பனை வீதத்தின்படி இன்னும் 40 ஆண்டுகளுக்குத் தனியார்மயமாக்கல் தொடர்ந்து நடைபெறலாம்.

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களின் கீழ் 287,000 ஹெக்டயர்களாகவும் அதிகரித்தது.

1986ல் உர வினியோகம் 12 சதவீதத்தால் 219,000 மெட்றிக் தொன்களால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பெரும்போகத்தைவிட சிறுபோக காலத்திலேயே கூடுதலாக இடம் பெற்றது. 1986 பெரும்போக காலத்தில் வழங்கப்பட்ட உரம் 5 சதவீதத்தால் 126,000 மெ.தொன்ருக அதிகரித்தது. அதேவேளை சிறு போகத்தின்போது 24 சதவீதத்தால் 93,000 மெ. தொன்ருக அதிகரித்தது.

1977 க்குப் பின்னர் வளர்ச்சியின் முன்னணியில் திகழ்ந்த துறைகள் பிரதானமாக நெல், தனியார் உற்பத்தி, நிர்மாணம், சேவைகள் என்பனவாகும். பயிர் செய் நிலப்பரப்பு அதிகரித்தல் (1977 - 1985 காலப்பிரிவில் 16%), விளைச்சல் அதிகரித்தல் (1977 - 83/1983 - 85 காலப் பிரிவுகளில் 42%) என்பவற்றின் விளைவாக நெல்லுற்பத்தி அதிகரித்திருந்தது. நெல்லுற்பத்தி 1970 - 77 காலப்பிரிவில் 2.5 சதவீதத்தால் அதிகரிக்க 1978 – 86 காலப்பிரிவில் அது 5.0 சதவீதத்தால் அதிகரித்தது என்பது கவனிக்கத்தக்கதாகும். விளைச்சல் அதிகரிப்பதற்கு விருத்தியடைந்த முறைகளும் சாதகமான கால நிலையும் காரணங்களாக அமைந்தன. உற்பத்தி அதிகரித்ததனுல் 1970 – 73 காலப்பிரிவில் 30 சதவீதமாக இருந்த அரிசி இறக்குமதி 1984 - 86 காலப் பிரிவில் 5 சதவீதமாகக் குறைந்தது.

நாட்டு உற்பத்தியாளர் அரிசி விலைகளுக்கும் சர்வதேச விலைகளுக்கும் இடையிலான விகிதாசாரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1978 | – 87% | 1983 | – 114% |
| 1979 | – 79% | 1984 | – 120% |
| 1980 | – 92% | 1985 | – 123% |
| 1981 | – 104% | 1986 | – 141% |
| 1982 | – 111% | | |

# சேவைகளிலான வியாபாரமும் வளர்முக நாடுகளும்

ஜெப்ரி ஸ்கொட்
ஜெக்குவின் மஸ்ஸா

பன்னாடுகளுக்கிடையிலான வர்த்தக ஒழுங்கு முறைகளைப் பலப்படுத்துவதிலிருந்து வளர்முகநாடுகள் பெரும் பயனடையலாம். அத்துடன், கட்டணங்கள், வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கையின் கிழ் தற்போது நடைபெறும் உருகுவே சேவைகள் வர்த்தக சுற்றுப் பேச்சுவார்த்தைகள் போன்றவற்றிலிருந்தும் பயன் பெறலாம். இது இக்கட்டுரை ஆசிரியர்களான வர்த்தக நிபுணர்கள் இருவரினதும் கருத்தாகும்.

ஜெப்ரி ஜே. ஸ்கொட், வாஷிங்டன் நகரிலுள்ள தனியார் துறை ஆய்வு அமைப்பொன்ருன சர்வதேசப் பொருளாதார நிறுவனத்தின் ஆய்வுத் துணைவராவார். இக்கட்டுரை எழுதப்பட்டபோது அந்நிறுவனத்தின் ஆய்வுத் துணைவர் ஒருவராக இருந்த ஜெக்குவின் மஸ்ஸா, இப்பொழுது அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை ஜனநாயக ஆய்வுக்குழுவில் ஒரு பொருளியலாளராகப் பணியாற்றுகிருர். இது மூலக்கட்டுரையின் சுருக்கமாகும். இக்கட்டுரை 'ஜர்னல் ஒப் வேல்ட் டிரேட் லோ' என்ற சஞ்சிகையில் முதலில் பிரசுரமானது.

ஐ. நா. பன்னுட்டு கட்டணங்கள், வர்த்தக ஒப்பந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகள், 1948 ஆம் ஆண்டு இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டபின் எட்டாவது பன்னுட்டு வர்த்தக சுற்றுப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளன. உலக வர்த்தக முறைமை எதிர்வரும் ஆண்டுகளில் கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியுள்ளது. இதற்குக் காரணங்கள் பல. உலகளாவிய மந்தநிலை, வளர்முக நாடுகளின் கடன் பிரச்சினை ஆகிய இரு முனைத் தாக்கங்களிலிருந்து உலக வர்த்தகம் அடைந்து வரும் மீட்சி உறுதியானதாக இல்லை. 1984 ல் 9 சதவீதமாக இருந்த உலக வர்த்தகம் 1985 ல் 4 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி அமைப்பினைச் சார்ந்த பிராந்தியங்களில் வேலையில்லாப் பிரச்சினை உக்கிரமாக இருக்கிறது. இதனுல் புடவை, உருக்கு போன்ற துறைகளில் காப்புவாதத்திற்கு எரிச்சலூட்டும் நிலை தோன்றியுள்ளது. நெருக்கடியான தேர்தல்களை எதிர்நோக்கும் அரசாங்கங்கள் புதிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதனுல் வளர்முக நாடுகளின் ஏற்றுமதித்துறை பாதிக்கப்படும்.

பல வளர்முக நாடுகள் இன்னும் கடுமையான கடன் பிரச்சினைகளையும் வெளிநாட்டு நாணயத் தடங்கல்களையும் எதிர்நோக்குகின்றன. இதனுல் அவை கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அதேவேளையில், அந்நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு ஏற்படும் தடங்கல்கள், அவற்றின் ஏற்றுமதிகளை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சி உபாயங்கள் பாதிக்கப்பட்டு, கடன் இறுப்பு ஒழுங்குகளை மீளமைப்புச் செய்ய வேண்டிய நிலைமையை உருவாக்கலாம்.

இப்பிரச்சினைக்கான காரணங்கள் சுங்கத்தீர்வைகளுக்கான பொது உடன்பாட்டு அமைப்புக்கு அப்பாற்பட்டவையாகும். உலக வர்த்தக முறைமை பலவீனமடைவதற்கு, செலாவணி விகிதங்களின் மிகப் பெருந்தவறுன நிர்வாகமும் வளர்முக நாடுகளின் கடன் பிரச்சினையின் தாக்கங்களும் முக்கியமான காரணங்களாகும். வர்த்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகாண வேண்டுமாயின் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் இதற்குச் சமனுன முன்னேற்றம் ஏற்படுவது அவசியமாகும். ஆனுல் சு. தீ. பொது உடன்பாடே சிறப்பாகச் செயற்படவில்லை. இவ்வொப்பந்தம் அண்மைக்காலத்தில் அடிக்கடி தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளது. ஏனெனில், அதன் விதிகள் உலக வர்த்தகத்தின் பல பிரிவுகளை உள்ளடக்காதிருக்கிறது; பல்தார் ஒழுங்குகள், சுயகட்டுப்பாட்டு ஒப்பந்தங்கள், போன்ற இவ்வொப்பந்தத்திற்கு அப்பாற்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் ஒப்பந்த ஏற்பாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன; தகராறுகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள், வல்லரசுகளின் துஷ்பிரயோகங்களைத் தடுத்தத் தவறிவிட்டன.

இப்பேச்சுக்களை (GATT) அமைப்பு ஆரம்பிக்கையில் அவற்றின் முன்னுள்ள பிரச்சினைகளில் சேவைகளில் வர்த்தகம் என்பதே மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும். பொருட்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளிலிருந்து புறம்பானதோர் அடிப்படையில் சேவைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளை நடாத்த உருகுவேயில் உடன்பட்ட போதிலும், இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகளின் தலைமையிலான வளர்முக நாடுகள் பல் பிரச்சினைகளை எழுப்பியுள்ளன. சேவைகள்பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டுமா, அப்படி நடாத்த வேண்டுமானுல் 'அங்டாட்' போன்ற மற்ற ஐ. நா. அமைப்புகளை விட்டுவிட்டு சு.தீ.பொ. ஒப்பந்த அமைப்பினுல்தான் நடாத்தப்பட வேண்டுமா என்பது போன்ற பிரச்சினைகளை இந்நாடுகள் கிளப்பியுள்ளன. இதற்குமாருக அமெரிக்காவும் ஏனைய கைத்தொழில் நாடுகளும் (GATT) ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் சேவைகளைச் சேர்த்துக்கொள்வது அத்தியாவசியம் என்று அதுவே இவ்வொப்பந்தம் எவ்வளவுக்குப் பிர

யோகிக்கத்தக்கது என்பதற்கு அளவுகோலாகும் என்றும் கருதின.

மொத்தத்தில், புதிய பேச்சு வார்த்தைகளில் சேவைகளைச் சேர்த்துக் கொள்வது பற்றிய வளர்முக நாடுகளின் கவலை சு. தீ. பொ. ஒ.ன் உருவ அமைப்பையும் அது செல்லும் திசையையும் பற்றிய அடிப்படைப் பிரச்சினையுடன் தொடர்புடையதாகும். சு. தீ. ஒப்பந்தம் என்பது குறிப்பாக உற்பத்திப் பொருட்களிலும் வியாபாரப் பொருட்களிலுமான வியாபாரத்தின் மேம்பாட்டுக்குரிய ஒரு வாகனமாகவே வளர்முக நாடுகளுக்குத் தென்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியை விடத் துரிதமாக வளர்ந்திருக்க 1973ல் 7 சதவீதமாகவிருந்த வளர்முக நாடுகளின் உற்பத்திப் பொருள் ஏற்றுமதி உலக வர்த்தகத்தில் 1983 ஆம் ஆண்டிற் கூட 12 சதவீதமாகவே இருந்துள்ளது. சேவைகள் பற்றிய பேச்சு வார்த்தைகள், நீண்டகால வர்த்தகப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கு வளர்முகநாடுகள் விரும்பவில்லை. இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பான மேலும் நான்கு பிரச்சினைகள் இருப்பதாகவும் வளர்முக நாடுகள் காண்கின்றன: (1) 'மிக அதிகமாக ஆதரவளிக்கப்படும் நாடு' என்ற கோட்பாடு எவ்வாறு வர்த்தக ஒப்பந்தங்களுக்கும் சேவைகளுக்கும் பிரயோகிக்கப்படும்; (2) தேசிய நடத்துகைக் கோட்பாடு, வெளிநாட்டு சேவைப் போட்டியாளர்களுக்குக் குறிப்பாக வங்கித்தொழில், காப்புறுதி, தொலைத்தொடர்புச் சேவைகள்என்பவற்றில்எவ்வாறு பிரயோகிக்கப்படும் (3) சு. தீ. பொ. ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் சேவைகளைச் சேர்ப்பதனால் வளர்முகநாடுகள் புதிய தகராறுகளுக்கும் பதில் நடவடிக்கைகளுக்கும் தள்ளப்படக் கூடிய சாத்தியக்கூறு; (4) தொழிலாலர் சேவைபோன்ற சில பிரச்சினைகள் பேச்சு வார்த்தைகளிற் சேர்க்கப்படாமல் விடப்படலாம்.

அக்கறைக்குரியனவாகவுள்ள பிரச்சினைகளையும் நலன்களையும் புரிந்து கொள்வதில் கவனஞ் செலுத்தப்படாது விட்டால் சேவைகள் பற்றிய பிரச்சினை புதிய பேச்சுவார்த்தைகளுக்குத் தடங்கலாக அமையலாம். சேவைகள் ஒரு ''வடக்கு—தெற்கு''ப் பிரச்சினையாகும்; வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் பயன் கைத்தொழில் நாடுகளைச் சென்றடைய, வளர்முகநாடுகள் பாதிக்கப்படுகின்றன என்பது தற்போது நிலவும் கருத்தாகும். ஆனால், சேவைகள் வர்த்தகத்தில் வளர்முக நாடுகளுக்கும் அவற்றின் பொருளாதார அபிவிருத்தியையும் சென்மதி நிலுவையையும் பொறுத்தவரை தீர்க்கமான அக்கறையுண்டு.

## சர்வதேச சேவைகள் கொடுக்கல் வாங்கல்

சேவைத்துறை சிக்கலானதும் பல்வகையானதுமாகும். உயர் நிலைத் தொழினுட்பத் தொலைத் தொடர்புகளிலிருந்து தாழ்நிலைத் தொழினுட்பச் சிகை அலங்காரம் வரை இது பலதரப்படுகிறது. இதில் பலவகையான நிதி, போக்குவரத்து, நிர்மாணப் பொறியியல் சேவைகள் அடங்குகின்றன. சேவைக் கைத்தொழில்களின் பல்வகைத் தன்மையானது, சர்வதேச சேவைகள் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கி விதிகள், ஒழுங்குமுறைகள் தொகுதியொன்றை வகுப்பதைச் சிக்கலானதொரு கைங்கரியமாக ஆக்குகிறது. கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட சேவைகள் பற்றிய தரவுகளில்லாமையால், எதிர்காலத்தில் நடைபெறத்தக்க பேச்சுவார்த்தைகளில் நன்மையாகவோ தீமையாகவோ இருக்கப்போகின்றவை அவை என்பதைக் கணிப்பது கஷ்டமாகும். அச்மூட்டத்தக்க இவ்வாறான தடைகள் இருப்பதனால், பலநாடுகள், சேவைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் இறங்கத்தயங்கின. பொருளாதார வளர்ச்சிக்குச் சேவைகள் எத்துணை முக்கியமானது, உலக வர்த்தகத்தில் சேவைகள் வகிக்கும் பங்கு என்பனபற்றிய தெளிவற்ற நிலையும் உள்ளது.

சேவைகள் வணிகம் என்பது புதியதொன்றல்ல. ஆயினும், அது சர்வதேச வர்த்தக முறையில் ஒரு முக்கிய பிரச்சினையாகும். சென்ற பத்தாண்டுகளில் உலகளாவிய சேவைகள் ஏற்றுமதியானது வியாபாரப் பொருட்களின் ஏற்றுமதியுடன் இணைந்த நிலையில் வளர்ந்து, இப்பொழுது அது ஆண்டொன்றுக்கு 40,000 கோடி டொலராகவுள்ளது. இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் மூன்று:

முதலாவதாக, சேவைகளின் ''வணிகத்தன்மை'' வியக்கத்தக்க அளவு அதிகரித்துள்ளது. புதிய தொழினுட்பமுறைகள், சர்வதேச ரீதியில் கிடைக்கக் கூடியதாகவுள்ள சேவைகளின் வகையையும் எண்ணிக்கையையும் பெருக்கியுள்ளன. தொலைத் தொடர்புப் புரட்சியானது, கைத்தொழில் அமைப்புகளையும் தொழிற் சந்தைகளையும் மாற்றியமைத்து, சர்வதேச ரீதியிலான சேவைகளுக்குப் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. புதிய தகவல் தொழினுட்ப முறைகள், கூடுதலாக ஒருங்கிணைக்கப்பட்ட பல்துறைத் தாபனங்களின் உற்பத்தி அடித்தளங்களை பன்முகப்படுத்த உதவியுள்ளன. இப்போக்குகள் சேவைகளின் உற்பத்தி, வணிகம் என்பவற்றில் நிபுணத்துவத்தை உருவாக்குவதற்கும், சிக்கனங்களைக் காண்பதற்கும் உற்சாகமூட்டியுள்ளன.

இரண்டாவதாக, சேவைகளுக்கும் பொருட்களின் உற்பத்திக்குமிடையிலான தொடர்புகள் சேவைகள் வணிகத்தைப் பெருமளவில் விரிவாக்கியுள்ளன. இப்பொழுது சேவைகள் என்பவை உற்பத்தி, சந்தைப்படுத்தலின் ஒரு பிரிக்கமுடியாத பாகமாக ஆகிவிட்டன. சேவை

கள், அவசியமான உள்ளீடுகளை அளிக்கின்றன (பொறியியல் வடிவமைப்பிலிருந்து தரவுகள் சீராக்கல்வரை); உற்பத்திச் செய்முறையை உந்துகின்றன. (உதாரணமாக, இயந்திரமனிதத் தொழிற்பாடு, தன்னியக்க இணைப்புத் தொகுதிகள்;) கொடுக்கல் வாங்கலுக்கு நிதியளித்து, காப்புறுதி செய்வது முதல், விற்பனைக்குப் பின்னான பேணற் சேவைகள் வரை பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்கான வசதிகளை அளிக்கின்றன. மேலும், உற்பத்திப் பொருட்கள் மென்மேலும் நுணுக்கமிக்கவையாக ஆகும் போது மூலப்பொருட்கள் குறைவாகவும் சேவைகள் கூடுதலாகவும் தேவைப்படுகின்றன. 1960ம் ஆண்டுத் தொடரில் ஒரு கன்ணித் தொகுதியை இயக்குவதற்குத் தேவைப்பட்ட மென்பொருட்கள் போன்ற சேவைகள் கணணித் தொகுதிக்கான செலவில் 20 சதவீதமாக இருந்தது; இன்று கணரகப் பொருட்களுக்கான செலவு 20 சதவீதமாகவும் மீதி மென் பொருட்கள், பொறியியல், உசாத்துணைச் சேவைகள் என்பவற்றுக்காகவும் செலவிடப்படுகிறது.

மூன்றாவதாக, வர்த்தக, மூலதனச் சந்தைகள் தாராளமயமாக்கப்பட்டதனல், கூடுதலாக ஒன்றையொன்று நம்பியிருக்கும் சந்தைகளில் சேவைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. 1978 முதல் 1983 வரையான காலப்பிரிவில் உலகளாவிய சேவைகள் ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு 11.25 சதவீதம் வளர்ச்சியடைந்தது. இது வியாபாரப் பொருட்களின் ஏற்றுமதி வளர்ச்சி வீதத்தை ஒத்ததாகும். 1965 - 1969 ல் 660 கோடி டொலராக இருந்த நேரடி வெளிநாட்டு முதலீடும் உலகளாவிய நிலையில் கணிசமாக 1980 - 83 ல் 4940 கோடி டொலராக அதிகரித்தது. இம்முதலீடுகள் பன்னட்டுக் கம்பெனிகள் கொள்வனவுகளை ஒரு முகப்படுத்துவதைச் சாத்தியமாக்கி, சேவைகள் விரிவடைய வழி செய்தது. முதலீட்டிலும் தொழினுட்ப இடமாற்றத்திலும் ஏற்பட்ட இத்தகைய நிகழ்ச்சிகள், வளர்ச்சியடையும் நாடுகளில் கவலையைத் தோற்றுவித்துள்ளன.

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் பொருளாதாரச் செயற்பாட்டில் ஒரு பெரும் பகுதி சேவைகள் சார்பானவையாகும். உதாரணமாக அமெரிக்காவில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 67 சதவீதமும், கமத்தொழில் சாராத தொழில் வாய்ப்புகளில் 74 சதவீதமும் சேவைகள் துறையிலேயே காணப்பட்டன. இதற்கு மாருக, வளரும் நாடுகளில் தேசிய மொத்த உற்பத்தியில் சேவைகளின் பங்கு, தாழ்ந்த வருமானமுள்ள பொருளாதாரங்களுக்கு 29 சதவீதமும் மத்திய தர வருமானமுள்ள பொருளாதாரங்களுக்கு 49 சதவீதமும் உயர் நடுத்தரங்களுக்கு 52 சதவீதமுமாகவுள்ளது. சேவைகளில் வேலைவாய்ப்புகள் நேபாளத்தில் மொத்தத் தொழிலாளர் தொகையில் 5 சதவீதமாகவும் குவைத்தில் 64 சதவீதமாகவும் உள்ளது. இப்புள்ளி விவரங்கள், அபிவிருத்தியடைந்த நாடுகளை விட வளரும் நாடுகளில் சேவைகள் துரித வளர்ச்சியடைந்துள்ளன என்ற உண்மைக்குத் திரையிடுகின்றன. 1973ம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்குமிடையில் கைத்தொழில் நாடுகளில் சேவைகளின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2.1 சதவீதமாகும்; வளரும் நாடுகளின் உயர் வருமான மட்டங்களில் 1.3 சதவீதமாகவும் மத்திய, தாழ் தரங்களில் முறையே 5.3, 5 சதவீதமாகவுமுள்ளது.

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை கைத்தொழில் நாடுகளதும் வளர்முக நாடுகளதும் உலகளாவிய சேவை ஏற்றுமதி பற்றிய விவரங்களைக் காட்டுகிறது. கைத்தொழில் நாடுகளின் ஆதிக்க நிலை சரிந்திருப்பினும் அவையே சேவைகள் ஏற்றுமதியில் மிகப் பெரும் பங்கினை வகிக்கின்றன. 1984 ல் கைத்தொழில் நாடுகள் சேவைகள் ஏற்றுமதியில் 74 சதவீதத்தைப் பெற்றன. 1975 ல் இது 81 சதவீதமாக இருந்தது. வளர்முக நாடுகளின் ஏற்றுமதி வீதம் சென்ற 10 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சராசரி 27 சதவீதமாக வளர்ந்துள்ளது. இருப்பினும் உலகச் சேவைகள் ஏற்றுமதியில் அவை பெறும் பங்கு 26 சதவீதமேயாகும். வளரும் நாடுகளின் ஏற்றுமதி மிக வேகமாக தனியார் பொருட்கள், சேவைகள், வருமானம் என்பவற்றிலேயே வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வேற்றுமதிகள் 1975 ல் 750 கோடி விசேட எடுப்பனவு உரிமைகளில் (எஸ். டி. ஆர்.) இருந்து 1984 ல் 3970 கோடியாக வளர்ந்துள்ளன. இது வளர்முக நாடுகளின் மொத்தச் சேவை ஏற்றுமதியில் அரைவாசிக்கு ஓரளவு குறைந்ததாகும். இது மிக முக்கியமானதாகும். ''பிற தனியார் சேவைகள்'' என்ற வகுதியே புதிய பேச்சு வார்த்தைகளில் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறது என்பதே இதற்குக் காரணமாகும்.

கூட்டுமொத்தமான சென்மதி நிலுவைப் புள்ளிவிவரங்கள் வளர்முக நாடுகளுக்கிடையிலான பல வேறுபாடுகளை மறைத்துவிடுகின்றன. வளரும் நாடுகள் அவற்றின் சேவைகள் கணக்குகளின் அளவிலும் அவற்றின் சேவைத்துறைகளின் சர்வதேசப் போட்டித்தன்மையிலும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன. ஆறு பெரிய வளரும் நாடுகளின் 1980 ஆம் ஆண்டுக் கணக்குகளின் பகுப்பாய்வு, பெரும் வெளிநாட்டுக் கடன் பளுக்களைக் கொண்ட நாடுகளுக்கும், குறைந்த கடன் பளுவுள்ள நாடுகளுக்குமிடையில் பலத்த வேறுபாடுகள் இருப்பதைக் காட்டுகின்றது.

பெருங்கடன் பளுவுள்ள வளரும் நாடுகள் (பிரேசில், மெக்சிக்கோ, ஆர்ஜன்ரீன), கடனி

றுத்தல் காரணமாக புலப்படாத பெரும் பற்ருக்குறைகளைக் கொண்டுள்ளன. கடன் பிரச்சினைகள் புதியபேச்சுவார்த்தைகளில் இடம்பெருவிடினும் அவை இப்பிரச்சினை மீது மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். கடனிறுப்பல்லாத சேவைகளும் மற்றும் தனியார் சேவைகளும் இந்நாடுகளின் சென்மதி நிலுவையில் குறைந்தளவு பாதிப்பையே ஏற்படுத்துகின்றன. மெக்சிக்கோவைப் பொறுத்தவரை, பிற தனியார் சேவைகள் கடனிறுப்பல்லாத சேவைகளில் ஒரு மிகைப்பாட்டைத் தோற்றுவிக்க உதவுகின்றன. மேற்கூறிய மூன்று நாடுகளிலும் கடனிறுப்புச்சேவைகள், பிறசேவைகளின் வெளிச் செலவில் பெரும் பகுதியை விழுங்கிவிடுகின்றன. 1980ல் முதலீட்டு வருமானம் மெக்சிக்கோ, பிரேசில், ஆர்ஜன்டைஞ ஆகிய நாடுகளின் சேவைகள் செலவினத்தின் முறையே 52, 64, 44, சதவீதங்களுக்குக் காரணமாக அமைந்தது. 1984 அளவில் இவை 71, 77, 69 சதவீதமாக உயர்ந்தன.

இதற்கு மாருக, குறைந்த கடன் பளுவுள்ள வளரும் நாடுகள் (இந்தியா, சிங்கப்பூர்) வலுவான சேவைகள் கணக்குகளைக் கொண்டுள்ளன. இருநாடுகளும் பாரம்பரியமாக மேலதிக தொகைகளைக் கொண்டவையாகும். எனினும், இந்தியா 1982ல் ஒரு சிறு தேறிய பற்ருக்குறையைக் கொண்டிருந்தது. ''பிற சேவைகள்'' முதனிலையான வருமான வழியாகும். 1983ம் ஆண்டின் இந்தியாவினதும் சிங்கப்பூரினதும் மொத்த சேவைகள் வருமானத்தில் முறையே 60 சதவீதமும் 36 சதவீதமும் ''பிற சேவைகளி'' லிருந்து கிடைத்தது.

வளரும் நாடுகளின் பிரச்சினைகள்

சேவைகள் அபிவிருத்திக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதை வளரும் நாடுகள் நீண்டகாலமாக உணர்ந்து வந்துள்ளன

**உலக சேவைகள் ஏற்றுமதி**
*நூறு கோடி விசேடபெறல் உரிமைகள் (எஸ். டி. ஆர்)*

| | ஆண்டு | உலகம்** | கைத்தொழில் நாடுகள் | வளரும் நாடுகள் |
|---|---|---|---|---|
| கப்பற்சரக்கேற்றல் | 1975 | 23.0 | 20.2 | 2.8 |
| | 1980 | 42.2 | 35.4 | 6.8 |
| | 1984 | 47.3 | 36.5 | 10.8 |
| பிறபோக்குவரத்து | 1975 | 27.4 | 21.7 | 5.6 |
| | 1980 | 61.1 | 46.2 | 14.9 |
| | 1984 | 71.6 | 53.1 | 18.5 |
| பிரயாணம் | 1975 | 35.4 | 26.3 | 8.8 |
| | 1980 | 76.9 | 54.0 | 22.9 |
| | 1984 | 92.3 | 65.4 | 26.9 |
| பிறதனியார் பொருட்கள், சேவைகள், வருமானம் | 1975 | 47.3 | 39.6 | 7.5 |
| | 1980 | 108.5 | 84.5 | 24.0 |
| | 1984 | 139.7 | 100.0 | 39.7 |
| பிற அரசகருமப் பொருட்கள், சேவைகள், வருமானம் | 1975 | 11.9 | 9.8 | 2.1 |
| | 1980 | 23.3 | 19.8 | 3.4 |
| | 1984 | 32.6 | 28.3 | 4.3 |
| மொத்தச் சேவைகள் (முதலீட்டு வருமானம் தவிர) | 1975 | 145.0 | 117.6 | 26.8 |
| | 1980 | 312.0 | 239.9 | 72.0 |
| | 1984 | 383.5 | 283.3 | 100.2 |

* ஒரு விசேட பெறல் உரிமைக்கான அமெரிக்க டொலர்கள், ஆண்டுச் சராசரி: *1975, 1, 21415; 1980, 1. 30153; 1984, 1.02501.*

* செம்மையாக்கல் காரணமாக உலகக் கூட்டுத்தொகை வித்தியாசப்படலாம்.

குறிப்புகள்

1. ''கப்பற் சரக்கேற்றல்'' என்பது கேள்வு, கப்பலேற்றலின்போது இடம் பெறும் விநியோகச் சேவைகள், ''கப்பலேற்றுகையில் அசையத்தக்க பொருட்களுக்கான காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கியதாகும்.'' ''பிற காப்புறுதிக் கொடுக்கல் வாங்கல்கள் பிறதனியார் பொருட்கள், சேவைகள், வருமானம்'' என்பவற்றில் சேர்க்கப்படிருப்பதைக் கவனிக்க.
2. ''பிற போக்குவரத்து'' என்பதில் பயணிச்சேவைகள் துறைமுகச் சேவைகள், வாடகைக் கலங்கள் என்பன அடங்கும்.
3. ''பிரயாணம்'' என்பதில் சர்வதேச போக்குவரத்தைத் தவிர எல்லா உல்லாச பிரயாணங்களும் வணிகப்பிரயாணம், மாணவர் பரிவர்தனை என்பன அடங்கும்.
4. ''பிறதனியார் பொருட்கள், சேவைகள், வருமானம்'' என்பதில் தொழிலாளர் வருமானம், சொத்து வருமானம், அனேகமாக உரிமைப்பணம், கட்டணம் என வழங்கப்படும் நிதியல்லாத கண்ணுக்குப் புலப்படாத சொத்துக்கள்; தேறிய கட்டுப்பணம், அல்லது உரிமைக் [கோரிக்கைகள், தொலைத்தொடர்புகள் விளம்பரம், தரகு, முகாமை, கண்ணுக்குப் புலப்படும் சொத்துக்களின் குத்தகை அல்லது வாடகைப் பணம், ஒப்பப்பணம், பதனிடல், பழுதுபார்த்தல், உயர்தொழில் அல்லது தொழினுட்பச் சேவைகள்'' என்பன அடங்கும்.
5. ''பிற அரசகருமப் பொருட்கள், சேவைகள், வருமானம்'' என்பதில் அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் பொதுவான கொடுக்கல் வாங்கல்கள் அடங்கும்.

மூலம்: சர்வதேச நாணய நிதியம், சென்மதிநிலுவைப் புள்ளிவிவரங்கள், ஆண்டு நூல், பகுதி II (1982, 1985).

சேவைகள் ஒரு நாட்டின் போக்குவரத்து, வங்கித்தொழில், காப்புறுதி, தொலைத் தொடர்புகள் போன்றவற்றை உள்ளடக்கிய அடிப்படைப் பொருளாதார உள்ளமைப்பைக் கொண்டதாகும். அபிவிருத்தி சம்பந்தமான ''மனிதாபிமான'' பிரச்சினைகளான சிறந்த சுகாதாரம், கல்வி, உணவு விநியோகம் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சேவைகள் மிக முக்கியமானவையாகும். கைத்தொழில் நாடுகளிலிருந்து வளரும் நாடுகளுக்குத் தொழினுட்பத்தை அனுப்புவதற்கு ஒரு முக்கிய வழியாகவும் சேவைகள் விளங்குகின்றன. அத்துடன் சேவைகள், உற்பத்திப் பொருட்களையும் விளைபொருட்களையும் விநியோகிப்பதிலும்

முக்கிய பங்கு பெறுகின்றன. இத்தொடர்புகள், 'அங்டாட்' அறிக்கையொன்று கூறுவதுபோன்று, ''சேவைகள், நாடுகளின் எல்லா மட்டங்கிய அபிவிருத்திச் செயலாற்றுகையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன''.

வளரும் நாடுகள், அபிவிருத்திக்கு சேவைகள் எத்துணை முக்கியமானவை என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், அவை சேவைகள் வணிகம் தாராளமயமாக்கப்படுவதைக் குறித்து அஞ்சுகின்றன. தாராளமயமாக்கல், அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக் கொள்கைகளை நிர்வகிப்பதற்கும் தடங்கலாக அமையும் என அவை பயப்படுகின்றன. பயன் சிறிதாகவும் இழப்பு பெரிதாகவும் இருக்குமென அவற்றுக்குத் தோன்றுகிறது. அவற்றின் கவலை மூன்று கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது.

வளரும் நாடுகளுக்கு சேவை வணிகத்தில் அனுகூலமில்லை. அவ்வாறிருக்க சேவைவணிகம் தாராளமயமாக்கப்பட்டால் வளரும் நாடுகளுக்கு எவ்வித பயனுமில்லை என்று அவை கருதுகின்றன. தாராளமயமாக்கல் தேசிய இறைமையையும் பாதுகாப்பையும் பாதிக்கும் என்றும் அவை கருதுகின்றன. தாராளமயமாக்கப்பட்டால், இறக்குமதிகள் பெருகி, உள்நாட்டுச் சேவைகள் தொழிலைப் பாதிக்கும். அத்துடன், ஒரு பிரேசிலியத் தூதர் கூறியது போல, ''வளரும் நாடுகள் நிரந்தரமாக சேவைகளையும் உயர் தொழினுட்பத்தையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்குத்தள்ளப்படும்''.

ஒப்பீட்டு அனுகூலம் என்ற பாரம்பரியக் கொள்கை, வர்த்தகப்பொருள் வணிகப் பாங்கு, சம்பந்தப்பட்ட காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதைக் காட்டுகின்றது. ஒப்பீட்டு அனுகூலக் கொள்கை, சேவை வணிகத்துக்கும் பொருந்துகிறது என்பது அண்மைய ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. பிரிட்டிஷ் பொருளியலாளர்களான பிரெயின் ஹிண்ட்லியும் அலாஸ்டயர் சிமித்தும், ''சேவைகள், பொருட்களிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபடுகின்றன; அவற்றின் மீது ஆழ்ந்த கவனஞ் செலுத்தப்பட வேண்டும். ஆனால், ஒப்பீட்டு அனுகூலக் கொள்கையின் சக்திவாய்ந்த தர்க்கமானது இவ்வேறுபாடுகளைக் கடந்து நிற்கிறது'' என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அதே போன்று, அண்ரே சபீரும் ஏன்ஸ்ட் லுட்சும் உலக வங்கி செயற்கட்டுரையொன்றில் ஆபரிமிதமான பௌதிக, மனித வளங்களைக் கொண்டநாடுகள் அனேகமாக சேவைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக முடியும் என்று கூறியுள்ளனர். அவர்களின் காண்பு, அபிவிருத்தியடைந்த நாடுகளிடமே ஒப்பீட்டு அனுகூலம் உள்ளது என்ற கருத்தை உறுதிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எனினும், தாராளமயமாக்கப்பட்ட சேவைகள் வணிகத்திலிருந்து வளரும் நாடுகள் எப்பயனையும் அடையமாட்டா என்பது இதற்குப் பொருளன்று.

பொருள் வணிகத்திற் போன்று, சேவைகளிலான சர்வதேச வணிகத்திலும் கூடிய வணிக ஓட்டத்திலிருந்தே பயன்கள் கிடைக்கின்றன. உள்நாட்டுச் சந்தையில் கிடைப்பதைவிட மலிவாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் சேவைகளை இறக்குமதி செய்யமுடியும். இதனால் அரிதான பொருளாதார வளங்களை திறமையான வகையில் ஒதுக்க இயலுகிறது. மேலும், ஒரு நாட்டிற்கு சேவைகள் வணிகத்தில் சிறந்த அனுகூலம் இருக்கக் கூடுமாயினும், சிலசேவைகளை ஏற்றுமதி செய்வதில் இதற்கு ஒப்பான அனுகூலம் இருக்க முடியும். பல வளரும் நாடுகள் வெற்றிகரமாகச் சேவைகளை ஏற்றுமதி செய்துள்ளன. உதாரணமாக கொரியாவும் இந்தியாவும் நிர்மாணச் சேவைகளையும் சிங்கப்பூர் போக்குவரத்து, நிதிச் சேவைகளையும் ஏற்றுமதி செய்துள்ளன.

உதாரணமாக், வளரும் நாடுகள் உள்நாட்டில் பாதைகள் அமைத்தல், பாலங்கட்டுதல், நீர்வழிகள் அமைத்தல் போன்ற வற்றில் பெற்ற அனுபவத்தை வெளிநாடுகளுக்கு நிர்மாணச் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்குப் பயன்படுத்தியுள்ளன. கொரியாவின்ஹூயுண்டாய்என்ஞ்சினியரிங் அண்ட் கன்ஸ்ரக்ஷன் கம்பெனி உலகின் மிகச்சிறந்த ஐந்து ஒப்பந்த வேலைக் கம்பெனிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இக்கம்பெனி விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளிலும் தென்னாசியாவிலும் துறைமுகங்கள், கப்பற்றுறைகள், கைத்தொழில் பொறித்தொகுதிகள், வர்த்தக, வாழிடக் கட்டிடங்கள் என்பவற்றை நிர்மாணிக்கிறது. அதன் மிக்ப் பிரபல்யமான கட்டுவேலை 93 கோடி டொலர் செலவிலான சவூதி அரேபியா, ஜுபைல் துறைமுகமாகும். பிரேசிலிய நிர்மாண, பொறியியல் தாபனமான மெண்டஸ் யூனியர் எ.ஸ்.ஏ. வெளிநாடுகளில் 12,000 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. தென் அமெரிக்கா வெங்கணும், மத்தியகிழக்கிலும் ஆபிரிக்காவிலும் இக்கம்பெனிக்கு 200 கோடி டொலர் பெறுமதியான வேலை ஒப்பந்தங்கள் உள்ளன.

பாரிய சர்வதேசத் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்துவதில் வளர்ந்துவரும் போக்கும், வளரும் நாடுகளுக்குப் புதிய வணிக வாய்ப்புகளை அளிக்கிறது. அனேக திட்டங்கள் பாரியனவாகவும் சிக்கலானவையாக உள்ளன. ஆதலால் இவற்றைக் கூட்டுக் கம்பெனிகளும் கூட்டு முயற்சிகளுமே சிறப்பாக முகாமை செய்து செயற்படுத்த முடியும். கம்பெனிகள் பன்னாட்டுத் தாபனங்களுடன் இணைந்து சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியும். இது, பாரிய திட்டங்களில் ஆபத்துக்களைக் கம்பெனிகள் இணைந்து ஏற்க வேண்டியுள்ள

வங்கித்தொழில், காப்புறுதித் துறை ஆகியவற்றில் மிக முக்கிய மானது என்பது எண்பிக்கப்பட்டுள்ளது.

தொழினுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமானது, செலவு குறைந்த, கைதேர்ந்த தொழிலாளரின் உழைப்பினால் கிடைக்கும் அனுகூலத்தை நன்கு பயன்படுத்த உதவுகின்றது. சர்வதேச தொலைத் தொடர்பு வலையமைப்பினூடாக வெளிநாட்டுக் கூட்டுத்தாபனங்களுடன் இணைக்கப்பட்ட தரவு ஒழுங்குபடுத்தும் நிலையங்களும் பொறியியல் வடிமைப்புக் கூறுகளும் இந்தியா, கொரியா போன்ற நாடுகளில் ஏற்கனவே செழிப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன. வளரும் நாடுகள், விமானக்கம்பெனி போன்ற பாரிய மூலதனம் தேவையான கைத்தொழில்களிற் கூட தொழிலாளர் வகையில் அவற்றின் ஒப்பீட்டு அனுகூலத்திலிருந்து நன்மையடையலாம். சிங்கப்பூர் எயார்லைன்ஸ் கம்பெனி உலகிலேயே செயற்றிறமை மிக்கதொரு கம்பனியாகும். இதற்குக் காரணம், மூலதன வகையில் அதற்குள்ள அனுகூலமன்று; குறைந்த தொழிலாளர் செலவும் சிறந்த சேவையுமாகும்.

பொருளாதாரத்தை வெளிநாடுகளுக்குத் திறந்துவிடுவது அந்நாடுகளின் தொடக்க நிலையிலுள்ள கைத்தொழில்களைப் பாதிக்கும் என அவை கவலைப்படுகின்றன. வங்கித்தொழில், காப்புறுதி, தொலைத்தொடர்பு போன்ற பல கைத்தொழில்களில் பாரிய பல்நாட்டுத் தாபனங்கள் ஆதிக்கஞ் செலுத்த, வளர்முக நாடுகளிடம் போதிய மூலதனமும் பயனுள்ள வகையில் போட்டியிடுவதற்கு அனுபவம் வாய்ந்த ஆளணியும் இல்லாமையினால் அவற்றின் நிலை தெளிவாகப் பாதகமானது என்று அவை கருதுகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் சேவைக் கைத்தொழிலுக்கு அளிக்கப்பட்டிருப்பது போன்ற பலமான பாதுகாப்புப் போன்ற பாதுகாப்பு வளர்ந்துவரும் தம் சேவைகள் தொழிலுக்கும் அவசியமென வளரும் நாடுகள் வாதிடுகின்றன. அவற்றின் வாதங்கள், வியாபாரப் பொருள் வணிகத்திலும் பல்நாட்டு அமைப்புகளின் சூறையாடும் போட்டி பற்றிய கவலையைப் பிரதிபலிக்கின்றன.

### பால்ய கைத்தொழில் பாதுகாப்பு

''பால்ய'' கைத்தொழில்கள் அவற்றின் இயல்பான ஒப்பீட்டு அனுகூலத்தைப் பயன்படுத்தத்தக்க நிலையை அடையும் வரை அவற்றிற்கு சர்வதேச வணிக விதிகள் பாதுகாப்பளிக்க அனுமதிக்கின்றன. அத்தகைய பாதுகாப்பு, வளரும் கைத்தொழில்களுக்கு, பரீட்சைக் காலத்தையும் நிதிநெருக்கடியையும் கடப்பதற்கு உதவுகின்றது. பாதுகாப்பின்றி ''பால்ய'' கைத்தொழில் எதுவும் ஒருபோதும் வளரமுடியாது எனக் கருதப்படுபடுகிறது.

அத்தகைய பாதுகாப்புக்கு உதாரணமாக அனேகமாக குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலுக்கு அளிக்கப்படும் இறக்குமதி நிவாரணம் எடுத்துக்காட்டப்படுகிறது. எவ்வாறுயினும் சேவைகளைப் பொறுத்தவரை, ''பால்ய கைத்தொழில் பாதுகாப்பு'' என்பதற்கு விரிவான பொருள் கொள்ளப்படுகிறது. சர்வதேச ரீதியில் போட்டிநிலைப் பொருளாதார வளர்ச்சிக்கு, வளர்ந்து வரும் சேவைகள் பாதுகாக்கப்படுதல் அவசியமாகும் என வளரும் நாடுகள் வாதிக்கின்றன. வேறு வார்த்தைகளிற் சொன்னால், ஒரு சக்திவாய்ந்த உள்நாட்டுச் சேவையின் நீண்டகாலப் பயன், பாதுகாப்புக்கான குறுகியகாலச் செலவை மிகைத்துவிடுகிறது.

ஒரு 'பால்ய' கைத்தொழிலின் பரந்த அல்லது குறுகிய சிறப்பியல்பு உட்படுத்தப்பட்டாலும் அதே வினாக்களே கேட்கப்பட வேண்டும்: பாதுகாப்பின் பயன்கள், செலவை மிகைக்குமா? பாதுகாப்பானது, வளரும் நாடுகளின் நீண்டகால ஒப்பீட்டு அனுகூலத்தைப் பயன்படுத்துவதற்கு உதவுமா?

சேவைக்காப்புக்கான செலவுகளை, நேரடியாகப் பாதிக்கப்படும் கைத்தொழில்களால் மட்டும் இறுக்கப்படுவதில்லை. அது எக்கைத்தொழில்களுக்கு உள்ளிடுகைகளையும் தொழில் நுட்பத்தையும் வழங்குகிறதோ அவையும் அச்செலவை இறுப்பதிற் பங்குகொள்ளும். அத்தகைய பெருமளவிலான ''மேலதிக'' பயன்களின் விளைவுகள், அபிவிருத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தலாம். வளரும் நாடுகளின் காப்புறுதி ஒப்பந்தங்களை ஆராய்ந்த பிரெயின் ஹிண்ட்லி காப்புக் கொள்கைகள் காப்புறுதிச் செலவுகளை அதிகரிக்கச் செய்வதோடு, ஆபத்துகளுக்கெதிராக எதிர்காலத்தில் காப்புறுதி செய்யத் தக்கவர்களையும் உற்சாகமிழக்கச் செய்கிறது எனக் கண்டுள்ளார். சில உள்நாட்டு வழங்குநர்களுக்குப் பயனுள்ளதாக அமைவதன்றி, காப்புவாதம், வளரும் நாடுகளின் வெளிநாட்டு நாணயத்தைப் பெருமளவில் சேமித்திருக்கவியலாது. (இதுவே காப்புறுதிக் காப்பீட்டின் முக்கிய நோக்கமாகும்).

கிடைக்கத்தக்கதாவுள்ள வளங்களை வெளிநாடுகளின் பங்குபற்றல் விரிவடையச் செய்ய உதவுமானால் அதிலிருந்து வளரும் நாடுகள் பயனடையலாம். பெருமளவில் வளங்கள் கிடைக்குமானால் பங்குபற்றும் ஒவ்வொருக்கும் ஏற்படத்தக்க விபத்தின் அளவு சிறியதாகும். இதனால் உள்நாட்டுத்தாபனங்களின் காப்புச் செலவு குறையும். இதற்கு மாறாக, சந்தைகளை உள்நாட்டுத் தாபனங்களுக்காக ஒதுக்கிவைப்பதனால் விபத்துக்கள் சில தாபனங்கள் மீது மட்டும் குவிக்கப்படுவதோடு, செலவினமும் அதிகரிக்கிறது. அத்துடன் அளிக்கப்படத்தக்க சேவைகளின் வகையும் வரையறுக்கப்படுகிறது.

தம் சேவைத்துறையை வெளிநாட்டுப் போட்டிக்குத் திறந்து விடுவதனுல்தேசிய பாது காப்பும் இறைமையும் மூன்று வகையிற் பாதிக்கப்படலாம் என்று வளரும் நர்டுகள் அஞ்சுகின்றன. முதலாவதாக, பெருமளவில் தாராளமயமாக்கல், பாரம்பரியமாக உள்நாட்டுத் துறைகளாக இருந்து வரும் துறைகளில் வெளிநாட்டுத் தாபனங்கள் புகுவதற்கு வழிவகுக்கும். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் இழப்பதற்கு அதிகமாக இல்லாத அத்தகைய தாபனங்களைக் கட்டுப்படுத்துதல் கடினமானது. அதுவுமன்றி அவை, தேசிய நலனுக்குக் குந்தகம் விளைக்கத்தக்க தீர்மானங்களை மேற்கொள்ளலாம். பொது மக்கள் தொடர்புச் சாதனங்கள், கலைகள், பொழுதுபோக்குத் துறைகளில் வெளிநாடுகள் பங்கு பற்றுவதனுல் சமூக, கலாசார வாழ்க்கையும் பாதிக்கப்படலாம்.

இரண்டாவதாக சேவை வணிகம் தாராளமயமாக்கப்பட்டால் வெளிநாட்டு முதலீட்டின் மீதான சில கட்டுப்பாடுகளை நீக்க வேண்டிய அவசியம் ஏற்படும். தாபனங்களின் உரிமைகளைத் தடுத்தல் அல்லது வரையறுத்தல், தொலைபேசி, நிதிச் சேவைகளை அளிக்கும் கம்பெனிகளுக்குப் பெரும் பளுவாகவுள்ளது. இத்துறைகள் தாராளமயக்கமாக்கப்படவேண்டும் என்பதில் அதிக நெருக்கடி ஏற்படுத்தப்படும். ஏனெனில் உள்நாட்டுத் தாபனங்கள் எப்பொழுதும் போட்டி அடிப்படையிலேயே ஒரு சேவையை அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றன. அத்தகைய நிலைமை, வளரும் நாடுகளின் கொள்கை வகுப்பாளரிடையே இக்கட்டான சூழலை ஏற்படுத்துகிறது. ஒரு இந்திய அரசாங்க அதிகாரி கூறியதுபோல, ''கட்டுப்பாடற்ற சேவை வணிகம், கட்டுப்பாடற்ற வெளிநாட்டு முதலீட்டைக் குறிக்கிறது." இது, தேசிய இறைமையையும் பொருளாதார இலட்சியங்களையும் பாதிக்கலாம்''.

மூன்றுவதாக, அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள தாபனங்கள், பெரும் சர்வதேசப் போட்டிக்கு இலக்காகும். இதனுல் காலப் போக்கில் இவற்றுக்குப் போதிய வர்த்தகம் இல்லாமற் போகலாம் அல்லது இவற்றின் செல்வாக்குக் குறைந்து விடலாம். குறிப்பாக உயர் தொழினுட்பத்துறைகளில் அரசாங்க உரிமையுடன் வரும் அரசியல், பொருளாதாரக் கட்டுப்பாட்டை வளரும் நாடுகளின் கொள்கை வகுப்பாளர் இழக்க விரும்புவதில்லை. பிரேசிலின் தகவல்துறை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். சர்வதேச வர்த்தக முறையானது பாதுகாப்பு, போக்குவரத்துத் துறைகளில் தேசிய பாதுகாப்பு, இறைமை என்பவற்றின் தேவைகளை மதிக்கின்றது என விவாதிக்கும் அவர்கள், அத்தகைய பாதுகாப்பு உள்ளமைப்புச் சேவைகளும் அவசியமெனக் கூறுகின்றனர்.

சேவை வணிகம் தாராளமயமாக்கப்படுவதால் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி வளரும் நாடுகள் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளன. சேவைக் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துவதனுல் சட்டபூர்வமான நோக்கங்கள் நிறைவேறுகின்றன. அத்துடன் அது, நாணயக் கொள்கை முதல் நாட்டுப்பாதுகாப்பு வரையான முக்கியதேசிய நலன்களையும் காக்கின்றது. எவ்வாருயினும் பல சந்தர்ப்பங்களில் ஒழுங்குபடுத்தல் என்பது காப்புவாதத்திற்குத் திரையாக அமைந்து, வளர்ச்சிக்குத் தடைகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, அது, தொழினுட்ப இடமாற்றத்துக்கும், பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்கும் உற்சாகக் குறைவை ஏற்படுத்துகிறது.

வளரும் நாடுகள் அபிவிருத்திக்குத் தொழினுட்பம் எத்துணை அவசியம் என்பதை நன்கறியும். ஆனுல் அவற்றைப் பெறுவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் அவற்றுக்குப் பல தடைகளுண்டு. வளரும் நாடுகள் விதித்துள்ள வர்த்தக, முதலீட்டுக் கட்டுப்பாடுகளின் விளைவாக தொழினுட்ப இடமாற்றம், நேரடி வெளிநாட்டு முதலீடு, தொழினுட்ப அடிப்படையிலான இறக்குமதி என்பவற்றுக்குரிய பல வழிகள் அடைபட்டுள்ளன. நிதித்தடங்கல்கள் புதுத் தொழினுட்பங்களைப் பெற்றுக் கட்டுப்படுத்துகின்றன. தொழினுட்ப மாற்றத்தின் வேகம் காரணமாக பல கம்பெனிகள் தமது வியாபார உரிமைகளை இறுகப்பிடித்து விற்பனையைப் பெருக்கி, ஆய்வு, அபிவிருத்திச் செலவைச் சமாளிக்க வேண்டிய நிலையிலுள்ளன.

எவ்வாருயினும், அமெரிக்கா, யப்பான், ஐரோப்பா ஆகியவற்றுக்கிடையிலான போட்டி விலையைக் குறைப்பதோடு, வளரும் நாடுகள் சில உயர் தொழினுட்பப் பொருட்களதும் சேவைகளதும் ''சென்ற ஆண்டு'' மாதிரிகளைக் கொள்வனவு செய்வதற்கு வழிவகுத்துள்ளது. அண்மையில் இந்தியாவுக்கு கட்டுப்பாட்டுத் தரவுக் காளனிகள் விற்கப்பட்டமை நல்லதோர் உதாரணமாகும். பிரதான சட்டகக் காளனிகள் நான்கு வருடம் பழைமையானவையாயினும் அவை பத்தாண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்டக் காளனித் தொழினுட்பத்தை உபயோகித்தாலும், இவ்வியாபாரத்தினுல் இந்தியாவுக்கு அதன் மிக நவீன, சக்திவாய்ந்த காளனிகள் கிடைக்கும். இதனுல் பண்ணைத் தொழில், கல்வி, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முன்னேற்றம் காணப்படும்.

இவ்வாருக வளரும் நாடுகள், முரண்பட்ட பல கொள்கைகளிலிருந்து தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. அவை கடந்த காலத் தொழில் நுட்ப உபகரணங்களைக்

(31ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் தொழில் வாய்ப்புக் கொள்கைகள்

இந்திரஜித் குமாரசுவாமி

(பிரதிப் பணிப்பாளர், பொருளியல் விவகாரப்பிரிவு; நிதி, திட்டமிடல் அமைச்சு)

(சென்ற இரு இதழ்களின் தொடர்ச்சி)

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், திட்டத்தில் எடுக்கப்பட்ட அனுமானங்களை முற்றுக மாற்றின. நுகர்ச்சிச் செலவீட்டில் காணப்படும் இத்தகைய அதிகரிப்புகள், பொது முதலீட்டுச் செலவினத்தில் கணிசமான எதிர்த்தாக்கத்தினை ஏற்படுத்தியது.

பத்துவருடத் திட்டமானது, அது கைகூடாத அளவிற்கு பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனினும், இத் திட்டம் மூன்று அம்சங்களைப் பொறுத்தவரையில் ஒரு முக்கிய இடத்தினைக் கொண்டிருந்தது. முதலாவதாக, இது, நாட்டின் பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கிய முதலாவது பொருளாதாரத் திட்டமாகும். மேலும், இது மிகவும் உயர்ந்த திட்டமிடல் தொழிற்நுட்ப மட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. இரண்டாவது, சர்வதேச பொருளாதார ஒழுங்கிலுள்ள எதிர்மறை விளைவுகளிலிருந்து இலங்கையின் பொருளாதாரத்தினை பிரிப்பதற்கான முயற்சியின் அவசியத்தினை இது வலியுறுத்தியது. சர்வதேச முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள் இலங்கைப் பொருளாதாரம் இணைந்துள்ள வழியினை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவையினை அங்கீகரித்த முதல் திட்டம் இதுவாகும். இங்கு சிபார்சு செய்யப்பட்ட உபாயம் யாதெனில் இறக்குமதிப் பிரதியீடுகளுடனான கைத்தொழில் மயமாக்கம் என்பதாகும். இறுதியாக, இத்திட்டமானது, பொருளாதாரத் திட்டமிடலுக்கு தொழில் வாய்ப்பு அணுகுமுறையினைக் கொண்டுவருவதில் ஒரு சாதனையை இலங்கையில் ஏற்படுத்திற்று. இத்திட்டம் 1960க்களின் ஆரம்பத்திலேயே வழக்கிறந்த போதிலும், இது ஒரு மிக முக்கிய முன்னோடியான திட்டமாகும்.

### குறுங்கால அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டம்

குறுங்கால அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டம் என்பது, 1961/62, 1962/63, 1963/64 ஆகிய நிதி வருடங்களில் பத்து வருடத் திட்ட அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்காக முக்கியமாக தயாரிக்கப்பட்ட ஒன்ருகும். எனினும், இது தரத்தின் அடிப்படையில், ஒரு பெயர்ச்சியினைக் காட்டியது. திட்டமிடுதலில், தொழில் வாய்ப்பு உள்ளீடுகையானது, பத்துவருடத் திட்டத்தினைவிட குறிப்பிடக்கூடிய அளவு குறைவானதென இதன் கீழே விவாதிக்கப்படுகிறது.

இந் நிகழ்ச்சித் திட்டம் 5 குறிக்கோள்களைக் கொண்டதாக வுள்ளது. அவையாவன:

பொது மக்களின் சேமநலனை அதிகரித்தல், தொழில் வாய்ப்பின்மையையும், கீழுழைப்பினையும் ''இயன்றளவு துரிதமாக'' இல்லா தொழித்தல், பொருளாதாரத்தினை திசை திருப்புதல், விலைமட்டத்தினை கூடியவரையில் உறுதியாகப் பேணுதல், தேசிய வருமானத்தினை சமமாகப் பகிர்வதற்கு முயற்சி செய்தல் என்பனவாகும். இந் நிகழ்ச்சித் திட்டமானது கைத்தொழில் மயமாக்கத்திற்கே தொடர்ந்து ஊக்கம் கொடுத்தது. எனினும், இந்த முழுதளவான உபாயத்திற்குள்ளும் முதலீட்டுத் தீவிர கருத்திட்டங்கள் சார்பாகவே கணிசமானளவு பெயர்ச்சி காணப்பட்டது. எனவே இந் நிகழ்ச்சித் திட்டமானது, பத்து வருடத் திட்டத்தினைவிட குறைந்தளவு தொழில் வாய்ப்பு நோக்கம் கொண்டதாக இருக்கின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது பத்துவருடத் திட்டத்தினைவிட அதிகளவு நிச்சயமற்றதன்மையுள்ளதாகக் காணப்படுகிறது. இதில் சமச்சீர் தன்மையில் பல குறைபாடுகள் காணப்பட்டன. உற்பத்தித் தொகைகள் அநேகமாக குறிப்பிடப்படவில்லை. தனியார் துறைக்கு மிகக் குறைந்த கவனமே செலுத்தப்பட்டது. தொழில் வாய்ப்பு உருவாக்கத்திற்கான மொத்தத் தொகை குறைவாகவே இருந்தது. கணிப்பீடுகள் நிழல் விலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்; மேலும், ஊழியச் செறிவு முறைகள் பற்றி தகவல் பெறப்படவில்லை. வேலை செய்யும் மனப்போக்குகள் பற்றி ஆலோசனை செய்யப்படவில்லை; உபகுழுக்களுக்கு வேண்டிய மனித வலு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பொதுவான தொழில் நுட்ப நியமமானது, பத்துவருடத் திட்டத்திலுள்ளதை விட குறைவாகவே காணப்படுகிறது.

அமுலாக்கல் ரீதியில் நோக்கும்போது, இந் நிகழ்ச்சித் திட்டம், பத்து வருடத் திட்டத்தினைப் போன்றே அதே பிரச்சினைகளை எதிர்நோக்கியது. இதில், வெளிநாட்டுச் செலாவணி நிலைமையின் வீழ்ச்சிப் போக்கு மிக முக்கியமாகும்.

1959/60ல் சர்வதேச தொழிற் ஸ்தாபனத்தின் உதவி

யுடன் தொழில் திணைக்களம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் படி, 340,000 பேர் தொழில் அற்றவர்களாகவும், 550,000 பேர் கீழுழைப்பில் ஈடுபடுகிறவர்களாகவும், ''மேலதிக வேலைக்கு அமர்த்தப்படக் கூடியவர்களாக வும்'' உள்ளனர். தொழில் வாய்ப்பு நிலைமையானது, இன்னும் துரிதமாக பாதிக்கப்படுகின்ற தென்பதற்கு எல்லா அறிகுறியும் இங்கு காணப்படுகிறது.

''தொழில் வாய்ப்பின்மை மிகவும் பாரியளவில் அதிகரித்த சமயத்தில், நாட்டினது கொள்கை அமைப்பாளர்கள் தொழில் வாய்ப்பு உருவாக்க நடவடிக்கைகளில் காட்டிய ஆர்வம் குறைவடைந்தது, உண்மையாகவே நம்பமுடியாத ஒன்றுகவுள்ளது. இதன் தாக்கத்தினை சுருங்கக் கூறின், தொழில் வாய்ப்பின்மையின் அளவு எவ்வளவு அதிகமாக இருந்ததோ, அதற்கு மாறுக, பொருளாதாரத் திட்டமிடலில் இது மிகவுங் குறைந்த முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்தது'' எனக் கூறலாம்.

### அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1964 - 65

1964ன் ஆரம்பத்தில், தேசியத் திட்டமிடல் திணைக்களம் மூன்று வருடத்திட்ட வேலையினை ஆரம்பித்தது. எனினும், இத்தகைய எவ்வித திட்டமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்குப் பதிலாக அரசாங்கமானது 1965ன் பொதுத் தேர்தலுக்கு முன்பாக அமுல்படுத்தக் கூடிய வகையில் ஒரு திட்டத்தினை வேண்டி நின்றது. எனவே 1964-65 ஆண்டுகளை உள்ளடக்கிய ஓராண்டுத் ''திட்டம்'' தயாரிக்கப்பட்டது.

தொழில் வாய்ப்பு விடயமானது, ஒருமேலெழுந்த வாரியான கவனத்தினையே பெற்றது. இது பத்து வருடத் திட்டத்தில் காணப்பட்ட நம்பிக்கையிலிருந்து ஒரு முழுதளவான பின்னடைவைக் காட்டியது. பத்துவருடத் திட்டத்தில் தொழில் வாய்ப்பு உருவாக்கமானது, ஒரு செயற்பாட்டு முறையாக இருந்தது. அத்துடன் இத்திட்டத்தின் காலப் பகுதியில், ஊழியப்படைக்குச் சேரும் எல்லா புதியவர்களையும் ஏற்கக் கூடியவகையில் போதிய ளவு தொழில் வாய்ப்பு உருவாக்கப்படும் என்றும், தற்போது நிலவும் தொழில் வாய்ப்பின்மையைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. 1964ம் ஆண்டளவில், பாதிப்படைந்துவரும் தொழில்வாய்ப்பின்மை நிலைமை பற்றி நல்ல அறிவு இருந்த போதிலும், பொருளாதாரத் திட்டமிடலுக்கு வேண்டிய தொழில் வாய்ப்பு உள்ளிடுகையானது மிகவும் எல்லைப்பட்டதாகவே மாற்றமடைந்தது.

### இலங்கையில் திட்டமிடல் 1965 - 70

1965ல் அரசாங்கம் மாற்றமடைந்தவுடன், பல்வேறு புதிய அம்சங்களைக் கொண்ட பொருளாதாரத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. அரசியல் ரீதியாகவும், நிறுவக ரீதியாகவும் நாட்டினது திட்டமிடல் செயற்பாடு மீள ஸ்தாபிக்கப்பட்டது. திட்டமிடல் அமைச்சுப்பதவியினை பிரதம மந்திரியே வகித்து வந்தார். உண்மையான திட்டமிடல் செயற்பாடுக்குள்ளே ஒரு புதிய எண்ணக்கரு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது தற்போதைய பொருளாதார தீர்மானங்களோடு அதிகம் சார்ந்ததாக இருந்தது. முன்னைய அபிவிருத்தித் திட்டங்கள் யாவும், செயற்படுத்துவதற்கு தயாராக இருந்த விரிவான நிகழ்ச்சித் திட்டங்களினுலும், கருத்திட்டங்களினுலும் மேற்பார்வை செய்யப்படவில்லை. ஒரு புதிய நீண்ட காலத் திட்டத்தினை தயாரிப்பதைவிட, பொருளாதாரத்தின் ''நெருக்கடிப் பிரிவுகளுக்கு'' வேண்டிய செய்முறைத் திட்டங்களை தயாரிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. விரைவாக அமுல் நடாத்தக்கூடிய தன்மையினைக் கொண்ட கருத்திட்டம் சார்பான வேலையில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இத்தகைய அமைப்பினைக் கொண்ட முதலாவது திட்டம், 1966/67 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்பதாகும்.

இங்கு, பிரதான திட்டமிடலாளர்கள், அரசாங்கக் கருத்திட்டங்களிலும், அவற்றை அமுல்படுத்துவதிலும், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புகளிலுமே, இக்கால கட்டத்தில் அதிக கவனம் செலுத்தினர். பொதுவாக, கருத்திட்டங்கள் அவற்றோடு தொடர்புடைய பிரிவுகளுடனேயே ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. பிரிவுகளுக்கிடையிலான சமநிலையானது, தற்செயலாகவே இருந்தது. விவசாய அபிவிருத்திக்கு, குறிப்பாக நெற்பகுதிக்கு அதிகளவு முக்கியத்துவம் இங்கு கொடுக்கப்பட்டது. இதற்குக் காரணம், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விலையின் துரித ஏற்றமாகும். உற்பத்தி அதிகரிப்பிலும், வெளிநாட்டுச் செலாவணியுடனுன கண்டிப்பான பொருளாதாரத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. இவைகளே திட்டமிடலாளர்கள் முன்னிருந்த பிரதான குறிக்கோள்களாகும். குறுங்கால ஓட்டத்தில் ஒரு வெளிப்படையான நோக்கமாகவிருந்த தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பது இன்னும் பின்னணியிலேயே இருந்தது. கடந்த வருடங்களில் தொழில் வாய்ப்புக் குறிக்கோளுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கத் தவறியமையால் அது பயங்கர அரசியல் சிக்கல்களை ஏற்படுத்தியது. 1971ல் இடம் பெற்ற கிளர்ச்சிக்கு இதுவே முக்கிய அடிப்படைக் காரணியாக இருக்கலாம்.

### ஐந்து வருடத் திட்டம் (1972 - 76)

பாரிய சமூக, பொருளாதார நெருக்கடி நிலவிய சமயத்திலேயே ஐந்து வருடத் திட்டம் (1972 - 76) சமர்ப்பிக்கப்பட்டது. 1971ல் ஏற்பட்ட கிளர்ச்சி, நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு ஒரு அச்சுறுத்தலை

ஏற்படுத்தியது, வெளிநாட்டுச் செலாவணி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. திட்டத்திற்கு ஆதரவான கோட்பாட்டு ரீதியான ஒரு பெயர்ச்சி காணப்பட்டது.

''ஐந்து வருடத் திட்டமானது, மூலவளங்களின் அதியுச்ச அபிவிருத்தியினை அடைவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்திட்டங்களையும் தயாரிக்க முயற்சிக்கும் அதே சமயத்தில், ஒரு சோஷலிச சமூகத்தினை உருவாக்க வேண்டிய நாட்டின் கடப்பாடுடன் ஒத்துப் போகக் கூடிய ஒரு சமூகக் கட்டமைப்புக்குள்ளேயே இது மேற்கொள்ளப்பட வேண்டும்''.

''வளர்ச்சியோடு கூடிய மீள்பகிர்வினை'' அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாக இருந்தது.

இத்திட்டத்தின் குறிக்கோள்களும், உபாயமும், தரத்தினடிப்படையில் பார்க்கும்போது, முன்னைய வருடங்களில் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து வேறுபட்டவையாக உள்ளன. (கிளர்ச்சிக்குப் பிற்பாடு) தொழில் வாய்ப்பு விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மேலும், சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு தொடர்ந்தும் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. நாட்டிற்கான எந்தவொரு பொருளாதார உபாயத்திலும், விவசாய அபிவிருத்திக்கான முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்ட அதே சமயத்தில், முதலீட்டுச் செறிவு கைத்தொழில் மயமாக்கத்திற்கு மிகவும் குறைந்தளவு முக்கியத்துவமே வழங்கப்பட்டது. குறிப்பாக விவசாயத்திற்கான இறக்குமதிப் பிரதியீட்டின் முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், இத்திட்டம் ஏற்றுமதி ஊக்கத்திற்கு அழைப்பு விடுத்தது. பொதுவாக, இத்திட்டமானது மிகவும் நேரிய பொருளாதாரத்தினை நோக்கியதாக அமைந்திருந்தது.

அறுபதுக்களில், இந்நாடு, நுகர்ச்சிக்காக தனது மொத்த வருமானத்தில் சராசரியாக 88 வீதத்தினை செலவழித்து வந்தது. 1959 – 69க்கிடைப்பட்ட காலத்தில், உள்நாட்டுச் சேமிப்புக்கள், சராசரியாக, தேசிய மொத்த உற்பத்தியின் 12% ஆக இருந்த வேளையில், முதலீடானது, மொத்த தேசிய உற்பத்தியின் 17% ஆக இருந்தது. முதலீட்டுக்காக சேமிப்புக்களை உருவாக்குகின்றதும், மூலவளங்களை சுழற்சியில் ஈடுபடுத்துகின்றதுமான வரவு-செலவுத் திட்டக் கொள்கைகளுக்கான தேவை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதலீட்டுக்கு வேண்டிய மூலவளப் பற்றுக்குறையானது, குறைந்த சேமிப்பு மட்டத்தினால் மாத்திரமல்லாது, அந்நியச் செலாவணித் தீவிரப் பற்றுக்குறையினாலும் ஏற்பட்டது. அந்நியச் செலாவணி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அறிமுகஞ் செய்யப்பட்டன. ஏற்றுமதித் திசை திருப்பத்திற்கும், ஏற்றுமதி அபிவிருத்திக்கும் கூட ஒரு உபாயம் சிபார்சு செய்யப்பட்டது. இத்திட்டத்தில் இருந்த சமூகப், பொருளாதாரக் குறிக்கோள்கள் பின்வருமாறு:—

(1) பொருளாதாரத்தில், நீண்டகால வளர்ச்சிக்கு அத்தியாவசியமான கட்டமைப்பு மாற்றங்களைச் செயற்படுத்தல்.

இதன் கருத்து யாதெனில், ஏனைய கைத்தொழில்களுக்கு வேண்டிய உள்ளிடுகைகளை தரக்கூடிய அடிப்படைக் கைத்தொழில்களில் முதலீடு செய்தல், புதிய ரகப் பயிர்களைப் பயிர் செய்தல், கைத்தொழிலிலும், பாரம்பரியமற்ற பண்டங்களை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்திலும் முற்று முழுதான புதிய பிரிவுகளை ஏற்படுத்துதல் என்பனவாகும். இந்த உருமாற்றமானது, ஒரு முதலீட்டுச் செயற்பாடு மாத்திரம் அல்ல என்றும், சிறு தோட்ட விவசாயத்தில் ஈடுபாடு கொண்டதாகவும், விவசாயத்தில் இளைஞர்களை கவருவதாகவும், புதிய கைத்தொழில் இயந்திரங்களை இயக்குவதற்கு வேண்டிய உயர் வினைத்திறன் கொண்ட பணியாளர்களை பயிற்றுவிப்பதாகவும், ஒரு பெரிய ஏற்றுமதி ஊக்கத்திற்கு அவசியமான உள்ளக அமைப்பினையும், செயற்திறன்களையும் உருவாக்குகின்றதாகவும் இருக்கின்றது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

(2) சென்மதி நிலுவையில் காணப்படும் பாரிய இடைவெளி, அதிகரித்துவரும் தொழில்வாய்ப்பற்றோரின் எண்ணிக்கை, என்பவை தொடர்பாக, பொருளாதாரத்தில் அதிகரித்துவரும் சமநிலையின்மைகளை செப்பம் செய்ய வேண்டியதற்கு அவசியமான குறுங்கால நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்.

(3) அனாவசிய நுகர்ச்சியினை இல்லாதொழிப்பதன் மூலமும், மீள்பகிர்வு முறைகள் மூலமும் சமூகத்திலுள்ள கொந்தளிப்புகளைக் குறைத்தல்.

(4) வீடமைப்பு, சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல். அத்துடன், மீன், பால், முட்டைகள், பழங்கள் என்பவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலமும், மக்களுக்குத் தேவையான நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலமும் இக்குழுக்களின் போசணை மட்டங்களையும் அதிகரித்தல்.

(5) கிராமியச் சமூகத்தினை மீளவுருவாக்கும் நடைமுறைகளை எடுத்தலும், விவசாயத்தினை நவீனமயப் படுத்துவதன் மூலமும், கிராமியப் பகுதிகளில் விவசாயத்தோடு தொடர்புடைய கைத்தொழில்களை அமைப்பதன் மூலமும் இளம் சமுதாயத்தினரைக் கவருவதற்கான நடைமுறைகளை எடுத்தலும் என்பவையாகும்.

நிதிசார் முறைமையின் பற்றுக்குறை இதில் குறித்துக் காட்டப்பட்டதோடு, நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு வேண்டிய கடன் கட்டமைப்பினை ஊக்கப்படுத்த வேண்டிய தேவை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் உள்நாட்டு உள்ளிடுகைகளின் அடிப்படையில் ஊழியச் செறிவு தொழில் நுட்ப உற்பத்தி முறைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

ஐந்து வருடத் திட்டத்தின் அடிப்படையானது, பின்வரும் அம்சங்களை முக்கியமாக கொண்டிருக்கும் வகையில் அமைக்கப் பட்டது.

(அ) மிகவும் அதிகளவில் கிடைக்கக்கூடிய மூலவளமான ஊழியத்தினை அதியுச்ச அளவிற்குப் பயன்படுத்துதல்.

(ஆ) கிடைக்கக் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் அதியுச்சப் பயன்பாட்டைப் பெற வழிவகுக்கும் முதலீட்டுக் கொள்கை.

(இ) விவசாயத்தில் உடனடியான அபிவிருத்தி மூலமும், விவசாயத் திருப்பத்தின் மூலமும் உணவுப் பொருட்களின் இறக்குமதியில் குறைப்பு.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட சில கைத்தொழில்களின் கைத்தொழில் இயந்திர விரிவாக்கத்தின் மூலம் முழுதளவானதும், சிறந்ததுமான பயன்படுத்துகை, தேசிய முன்னுரிமைகளின் அடிப்படையில் புதிய கைத்தொழிற் திட்டங்களில் முதலீடு செய்தல்.

(உ) ஒரு புதிய ஏற்றுமதிப் பிரிவினை விருத்திசெய்தல்.

(ஊ) உள்ளூர் மட்டத்தில், அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், அவற்றை அமுல் படுத்துவதிலும் பொது மக்களை ஈடுபடச் செய்தல்.

இத்திட்டம், தேசியக் கொள்கைகளுக்கும், இலக்குகளுக்குமான கட்டமைப்பினை வழங்கிய அதே வேளையில், இவற்றினை அமுல் படுத்துவதற்கு பிரத்தியேகமான, விரிவான குறுங்கால நிகழ்ச்சித் திட்டங்கள் தேவையாகவிருந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நோக்கத்திற்காக விரிவான வருடாந்தத் திட்டங்கள் தயாரிப்பதற்கு யோசிக்கப்பட்டது. இவ் வருடாந்தத் திட்டம் கூட, பொதுத்துறை, தனியார் துறை ஆகியவற்றின் செலவினத்தில் முழுதளவிலான இலக்குகளையும், வெளிநாட்டுச் செலவினத்தில் முழுதளவிலான இலக்குகளையும், வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தினையும் கொண்டிருந்தது.

இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு முதலீடுகளின் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை 810,000 ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் பகுதிரீதியிலான பகுப்பு பின்வருமாறு:

இத்திட்டத்தின் காலப் பகுதியில் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள்:

| | | |
|---|---|---|
| விவசாயம் | — | 300,000 |
| கைத்தொழில் | — | 165,000 |
| நிர்மாணத்துறை | — | 60,000 |
| சேவைகள் | — | 285,000 |
| மொத்தம் | | 810,000 |

மூலம்: ஐந்தாண்டுத் திட்டம் (1972 - 1976)

தொழில் வாய்ப்பற்று இருப்போர், இத்திட்டக் காலத்தில் ஊழியப்படைக்குச் சேர்வோர் ஆகிய இரு பகுதியினரையும் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் 11 லட்சம் புதிய வாழ்க்கை வழிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று கணிப்பிடப்பட்டது. எனவே இங்கு 290,000 தொழில் வாய்ப்புக்களுக்கு குறைபாடு ஏற்பட்டது. இந்த மிகையினை இல்லாதொழிப்பதற்கு, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதியினைப் பெற்று விசேட வேலைத் திட்டங்களூடாக முயற்சி எடுக்கப்படவிருந்தது. கிராமியப் பகுதிகளின் உள்ளக அமைப்பினையும், உற்பத்தி அமைப்பினையும் இக் கருத்திட்டங்கள் பலப்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டது. சிபார்சு செய்யப்பட்ட செயல் முறைகள் பின்வருமாறு: சிறிய நீர்ப்பாசன வேலைகள், கிராமியக் குளங்களை புதுப்பித்தலும், அணைகட்டலும், காணி அபிவிருத்தி, காணிமீட்சி, காடுகளை மீள உண்டாக்குதல், மண் பாதுகாப்பு, வீதிகள் அமைத்தல், பொதுக் கிணறுகளை நிர்மாணித்தல், சமூகக் கட்டடங்களை நிர்மாணித்தல், கிராமிய வீடமைத்தல், மிருக வளர்ப்பு ஆதியன. ஆரம்ப கட்டத்திலேயே திட்டமிடலாளர்களின் கவனத்தினை ஈர்த்த, இக்கட்டடான விடயங்களில் தொழில் வாய்ப்பும் ஒன்ருகும் என்பதில் சந்தேகமேயில்லை.

முதலீட்டுத் திட்டமானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 வீத சேமிப்பு வீத அடிப்படையில் அமைக்கப்பட்டது. இது, முன்னைய பத்துவருட காலப்பகுதியில் இருந்த சராசரி 12 வீதத்திலிருந்து, கணிசமான அதிகரிப்பாகும். எல்லைச் சேமிப்பு வீதத்தினை 26% ஆக ஒருவர் கணிப்பிடும்போது இதன் இலட்சியத்தின் பரிமாணம் வெகுவாகத் தெரிகின்றது. சேமிப்பு வீதங்களினதும், முதலீட்டு வீதங்களினதும் ஆரம்ப அதிகரிப்பிற்கு மிடையிலும் உயர்ந்த வருமானங்களாகச் சேரும் பிரதிபலன்களுக்குமிடையிலும் ஒரு தவிர்க்க முடியாத பின்னடைவுள்ளது. எனவே, இத்திட்டத்தின் காலப் பகுதியின், ஆரம்ப கட்டத்தில், நுகர்ச்சியிலும், மேலதிக வரிவிதித்தலிலுமுள்ள குறுங்காலத் தடைகளின் பொறுப்புக்களை இந் நாடு ஏற்க வேண்டியிருந்தது. நன்கு விருத்தி செய்யப்பட்ட சமூக சேமநல வசதிகளையும், ஊழியப் படையில் நன்கு பலம் வாய்ந்த ஒழுங்கான பிரிவுகளையும் கொண்டுள்ள திறந்த அரசியல் முறைமை இருக்குமாயின்,

முதலீட்டினையும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் வாய்ப்பு இலக்குகளையும் அடைவது மிகமிக அரிதாகவே இருக்கும். எனினும், திட்டத்தின் ஆரம்பகாலத்திலேயே, பல்வேறு உட்காரணிகளும். வெளிக்காரணிகளும் சேர்ந்து திட்டத்தினை பழமை வாய்ந்ததாக ஆக்கும் போது, இப்பிரச்சினை ஒரு கோட்பாட்டு வாதமாகவே உருவாகின்றது.

முக்கியமான வெளிக்காரணிகள் பின்வருமாறு:-

(1) அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஏககால விரிவாக்கத்தின் நிமித்தம் உருவான உலக பணவீக்கத்தின் துரித அதிகரிப்பு.

(2) சக்தி நெருக்கடியும், எண்ணெய் விலைகளில் பாரிய தாக்கமும்.

(3) பாரதூரமான சர்வதேச அறுவடையின் நிமித்தம் உருவான தானியத் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட உணவு நெருக்கடி.

இதனால் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளினதும், உணவுப் பொருட்களினதும் விலைகள் மிக அதிகமாக அதிகரித்தன. இவ்விலை அதிகரிப்புகளின் பரிமாணத்தினை அரசாங்கம் நுகர்ச்சியாளருக்குள் செலுத்த முடியவில்லை. நுகர்ச்சிச் செலவினமானது குறைக்கப்பட முடியவில்லை. மேலும், பொதுத்துறையினரும், தனியார் துறையினரும், மிகவும் இழிவான நிலையினை அடைந்து வரும் அந்நியச் செலாவணி நிலைமை காரணமாக. பிரதான இயந்திரங்களையோ, உபகரணங்களையோ, மூலப்பொருட்களையோ இறக்குமதி செய்ய முடியவில்லை. அதாவது, இவர்கள் மிகவும் தாழ்ந்த ஆற்றற்றிறன் மட்டங்களிலேயே செயற்பட பல வந்தப்படுத்தப்பட்டார்கள் என்பது இதன் கருத்தாகும். இலாபத்தன்மையில் காணப்பட்ட விழ்ச்சி, சேமிப்புக்களில் ஒரு எதிர்விளைவைக் கொண்டிருந்தது. இப்போக்கானது விவசாயத்துறையின் (உள்நாட்டினதும், ஏற்றுமதியினதும்) மிகவும் குறைந்த செயற்பாட்டின் நிமித்தம் மேலும் பலப்படுத்தப்பட்டது. உண்மையில், திட்டத்தில் கூறப்பட்ட சேமிப்புகளினதும் முதலீட்டினதும் இலக்குகள் மிகவும் விரைவிலேயே குழப்ப நிலைமையினை அடைந்தன. எனினும் இந் நிலைமைக்கான முழுப்பொறுப்பினையும் வெளிக்காரணிகளுக்கு மாத்திரம் சொல்லமுடியாது. இத்திட்ட அமுலாக்கத்தினைப் பாதித்த பல்வேறு உட்காரணிகளும் இருக்கின்றன. கணிசமான அளவு துர்நிர்வாகமும், ஊழலும், மூலவளங்களின் விரயத்திற்கும், முறையற்ற ஒதுக்கீட்டிற்கும் வழி வகுத்தது.

இத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, சமூகத்தில் தீவிர அடிப்படை உருமாற்றத்தினை எய்த முடியவில்லை. இதனால் பல்வேறு பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காணிச் சீர்திருத்தச் சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன; கட்டாயச்சேமிப்புத் திட்டங்கள் (வருமானங்களுக்கு ஒரு உச்ச வரம்பு) அறிமுகப்படுத்தப்பட்டன; சம்பத்துக்களை மீள்பகிர்வு செய்வதற்கான நிதிசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; வீட்டுரிமைகளில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதை ஊக்கப்படுத்துவதற்காக மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஏற்படுத்தப்பட்டன. உள்ளிடுகைகளுக்கு இலகுவில் செல்லக் கூடியவகையில் பல்வேறு கிராமிய நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கிராமியச் சமூகத்தின் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்காக வங்கிக் கடன் திட்டம் விரிவாக்கப்பட்டது. (இதன் மூலம் கடன்களை இலகுவாக வழங்க முடியுமென்றும், சேமிப்புக்களை சுழற்சியில் ஈடுபடுத்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது). எனினும், எதிர்பார்க்கப்பட்ட விளைவினை, எந்தவொரு நடவடிக்கையும் எய்தவில்லை. இதற்குக் காரணம், வெளிக்காரணிகளின் மூலம் உருவான மூலவளத் தடைகள், இந் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக - பொருளாதார கருவமைப்பிலிருந்து உருவான எதிர் உட்காரணிகள் என்பனவாகும். சமூகத்திலுள்ள பலவீனமான குழுக்களின் சமப்படுத்தும் வல்லமையினை பலப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை.

இலங்கையில், தொழில் வாய்ப்புக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்து தயாரிக்கப்பட்ட திட்டம், ஐந்தாண்டுத் திட்டமாகும் (1972 - 1976). எனினும், மேலே கூறப்பட்டுள்ளது போன்று, பல தொடர்க் காரணிகள் இணைந்து இத்திட்டத்தினை அதன் ஆரம்பக் கட்டத்திலேயே செயலற்றதாக்கிவிட்டன. இத் திட்டத்தின் காலப் பகுதியில், தொழில் வாய்ப்பு நிலைமை இன்னும் மோசமடைந்தது. இந்த வருடங்களில் நிலவிய பொருளாதார ஸ்தம்பிதத்தின் காரணமாக, இது தவிர்க்க முடியாததாக இருந்தது. பொருளாதார ஸ்தம்பிதமும், பலவீனமான பொருளியற் குழுக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட மீள்பகிர்வு நடைமுறைகளின் தோல்வியும் ஆகிய இரண்டும் இணைந்து, பொதுமக்களின் பரந்த அதிருப்திக்கு வழிவகுத்தன. 1977ம் ஆண்டானது, அரசாங்கத்தில் ஒரு மாற்றத்தினையும், முற்றிலும் வேறுபட்ட பொருளியல் உபாயத்தின் அறிமுகத்தையும் கண்டது. எனினும், ஐந்தாண்டுத் திட்டமானது, போற்றத்தக்க பல நல்ல விடயங்களைக் கொண்டிருந்ததென ஒருவர் வாதிடலாம். துரதிருஷ்டமான சர்வதேச சம்பவங்களின் சேர்க்கை, அமுல் நடர்த்த வேண்டிய ஆற்றலின்மை, துர்நிர்வாகம் என்பனவே இத் திட்டத்தின் தோல்விக்குக் காரணமாகும்.

### 1977 ற்கு பின்னுள்ள காலப்பகுதி

1977 ல் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம், பொருளியல் உபாயத்தில் ஒரு வியத்தகு மாற்றத்தினை ஏற்படுத்த விழைந்தது. இலங்கையின் சமூகக் குறிகாட்டிகளின் (சமமான வருமானப்பகிர்வு, குடிசனத் தொகை வளர்ச்சி, வாழ்க்கைத் தரத்தினைப் பேணுதல் ஆகியன, தலாவீத வருமானம் உயர்வாகவுள்ள பல நாடுகளோடு ஒத்துப் போகவில்லை) மெச்சத்தக்க நிறைவேற்றுகை இருந்த போதிலும், இந்த வாழ்க்கைத் தரங்களைப் பேணக்கூடிய ஆற்றலானது, எழுபதுக்களின் நடுப்பகுதியில் நிலவிய பொருளியல் ஸ்தம்பிதத்தினால் சிதைக்கப்பட்டுவிட்டது என அநுமானிக்கப்பட்டது. நுகர்ச்சிக்கென தொடர்ச்சியாக ஒதுக்கப்படும் பாரிய அளவிலான மூலவளங்கள், பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வாய்ப்பு உருவாக்கத்திற்கும் முரண்பட்டதாக இருக்குமென்ற அடிப்படையில் புதிய கொள்கை வரையறுக்கப்பட்டது. கடந்த பல வருடகாலங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கடுமையான கட்டுப்பாட்டு முறைமைகள், விலைகளில் திரிபுகளை ஏற்படுத்தியதோடு தனியார் துறையினரின், தூண்டல்களையும். வெகுவாகக் குறைத்தது. இத்தோடு, மிகவும் துரிதமாக விரிவடைந்த பொதுத்துறை, விரயமுள்ளதாகவும், திறமையற்றதாகவும் இருந்தது. இத்தகைய நிலைமையின் ஆய்விற்கிணங்க, அரசாங்கம் ஒரு பாரிய மாற்றத்தினையுள்ளடக்கிய சீர்திருத்தத் திட்டத்தினை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது. மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாக்கும் அதேவேளையில், மூலவளங்களை நுகர்ச்சியிலிருந்து முதலீட்டிற்கு திசைதிருப்பும் முயற்சியாக, அரசாங்கமானது மானிய நிகழ்ச்சித் திட்டங்களை கணிசமான அளவு குறைத்ததுடன், அவற்றுக்கு ஒரு எல்லையினையும் வரையறுத்தது. வெறுமனே உயர்பெறுமதி நாணயத்தினை மாத்திரம் பேணி வந்த நெருக்கமான வர்த்தகக் கொடுப்பனவுக் கட்டுப்பாடுகள் குலைக்கப்பட்டன. தனியார் துறையில் காணப்பட்ட பல்வேறு தடைகளை அகற்றுவதற்கும் இது உதவியது. பொதுத் துறையினை மேலும் திறமையாக்கக்கூடிய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பல்வேறு அரச வர்த்தக தனியுரிமைகள் நீக்கப்படவிருந்ததோடு, பொதுத் துறைக்கும், தனியார் துறைக்குமிடையே ஒரு போட்டிச் சூழல் அறிமுகப்படுத்தப்பட்டது. சுருங்கக்கூறின், முதலீட்டிற்கு, அதிகளவு மூலவளங்களை வழங்கவும், சில திரிபுபட்ட கட்டுப்பாடுகளிலிருந்து பொருளாதாரத்தினை விடுவிக்கவும், மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதில் சந்தை விசைகள் முக்கிய பங்கினை வகிப்பதை அநுமதிக்கவும் இப்புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென ஒருவர் வாதிடலாம்.

ஒரு சுழற்சித் திட்ட அமைப்பிற்குள்ளே, பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாயத்தின் மூலைக்கல்லாக மூன்று பாரிய கருத்திட்டங்கள் அமைந்திருந்தன. மகாவலி அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம், பாரிய கொழும்பு நகரப் பகுதி அபிவிருத்தித் திட்டம் என்பவையே இம்மூன்று திட்டங்களாகும். கொள்கை வகுப்பாளர்களின் மனதில் வேலை இல்லாப் பிரச்சினையே தொடர்ந்தும் முன்னணியில் இருந்தது. பாரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கையில் தொழில் வாய்ப்புக் குறிக்கோளுக்கு கணிசமானளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

கடந்த பத்து வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த முதலீட்டு, உற்பத்தி நோக்கங்களையுடைய திட்டமானது, தொழில்வாய்ப்பின் சாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியின் (1981/82) நுகர்ச்சி நிதிக் கணிப்பீட்டின்படி, தொழில் வாய்ப்பின்மை வீதம் 11.8 வீதமாக இருந்தது. 1973ம் ஆண்டின் நுகர்ச்சி நிதிக் கணிப்பீடுகளின்படி 24 வீதமாகவும், 1977ல் 25.8 வீதமாகவும் இருக்குமென கணிக்கப்பட்ட இத்தொழில் வாய்ப்பின்மை வீதங்களுடன் ஒப்பிடுகையில், 1981ம் ஆண்டுக்குரிய வீதமானது சாதாகமாயுள்ளது. தொழில்வாய்ப்பின்மை, பொருளாதாரத்தின் இம் மூன்று பிரிவுகளிலும் வீழ்ச்சியடைந்தது. இம் மூன்று பிரிவுகளிலும் தொழில் வாய்ப்பின்மை வீதத்தின் வீழ்ச்சி தெரிவிப்பது யாதெனில், பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளிலும், ஊழியக் கவர்ச்சியானது அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதாகும். 1978-82 காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கையின் அபிவிருத்திப்பாங்கே இதற்குக் காரணம் எனக்கூறலாம். இத்துடன், குறிப்பாக மத்திய கிழக்கிற்குச் சென்ற கணிசமான. தொகையினாலும், தொழில் வாய்ப்பின்மை குறைக்கப்பட்டிருக்கலாம். எனவே, தொழில் வாய்ப்பு நிலைமையின் துரித அபிவிருத்திக்கு கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டு காரணிகளும் தமது பங்கினை அளித்துள்ளதாகத் தோன்றுகிறது.

அநுகூலமான செலாவணி மாற்று வீதத்துடன் கூடிய, மிகவும் தாராளமான பொருளியற் சூழ்நிலை, கணிசமானளவு முதலீட்டு ஊக்குவிப்புக்கள் ஆகியன எதிர்பாராத அளவிற்கு வெளிநாட்டுதவியினையும், வெளிநாட்டு முதலீட்டினையும் கவர்ந்ததுடன், இதன் மூலம் அவை புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் உதவியளித்தன. புடவைத்தொழில், ஆடைதயாரிப்பு, சுற்றுலாத்துறை, போக்குவரத்துத்துறை, நிர்மாணத்துறை, சில்லறை வியாபாரம் போன்ற ஊழியச் செறிவுப் பகுதி

களுக்குள், உள்நாட்டினதும், வெளிநாட்டினதும் தனியார் முதலீடுகள் கவரப்பட்டன.

கொடைகள் வடிவிலும், உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையிலும் அமைந்த பாரிய வெளிநாட்டு உதவிகள் மூலம் அமுல்படுத்தப்பட்ட பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களே, பொருளாதாரத்தின் அசைவிற்கு முக்கிய மூலவளமாக அமைந்தன. இப்பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்துடன், தனியார் துறையினரின் பொருளியல் நடவடிக்கையும், தொழில் வாய்ப்பு உருவாக்கமும் தொடர்புற்று இருந்தன.

1978 - 82 ற்கிடையிலான காலப்பகுதியில் தொழில் வாய்ப்புப் பிரச்சினையில் கணிசமான அளவு முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. 1977ம் ஆண்டின் வரவு - செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக தொழில் வாய்ப்பின்மை வீதமானது அரைவாசியாகக் குறைவடைந்தது. அக்காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள், நவீனமயப்படுத்துதலையும், முயற்சியாளர் கூட்டத்தினரையும் ஆதரிக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்கின.

1982 இலிருந்து தொழில் வாய்ப்பு உருவாக்கத்தில் காணப்பட்ட வேகமானது குறைவடைந்துள்ளது. சில பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், முற்றுப்பெறும் நிலையில் இருக்கின்றன. நிர்மாண, வர்த்தகப் பிரிவுகள் மிகவும் குறைந்த ஊக்கம் அளிப்பவையாக இருந்தன. இதன் விளைவாக மேலதிக தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளுக்கான நம்பிக்கையும் குறைந்துவிட்டன. இத்தகைய எதிர் விளைவுகளுடன், நிச்சயமற்ற பாதுகாப்பு நிலைமையும் இணைந்து இதனை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

1977 லிருந்து தொழில் வாய்ப்பு நிலையில் எய்தப்பட்ட வியத்தகு முன்னேற்றங்கள் ஸ்திரப்படுத்தப்பட்டு விருத்தி செய்யப்படவும் வேண்டும். இரண்டு வகையான கொள்கை நெறிகள் இதற்கு தேவையாகவுள்ளது. பேரண்ட மட்டத்தில் பொருளாதார அடிப்படைகள் உறுதியான நிலையில் பேணப்படவேண்டியது மிக அவசியமாகும். நிதிசார் கொள்கை, நாணயக் கொள்கை, செலாவணி மாற்று வீதக் கொள்கை ஆகியன ஒரே சீராக இருத்தல் வேண்டும். திடமான பொருளாதார, நிதி முகாமைத்துவமின்மையால், தொழில் வாய்ப்பு உருவாக்கமானது பாதிக்கப்பட முடியாது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவினங்கள், மிகவும் பாரிய அளவில் குறைவடைந்துள்ள வருமானம் (ஏற்றுமதி வரிகளிலிருந்து) என்பனவற்றின் மத்தியில், வரவு - செலவுத்திட்டப் பற்றுக் குறையினை சீர்செய்வதற்கு நிதியமைச்சர் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும். உயர்ந்த தொழில்வாய்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள, உற்பத்தித் திறனுள்ள தனியார் துறையினரின் முதலீட்டின் மூலவளங்களை, வரவு - செலவுத் திட்டத்தின் பாரிய பற்றுக்குறையானது ஏற்கனவே விரயம் செய்துவிடுகிறது. இத்தோடு, இது பணவீக்கத்தினை ஏற்படுத்துவதுடன், உயர்ந்த வட்டி வீதங்களுக்கும் வழிவகுக்கிறது.

நிதிகளுக்குரிய செலவு மிகவும் அதிகமாகவுள்ள இத்தகைய சூழ்நிலையில், பொருளாதாரத்தின் ஊழியக் கவர்ச்சி ஆற்றலை அதிகரிப்பதற்கு வேண்டிய மூலதனத்தினை உருவாக்குவது கடினமானதாகும். எனவே வரவு - செலவுத் திட்டப் பற்றுக்குறை கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதும், திடமான பேரண்டப் பொருளியல் முகாமைத்துவம் மேற்கொளளப்பட வேண்டுமென்பது மிக அத்தியாவசியமானதாகும்.

பொருத்தமான பொருளாதார அமைப்பினை உருவாக்குகையில் தொழில் வாய்ப்பு உருவாக்கத்திற்கு போதியளவு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் வரையறுக்கும் போது, தொழில் வாய்ப்பு அம்சமானது, ஒரு குறிக்கோளாக மிகவும் தெளிவான முறையில் தெரியப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு செய்யத்தவறுமிடத்து. ஏற்கனவே வேலையற்று இருப்பவர்களுக்கும், வருடாவருடம் ஊழியப்படையில் சேரும் 135,000 புதியவர்களுக்கும் தொழில் வாய்ப்பு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும்.

---

(24ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வனவு செய்யவேண்டுமா? அவற்றை வாங்க முடியும். ஆனால் அவை வளரும் நாட்டுக் கைத்தொழில்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரதிகூலமான நிலைக்குத் தள்ளிவிடும். அதுவுமன்றி அத்தகைய கொள்கையானது, ஆய்வு அபிவிருத்தித் துறையில் கிடைக்கும் வெளிப் பயன்களையும் கைக்கெட்டாததாக ஆக்கிவிடும்.

மாறாக, வர்த்தகம், முதலீடு என்பவற்றினூடாக வளரும் நாடுகள் புதிய தொழினுட்பங்களை அடைந்தால் அது பயன் தரக்கூடியதாக அமையுமா? இரண்டுக்குமிடையிலான வேறுபாடு, கருதப்படும் அபிவிருத்தி, பாதுகாப்பு பற்றிய அக்கறைக்கு ஈடானதாகுமா? வர்த்தக, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்பதற்கு இதைவிட அடிப்படையான காரணம் ஒன்றுண்டு. வளரும் நாடுகள் பலவற்றுக்கு அபிவிருத்தி நிதியம் அவசரமாகத் தேவைப்படுகிறது. காப்புவாதமானது, உத்தியோகரீதியான, தனியார் துறை மூலதனம் வருவதை ஊக்குவிப்பதில்லை.

**மாணவர் பக்கம்**

# அபிவிருத்தி என்ருல் என்ன?

உயர் வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கென இச்சிறப்பம்சப் பகுதி ஆரம்பிக்கப்படுகிறது. அவர்களது பாடங்களுடன் தொடர்புபட்ட விதத்தில் தலைப்புக்களைத் தெரிவு செய்து சுருக்கமாக அவற்றை விளங்கப்படுத்துவதே இப்பகுதியின் நோக்கமாகும். அடுத்து வரும் இதழ்களில் பல்வேறு விஷயங்கள் குறித்தும் எடுத்து விளக்க எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வம்சம் குறித்த வாசகர்களதும் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களதும் கருத்துக்களை வரவேற்கிருேம்.

''அபிவிருத்தி'' என்பது தமிழ் மொழிப் பிரயோகத்தில் புதிதாக சேர்ந்துள்ளதும், அரசியல் வாதிகளும், கல்விமான்களும், பொது மக்களும் வெவ்வேறு விதமான கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு உபயோகிப்பதுமான ஒது சொல்லாகும். எனினும், மனித சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு உதவக்கூடிய சில அபிவிருத்திக் கோட்பாட்டு சிறப்பியல்புகள் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னர் கீழைத்தேய (பௌத்த, இந்து, இஸ்லாமிய) மத நெறிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், மேலை நாடுகளில் பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஓரளவுக்கும், இருபதாம் நூற்ருண்டு நடுப்பகுதியில் பெருமளவிலும் முன்வைக்கப்பட்ட பொருளாதார கோட்பாடுகளையும், அவை தொடர்பான ஐரோப்பிய சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டே 'அபிவிருத்தி' என்ற நவீன சொற்பிரயோகமும், அதன் புதிய தோற்றமும் எழுச்சி பெற்றுள்ளன.

ஒரு புறத்தில், கார்ல் மாக்ஸ், அடம் ஸ்மித் போன்ற சிந்தனையாளர்கள் பொருளாதாரமொன்றில் நீண்ட காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்து தம் கருத்துக்களை முன்வைத்தார்கள். மறு புறத்தில், பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருப்பதனுல் (மூலவளங்களின் வழங்கல் = ஊழியத் தேவை) வளர்ச்சி என்பது பொருளாதாரத்துடன் அவ்வளவு சம்பந்தமுடையதல்லவென்று வாதிக்கப்பட்டது. எனினும், கேன்ஸ் முன்வைத்த கோட்பாடுகளும், தர்க்க நியாயங்களும் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டின. எனவே, அபிவிருத்தி தொடர்பான பிந்திய கால விவாதங்கள் மேற்கத்தைய உலகின் வளர்ச்சிக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. தற்காலத்தில் 'அபிவிருத்தி' என்று பிரயோகிக்கப்படும் வார்த்தை இந்த சரித்திரப் பின்னணியிலிருந்து வளர்ச்சியடைந்து வந்ததாகும்.

அபிவிருத்தி, வளர்ச்சி ஆகிய இரு சொற்களையும் பலர் ஒன்ருகப் போட்டு குழப்பிக்கொண்டமையாலேயே அபிவிருத்தி தொடர்பாக விவாதத்துக்குரிய பல முரண்பாடுகள் தோன்றின. ஆரம்பத்தில், 'வளர்ச்சி' தொடர்பான கருத்துக்களை முன்வைத்த பொருளியலறிஞர்கள், வளர்ச்சி, அபிவிருத்தி என்ற இரு சொற்களும் ஒரே பொருளையே குறிக்கின்றன என்ற அடிப்படையில் தமது கோட்பாடுகளை வகுத்தனர்.

இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கு பின்னர், பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் பொருளாதார ஒடுக்கு முறைகளை ஒழிக்க முடியுமென பொருளியலறிஞர்கள் வாதிட்டனர். இவர்களில் சய்மன் குஸ்னெட் என்பார் வளர்ச்சி ஏற்படும் ஆரம்ப காலத்தில் வருமான இடைவெளிகள் காணப்படினும் பின்னர் அவை குறைந்து விடும் என்று கூறினர். எனினும், வளர்ச்சியடைந்து வரும் பல நாடுகளில் அதற்கு சமமான வேகத்தில் வறுமை ஒழியாததனுலும், வருமான இடைவெளிகள் தீவிரமாக அதிகரித்து வருவதனுலும் வளர்ச்சி தொடர்பான கோட்பாட்டின் குறைபாடுகள் கண்டனத்துக்குள்ளாயின. வளர்ச்சி காரணமாக சந்தைச் சக்திகள் விருத்தியடைதல், ஊழியத்துக்கான கேள்வியதிகரிப்பு, சம்பள மட்டம் உயர்தல் போன்ற நலன்கள் கிட்டிய போதிலும் அவை நியாயமான விதத்தில் பகிரப்படுவதில்லை. இதற்குப் பதிலாக வருமானம் சிறு குழுவொன்றுக்கிடையே ஒன்று திரண்டிருத்தல் முக்கியமான சிக்கலொன்ருக இருந்தது. எய்தப்பட்ட வளர்ச்சியை விடவும் கூடிய வேகத்தில் சனத்தொகை அதிகரிப்பும், வேலையின்மையும், வறுமையும் பெருகியமையால் அபிவிருத்தி என்ற பதத்தின் ஆள்புல எல்லையை மேலும் விஸ்தரிக்க வேண்டியிருந்தது.

அபிவிருத்தி (Dev.) = வளர்ச்சி (Growth) + மாற்றம் (Change)

1970-களின் தொடராண்டுகளின் போது அபிவிருத்தி தொடர்பான கோட்பாடு மேலும் விரிவாக்கப்பட்டு, வருமான மீள் பகிர்வு மூலம் வருமான இடைவெளியைக் குறைப்பதற்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் அபிவிருத்தியை இனங்காணும்போது மூன்று முக்கிய காரணிகளில் கவனஞ் செலுத்தப்பட்டது. (1) வறுமையை ஒழித்தல், (2) வேலையின்மையை